REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 செப்டெம்பர் 14 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 88 இல. 218 | September 14,Monday, 2020 | 24 பக்கங்கள் | 30/-



உங்கள் அபிமான மாத இதழ்
வானவில் கேட்டு வாங்குங்கள்...
செப்டெம்பர் மாத இதழ்!
வாசிக்க எக்கச்சக்கமான விடயங்கள் கொட்டிக் கிடப்பது வானவில்லில் மட்டுமே!


தமிழ்க் கட்சிகள் சிலவற்றின் உறுப்பினர்கள் அடங்கலாக

# 20 ஆவது திருத்தத்திற்கு 15 எதிரணி உறுப்பினர்கள் ஆதரவளிக்க இணக்கம்

## அரச தரப்பின் முக்கிய அமைச்சர் உறுதி

பாராளுமன்றத்தில் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு 15 எதிரணி உறுப்பினர்கள் ஆதரவளிக்க இணக்கம் தெரிவித்துள்ளதோடு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சில தமிழ் கட்சிகளின் உறுப்பினர்களும் இதில் அடங்குவதாக தெரிய வருகின்றது.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தில் 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவது சம்பந்தமாக கருத்து தெரிவித்த அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

எதிர்க்கட்சியை சேர்ந்த இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் உத்தியோகபூர்வமற்ற சந்திப்புகளில் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கத்திற்கு வந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது சம்பந்தமாக எதிர்க்கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தனியாக சில சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் மக்கள் பெரும்பான்மை ஆணையை வழங்கியுள்ளதால் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற இணக்கப்பாட்டுக்கு இவர்கள் வந்துள்ளனர்.




கொழும்பு சாஹிராக் கல்லூரியின் பழைய மாணவரான நீதி அமைச்சர் அலி சப்ரி கௌரவிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் கல்லூரியின் கபூர் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கல்லூரியின் அதிபர் ரிஸ்வி மரிக்கார், நீதி அமைச்சர் அலி சப்ரிக்கு நினைவுப் பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: ருஷைய்க் பாரூக்)

20 ஆவது அரசியலமைப்பு திருத்தம்;

## அமைச்சர் பீரிஸ் தலைமையில் ஆய்வு செய்ய விசேட குழு

### நாளை பிரதமரிடம் அறிக்கை சமர்ப்பிக்கும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில் ஆராய விசேட குழுவொன்றை பிரதமர் மஹிந்த ராஜபக்ச நியமித்துள்ளார்.

கல்வியமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தலைமையில் இக்குழு செயற்படவுள்ளதுடன் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள்உள்ளிட்ட ஒன்பது பேர் அக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். கல்வியமைச்சர் பேராசிரியர்


06

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணை நாளை;

## விக்னேஸ்வரன் மீதான வழக்கை வாபஸ் பெறுமாறு வேண்டுகோள்

### டெனீஸ்வரனிடம் பல தரப்பினரும் கோரிக்கை





முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு எதிராக சட்டத்தரணி டெனிஸ்வரன் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை மீளப் பெறுமாறு அரசியல் அவதானிகள், தமிழ் தேசிய ஆர்வலர்கள் மற்றும் தமிழ் சட்டத்தரணிகள் பலர் அவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

06

அதியுயர் சபையில் அனுதாப உரை; ஆறுதல் தெரிவிப்பு;

## அமரர் ஆறுமுகன் குடும்பம் சார்பில் செந்தில் நன்றி கூறல்



அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்கு அதியுயர் சபையில் அனுதாபம் தெரிவித்து உரையாற்றிய அதேபோல் எங்களுக்கு ஆறுதல் கூறிய அனைத்து அரசியல் பிரமுகர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், பிரதமரின் பெருந்தோட்ட இணைப்பாளருமான செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மறைந்த தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் (11) ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

அனுதாபம் தெரிவித்து உரையாற்றிய ஆளும், எதிரணி

06



மன்னார் இந்து குருமார் பேரவையின் ஏற்பாட்டில் இந்து எழுச்சி மாநாடும், இந்து குருமார் பேரவையின் 25 ஆவது ஆண்டு விழாவும் நேற்று காலை மன்னார் பிரதான பாலத்தடியில் இருந்து ஊர்வலத்துடன் ஆரம்பமான போது... (படம்: மன்னார் குறூப் நிருபர்)

கட்சி சார்ந்த சர்ச்சைகளில் காலத்தை கழிக்கும் TNA;

## இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்கு அபிவிருத்தியே மிகவும் அவசியம்

### வடக்கு, கிழக்கு தமிழர் நிலை குறித்து அமைச்சர் வியாழேந்திரன்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் இருப்பே கேள்விக்குறியாகி உள்ள நிலையில் முதலில் அந்த இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

அபிவிருத்தி சார்ந்த விடயங்கள் முன்னெடுக்கப்படும் போது அவர்களின் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கு அது வாய்ப்பாகிறது என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சராக வடக்குகிழக்கு தமிழ் மக்களுக்காக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; தமிழ் தேசிய கூட்டமைப்பு

06



## மன்னார் ரயில் நிலையம் 14 நாட்களுக்கு மூடல்

### ஊழியர்கள் அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு

**மன்னார் குறூப் நிருபர்**



மன்னார் பிரதான புகையிரத நிலைய பகுதி கொரோனா பரவல் அச்சம் காரணமாக நேற்று முதல் 14 நாட்கள் மூடப்பட்டுள்ளதுடன் குறித்த புகையிரத நிலைய ஊழியர்களும் பாதுகாப்பு காரணங்களுக்காக புகையிரத நிலையத்திலே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

06


மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நபர் மண்சரிவில் சிக்கி உயிரிழப்பு 03
மஸ்கெலியாவில் சட்டவிரோதமாக ஈடுபட்டவராம்


## தீப்பிடித்த நியூ டயமன் கப்பல் கப்டனிடம் CID வாக்குமூலம்

### காலியில் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பிவைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கிழக்கில் பாரிய தீ அனர்த்தத்திற்குள்ளான நியூ டயமன் எரிபொருள் கப்பலின் கெப்டனிடம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

அவரிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குமூலம் தொடர்பில் இன்றைய தினம் நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைக்கவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நியூ டயமன் கப்பல் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன அண்மையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது .

06

முஸ்லிம் மக்கள் எமது எதிரிகள் அல்லர்;

## தமிழ் மக்களுக்காக எனது உயிரையும் கொடுப்பேன்

### அம்பாறையில் கருணா அம்மான்



முஸ்லிம் மக்கள் எமது எதிரிகள் அல்லர். எதிர்வரும் காலங்களில் தமிழ் மக்களுக்காக உயிரை கொடுத்து உரிமைகளை பெற்றுக்கொடுப்பேன் என முன்னாள் பிரதியமைச்சர் (கருணா அம்மான்) விநாயகமூர்த்தி முரளிதரன் கூறினார்.

அம்பாறை, கல்முனை பகுதியில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

06



ஆறுமுகன் ஐயாவின் அனுதாப பிரேரணையில் முற்போக்கான கூட்டணியினர் ஒருத்தரையும் காணலையே.... இறுதிச் சடங்கில் அவையள் ஒருத்தரையும் பேச விடலையாம் அதுதான்......
அப்பாவிகளா, பழிக்குப் பழியா!!!

கட்சியின் கட்டுக்கோப்பு மீறல்;தன்னிச்சை முடிவுகள்;

## தமிழரசுக் கட்சியின் இன்றைய பின்னடைவுக்கு காரணம் யார்?

### சி.வி.கேவுக்கு சட்டத்தரணி கே.வி.தவராசா கடிதம்



கட்சியின் கட்டுக்கோப்பை மீறி, தன்னிச்சையாக மேற்கொண்ட தீர்மானங்களினால், கடந்த தேர்தலில் வாக்குகளை இழக்க நேரிட்டதாக தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் பதவியிலிருந்து எம்.ஏ சுமந்திரன் நீக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின்

06

## UNP பிரதித் தலைவர் தெரிவு ரணில் தலைமையில் இன்று



ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவரை தெரிவு செய்வதற்காக செயற்குழு கூடவுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் கூறியுள்ளார். இக்கூட்டம் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இன்று காலை 9 மணிக்கு கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில்

06

## சுமந்திரன், ஸ்ரீதரன் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்

### முறைப்பாடுகளுக்கு CVK விளக்கம்



பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் ஸ்ரீதரன் ஆகியோர் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அது தொடர்பில் ஒழுங்கு நடவடிக்கைக் குழு விரைவில் தீர்மானம் எடுக்கும் எனவும் தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் சி.வி. கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவர், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, இலங்கை தமிழரசுக் கட்சியில் இருந்து நீக்கப்பட வேண்டியவர் எம்.ஏ.சுமந்திரன் என கட்சியின் தலைமைக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

இந்நிலையில், இவ்விடயம் தொடர்பாக நேற்று

06

### தலிபான்களுடன் அமைதிப் பேச்சு:

# மனிதாபிமான யுத்த நிறுத்தத்திற்கு ஆப்கானிஸ்தான் அரசு அழைப்பு

ஆப்கான் அரசாங்கம் மற்றும் தலிபான்களுக்கு இடையே கட்டாரில் அமைதிப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகி இருக்கும் நிலையில், மனிதாபிமான யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு ஆப்கான் அரசு அழைப்பு விடுத்துள்ளது.

போரில் எந்த வெற்றியாளரும் இல்லை என்று அரச தரப்பு பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவரான அப்துல்லா அப்துல்லா வலிறுத்தியுள்ளார்.

இந்த யுத்த நிறுத்தம் பற்றி தலிபான்கள் எந்த கருத்தும் வெளியிடவில்லை. அதற்கு பதில் ஆப்கான் இஸ்லாமிய சட்டத்தின் கீழ் வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

இரு தரப்பும் உடன்பாடு ஒன்றுக்கு வருவதை ஊக்குவித்திருக்கும் அமெரிக்கா, அவர்கள் வெற்றி பெறுவதை முழு உலகும் எதிர்பார்த்துள்ளது என்றது. ஆப்கானில் நான்கு தசாப்தங்களாக இடம்பெற்று வரும் போரில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.




இந்நிலையில் ஆப்கான் மீது அமெரிக்கா படையெடுப்பதற்கு பின்னணியாக இருந்த செப்டெம்பர் 11 தாக்குதலின் 19 ஆவது ஆண்டு நிறைவு தினத்திற்கு ஒரு நாள் கழித்து கடந்த சனிக்கிழமையே ஆப்கான் அரசு மற்றும் தலிபான்களுக்கு இடையிலான வரலாற்று முக்கியம் வாய்ந்த பேச்சுவார்த்தை ஆரம்பமானது.

ஆப்கான் போர் அமெரிக்க வரலாற்றில் அந்நாடு ஈடுபடும் மிக நீண்ட போராக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தலிபான்கள் மற்றும் ஆப்கான் பிரதிநிதிகளுக்கு இடையே இடம்பெறும் முதலாவது நேரடி பேச்சுவார்த்தையாக இது உள்ளது. இதுவரை காலமும் ஆப்கான் அரசை அமெரிக்காவின் கைப்பாவை என்று கூறிவந்த தலிபான்கள் அரசுடன் பேசுவதை நிராகரித்து வந்தனர்.

எனினும் ஆப்கானில் தொடர்ந்தும் மோதல் இடம்பெற்று வருவதோடு பொதுமக்கள் பலரும் கொல்லப்பட்டுள்ளனர்.

# நிலவின் வளங்களை பெற நாசா அழைப்பு



நிலவில் உள்ள வளங்களைக் கொண்டுவரும் நிறுவனங்களுக்குத் தகுந்த தொகை வழங்கப்படும் என்று நாசா எனப்படும் அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையம் கூறியுள்ளது.

நிலவில் இருக்கும் பாறைக் கற்கள், மண், இதர கனிமப் பொருட்களை வாங்குவதற்கு நாசா திட்டமிட்டுள்ளது.

தனியார் நிறுவனங்கள் நிலவிற்கு இயந்திர மனிதக் கருவிகளை அனுப்பி அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள ஊக்குவிப்பது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

நிறுவனங்களிடமிருந்து வாங்கப்படும் பொருட்கள் தனது சொத்தாகிவிடும் என்று நாசா குறிப்பிட்டது.

நாசாவின் ஆர்டெமிஸ் திட்டத்தின் கீழ் 2024ஆம் ஆண்டிற்குள் அமெரிக்க விண்வெளி வீரர்கள் மீண்டும் நிலவில் கால்பதிக்கவேண்டும் என்பது இலக்காக உள்ளது. அப்போது நிலவிலிருந்து மேலும் வளங்களைத் திரட்ட வாய்ப்புள்ளதாக நாசா தெரிவித்தது.

# பஹ்ரைன்–இஸ்ரேல் உறவை எதிர்த்து பலஸ்தீனர் பேரணி

இரு வளைகுடா நாடுகள் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்தியதற்கு எதிர்ப்பு வெளியிட்டு காசாவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பேரணியில் இஸ்ரேல், அமெரிக்கா, பஹ்ரைன் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத் தலைவர்களின் படங்கள் எரிக்கப்பட்டன.

ஐக்கிய அரபு இராச்சியத்தை அடுத்து இரண்டாவது வளைகுடா நாடாக பஹ்ரைன் கடந்த வெள்ளிக்கிழமை இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்தும் உடன்பாட்டை எட்டியது. இந்த நகர்வு பலஸ்தீனர்களை மேலும் தனிமைப்படுத்துவதாக பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் காசாவில் ஆட்சியில் உள்ள ஹமாஸ் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஒரு சில டஜன் மக்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு, பஹ்ரைன் மன்னர் பின் இசா அல் கலிபா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபூதாபி முடிக்குரிய இளவரசர் செய்க் முஹமது பின் செயித் அல் நெயானின் படங்கள் தீவைக்கப்பட்டன.



எனினும் இந்த இராஜதந்திர முன்னெடுப்பு மத்திய கிழக்கில் அமைதிக்கு வழிவகுக்கும் என்று அமெரிக்கா, இஸ்ரேல், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் பஹ்ரைன் வலியுறுத்தியுள்ளன. ஆனால் இதனை ஒரு துரோகச்செயல் என்று பலஸ்தீனர்கள் கூறி வருகின்றனர்.

ஆக்கிரமிப்பு நிலங்களில் இருந்து இஸ்ரேல் வெளியேறுவது மற்றும் பலஸ்தீன நாடு ஒன்றை அங்கீகரிப்பதில் ஒன்றிணைந்த அரபு நடவடிக்கை ஒன்று பற்றியே பலஸ்தீனர்கள் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றனர்.

வளைகுடா நாடுகளின் இந்த இராஜதந்திர நகர்வுக்கு எதிராக கடும் அரசியல் பிளவுக்கு மத்தியிலும் பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸின் பலஸ்தீன அதிகார சபை மற்றும் ஹமாஸ் அமைப்பு ஒருமித்த நிலைப்பாட்டில் உள்ளன.

# ஈரான் மல்யுத்த வீரர் தூக்கில் இடப்பட்டார்

சர்வதேச கோரிக்கைகளை மீறு மல்யுத்த வீரர் ஒருவருக்கு ஈரான் மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளது.

2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது பாதுகாப்பு வீரர் ஒருவரை கொலை செய்ததற்காகவே 27 வயதான நவீட் அப்காரிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. தான் சித்திரவதை செய்யப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



இந்நிலையில் அப்காரி தூக்கிலிடப்பட்டது போலித்தனமான நீதி என்று மனித உரிமை அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

அப்காரி உரையற்றும் வீடியோ ஒன்றையும் மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ளது. அதில், "ஒருவேளை நான் தூக்கிலிடப்பட்டால் நான் ஓர் அப்பாவி என்பதையும் இதற்கு எதிராக முழு பலத்தோடு போராடிய போதிலும் தூக்கிலிடப்பட்டேன் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். தெற்கு நகரான சிராசில் தூக்கிலிடப்பட்டு அப்காரி மீதான மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானிய சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட மரண தண்டனைக்கு முன்னர் தமது குடும்பத்தினரை பார்ப்பதில் இருந்து அவர் தடுக்கப்பட்டதாக அவரது வழக்கறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

உலகெங்கும் உள்ள 85000 விளையாட்டு வீரர்களை உள்ளடக்கிய உலக விளையாட்டு வீரர்கள் சம்மேளனம் உட்பட உலகெங்கும் அஸ்காரியின் மரண தண்டனையை தடுக்கும் முயற்சிகள் தீவிரமாக இடம்பெற்றன. "அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் மட்டுமே மல்யுத்த வீரர் பங்கேற்றார்" என்று கூறிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பும் அவருக்கு கருணை கோரியிருந்தார்.

ஈரானின் தேசிய அளவிலான எண்ணற்ற மல்யுத்த போட்டிகளில் சம்பியன் பட்டம் வென்றவரான அப்காரி அந்த நாடு முழுவதும் மிகவும் நன்றாக அறியப்பட்ட விளையாட்டு வீரராக உள்ளார்.

## கொங்கோவில் தங்க சுரங்கம் சரிந்ததில் 50 பேர் உயிரிழப்பு



கொங்கோவில் தங்கச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட நிலச்சரிவில் குறைந்தது 50 பேர் உயிரிழந்திருப்பதாக அஞ்சப்படுகிறது.

தெற்கு கிவு மாகாணத்தின் கமிடுகா என்ற சிறு நகரத்தில் கடும் மழைக்கு மத்தியிலேயே இந்த நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த அனர்த்தத்தில் இளைஞர்களை பெரும்பான்மையாகக் கொண்ட சுமார் 50 பேர் உயிரிழந்திருக்கக் கூடும் என்று மாகாண ஆளுநர் தியோ நிவாபிஜே குறிப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான விபரம் உறுதியாகாத நிலையில் உடல்களை தேடும் பணியில் உள்ளூர் மக்கள் அங்கு நிலத்தை தோண்டி வருகின்றனர். இதுவரை ஒருவரின் உடல் மாத்திரமே கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக குடியிருப்பாளர் ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். கடும் மழை காரணமாக சுரங்கத்திற்கு அருகில் இருக்கும் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பட்டுள்ளார். கொங்கோவில் தற்காலிக சுரங்கங்களில் இவ்வாறான விபத்துகள் மற்றும் உயிரிழப்புகள் இடம்பெறுவது வழக்கமான ஒன்றாக உள்ளது. கடந்த 2019 ஜூன் மாதம் செம்புச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட நிலச்சரிவில் 39 பேர் உயிரிழந்தனர்.

## அமெரிக்க காட்டுத் தீ: உயிரிழப்பு அதிகரிப்பு



அமெரிக்காவின் மேற்குக் கரை மாநிலங்கள் எங்கும் பரவி இருக்கும் கடும் காட்டுத் தீயினால் 30க்கும் அதிகமானோர் உயிரிழந்திருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஒரேகன் மாநிலத்தில் மாத்திரம் பல டஜன் பேர் காணாமல்போயிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

ஒரேகன், கலிபோர்னியா மற்றும் வொசிங்டன் ஆகிய மாநிலங்களில் கட்டுக்கடங்காது தீ பரவி வருவதோடு இதனால் மில்லியன் கணக்கான நிலங்கள் மற்றும் ஆயிரக்கணக்கான வீடுகள் அழிந்துள்ளன.

ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். இந்தக் காட்டுத் தீயினால் ஏற்பட்டிருக்கு புகையால் ஒரேகனின் மிகப் பெரிய நகரான போர்ட்லாண்ட் உலகின் மோசமான காற்று மாசு கொண்ட பகுதியாக மாறியுள்ளது.

தவிர சான் பிரான்சிஸ்கோ மற்றும் சியாட்டிலும் புகை சூழ்ந்துள்ளது. ஒரேகனில் 16 மிகப்பெரிய காட்டுத் தீச் சம்பவங்களை கட்டுப்படுத்த தீயணைப்பு வீரர்கள் போராடி வரும் நிலையில் 40,000 பேர் வரை வெளியேற்றப்பட்டுள்ளனர்.

# ஒக்ஸ்போர்ட் தடுப்பு மருந்து சோதனை மீண்டும் ஆரம்பம்




கொரோனா வைரஸ் தொற்றுக்கான தடுப்பு மருந்துச் சோதனையை மீண்டும் ஆரம்பித்திருப்பதாக அஸ்ட்ராசெனகா நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் ஒழுங்குமுறை ஆணையத்திடம் உரிய அனுமதி பெற்று அதைத் தொடர்வதாக அந் நிறுவனம் கூறியது. ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துடன் இணைந்து அஸ்ட்ராசெனகா நிறுவனம் தடுப்பு மருந்துப் பரிசோதனையில் ஈடுபட்டு வருகிறது.

தடுப்பு மருந்துச் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட தொண்டூழியர் ஒருவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் அது இடையில் நிறுத்தப்பட்டது.

மீண்டும் பரிசோதனையை தொடர்வது பாதுகாப்பானது என்று சுயேட்சைக் குழு உறுதிப்படுத்தியதாக அந்த நிறுவனம் கூறியது. கொரோனா வைரஸ் தொற்றுக்காக உலகில் 9 மருந்துகள் சோதிக்கப்படுகின்றன. அஸ்ட்ராசெனகா நிறுவனத்தின் மருந்து அவற்றுள் ஒன்று. அது 3ஆம் கட்டமாக மனிதர்களிடம் பரிசோதிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு இறுதியிலோ, அடுத்த ஆண்டு ஆரம்பித்திலோ தடுப்பு மருந்து தயாராகி விடும் என்று அஸ்ட்ராசெனகா தெரிவித்துள்ளது.

# காப்புறுதிக்காக கையை துண்டித்தவருக்கு சிறை

ஸ்லோவேனியாவில் காப்புறுதி மூலம் பெருந்தொகையைப் பெறுவதற்காகக் கையைத் துண்டாக வெட்டிக்கொண்ட பெண்ணுக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

22 வயதான ஜுலிஜா என்ற அந்தப் பெண் விபத்தில் நிரந்தரமாக உடல் குறைக்கு ஆளானால் சுமார் 470,000 டொலர் காப்புறுதித் தொகை பெறுவதற்கான திட்டத்தில் கடந்த ஆண்டு சேர்ந்தார்.

அதன் பின்னர் அவர் மூன்று பேருடன் சேர்ந்து விபத்தில் சிக்கியதுபோல் தமது கையைத் துண்டாக வெட்டிக்கொண்டார். துண்டான கையை வேண்டுமென்றே சம்பவ இடத்திலேயே விட்டுவிட்டு மருத்துவமனைக்குச் சென்றனர்.

ஆனால் அதிகாரிகள் விரைவாகச் செயல்பட்டு பெண்ணின் கையைக் கண்டுபிடித்து மீண்டும் இணைத்தனர். அதன் பின்னர் நடத்தப்பட்ட விசாரணையில் பெண் மோசடி வேலையில் ஈடுபட்டது வெளிச்சத்திற்கு வந்தது.

பெண்ணுக்கு உதவியாக இருந்த அவரது 30 வயது காதலனுக்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஸ்லோவேனியாவின் எஸ்.டீ.ஏ செய்தி நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டது.



12ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை
தொழுகை நேரம்
சுபஹ் - 04.46
லுஹர் - 12.08
அஸர் - 03.14
மஃரிப் - 06.13
இஷா - 07.23

2020 செப்டெம்பர் 14 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN

பக்கம் 3

இன்றைய சுபதினம்
ராகுகாலம் : காலை : 7.30 - 9.00வரை
சுபநேரம் : காலை : 6.00 - 7.30வரை
சார்வரி வருடம் ஆவணி 29
யோகம்: சித்தயோகம்
நட்சத்திரம்: பூசம் பகல் 1.41
திதி: துவாதசி

தினகரன் விளம்பரம் 0112429367 விற்பனை பிரிவு 0112429444, 0112429378 ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

இந்திய மீனவர்களின் எல்லை மீறல்;

## வடமராட்சி மீனவர்கள் இன்று மௌன கவனயீர்ப்பு போராட்டம்

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதனால் மீனவர்களது வாழ்வாதாரம் பாதிப்பு, தொழில் உபகரணங்கள் நாசம் ஆகியவற்றைக் கண்டித்து வடமராட்சி மீனவர்கள் மௌன கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை இன்று முன்னெடுக்கின்றனர்.

வடமராட்சிக் கடற்பரப்பில் கடந்த சில தினங்களாக இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கரையில் இருந்து சுமார் ஒன்பது கடல் மைல் தூரத்தில் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். தடை செய்யப்பட்ட டோலரை பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் வடமராட்சி மீனவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. கடலில் போடப்படும் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகளை அறுத்து நாசம் செய்து வருகின்றனர்.

கடந்த மூன்று நாட்களாக மிக அதிகளவில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் இடம்பெற்று வருகிறது. இதனைக் கண்டித்து வடமராட்சி மீனவர்கள், வாயை மூடிக் கட்டி மௌன கவனயீர்ப்பு ஊர்வலம் ஒன்றை இன்று நடத்துகின்றனர்.

நல்லூர் முன்றலில் இருந்து காலை பத்து மணிக்கு ஆரம்பமாகும் இந்த மௌன கவனயீர்ப்பு பேரணியானது, இந்தியத் தூதரகத்தைச் சென்றடைந்து அங்கு இந்தியத் துணைத் தூதரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்து, இந்திய மீனவர்களது அத்துமீறல் தொடர்பில் தெரியப்படுத்தி, இதனால் தமது வாழ்வாதாரப் பாதிப்பு மற்றும் உடமைகள் சேதமாக்கப்படுவது தொடர்பில் எடுத்துக் கூறி எல்லை தாண்டுவதை தடுத்து நிறுத்துமாறு துணைத் தூதுவரிடம் கோரவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து நீரியல் வளத்துறை அமைச்சரின் அலுவலகத்திற்குச் சென்று, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் ஒன்றையும் கையளிப்பர்.

பின்னர் நீரியல் வளத்துறை திணைக்களம், மாவட்டச் செயலகம் இறுதியாக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்குச் சென்று ஆளுநருக்கு மகஜர் கையளித்து தமது போராட்டத்தை நிறைவு செய்வர்.

வடமராட்சி வடக்கு மீனவ சங்கங்கள், ஒன்றுகூடி நடத்திய கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் வ.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

## மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நபர் மண்சரிவில் சிக்கி உயிரிழப்பு

மஸ்கெலியாவில் சம்பவம்



மஸ்கெலியாவில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டவர் மண்சரிவில் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் ப்ளும்பீல்ட் தேயிலைத் தோட்டத்தில் நடந்துள்ளது.

குறித்த நபர் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்தபோது மண் மேடு சரிந்து விழுந்ததிலே அவர் உயிரிழந்துள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர் மஸ்கெலியா பிரவுன்ஸ்வீக் பிரிவுக்குட்பட்ட ப்ளும்பீல்ட் தோட்டத்தைச் சேர்ந்த 29 வயதுடைய சுப்பிரமணியம் அமிலச்சந்திரன் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## நாணயமாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 |
| குவைத் டினார் | 603.09 |
| ஓமான் ரியால் | 483.42 |
| கட்டார் ரியால் | 50.73 |
| சவூதி ரியால் | 49.54 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

வாகன நெரிசலை கட்டுப்படுத்த;

## வழித்தடங்கள் தொடர்பான சட்டம் இன்று முதல் மீண்டும் நடைமுறையில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வாகன நெரிசல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் வழிப்பாதைகள் தொடர்பான வீதிச் சட்டம் இன்று முதல் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அதற்கிணங்க நான்கு வீதிகள் மூலம் இந்த வழிப்பாதைகள் தொடர்பான சட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாக பொலிஸ் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பான பணிப்பாளர் இந்திக்க ஹப்பு கொட தெரிவித்தார்.

அதற்கிணங்க வழிப்பாதைகள் தொடர்பான நீதி சட்டத்தை முறையாக கடைப்பிடிக்காத அனைத்து சாரதிகளுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அது தொடர்பில் நாட்டில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ள மேற்படி செயற்திட்டம் தொடர்பான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை நேற்று கொழும்பின் சில பகுதிகளில் இடம்பெற்றதுடன் சில வீதிகளில் அதற்கான ஒத்திகைகளும் இடம்பெற்றன.(ஸ)

## தமிழரசுக் கட்சியின் புதிய செயலர் பதவி கிழக்கிலிருந்தே! -சி.வி.கே.சிவஞானம்

தமிழரசுக் கட்சியின் புதிய செயலாளர் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்பவராகவே இருக்க வேண்டும் என வட மாகாண சபையின் அவைத் தலைவரும் தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஒருவரை நியமிப்பதே பொருத்தமானதாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் செயலாளர் பதவி தொடர்பாக ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

தமிழரசுக் கட்சியின் செயலாளராக இருந்த துரைராஜாசிங்கம் அண்மையில் தனது பதவியில் இருந்து விலகுவதாக கட்சிக்கு எழுத்து மூலமாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி தொடர்பாக பல கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன.எனினும் யாரை நியமிப்பது என கட்சி கூடி தீர்மானிக்கும்.

தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளராக ஏற்கனவே மட்டக்களப்பு மாவட்டத்தை பிரநிதித்துவப்படுத்துபவரே இருந்தார்.

எனவே புதிதாக நியமிக்கப்படும் பொதுச் செயலாளரும் மட்டக்களப்பு மாவட்டத்தை பிரநிதித்துவம் செய்பவராக இருப்பதே பொருத்தமானதாக இருக்கும். இதனை நான் ஏற்கனவே கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலும் கூறியுள்ளேன் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

காற்றலை மின் உற்பத்தி நிலையம்;

## தேசிய மின் இணைப்பிற்கு மேலும் 100 மெகாவோட் மின்சாரம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தேசிய மின் இணைப்பிற்கு 100 மெகாவோட்டிற்கும் அதிகமான மின்சாரத்தை வழங்கக் கூடிய நாட்டின் முதலாவது பாரிய காற்றலை மின் உற்பத்தி நிலையம் விரைவில் திறக்கப்படவுள்ளது.

மன்னார் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மேற்படி மின் உற்பத்தி நிலையம் இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான ஒரேயொரு காற்றலை மின் உற்பத்தி நிலையம் என்றும் மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது

06

## தண்டனை பெற்ற கைதிகளின் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்ற முடியாது

பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன

**லோரன்ஸ் செல்வநாயகம், எம்.ஏ.அமீனுல்லா**



பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களே தற்போது உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர். அதனால் தீர்க்க முடியுமான கோரிக்கைகளை மட்டுமே எம்மால் நிறைவேற்ற முடியும்.உண்ணாவிரதம் இருந்தாலும் தீர்க்கமுடியாத கோரிக்கையை எம்மால் தீர்க்க முடியாது என பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

எவர்குற்றச் செயல்களில் ஈடுபட்டாலும் எந்த தராதரமும் பார்க்காது அவர்களுக்கு எதிராக சமமான சட்டம் பிரயோகிக்கப்படும். குற்றமிழைப்பவர்களின் பதவி மற்றும் தராதரம் எமக்கு அவசியமில்லை. குற்றவாளிகள் எவராயினும் அவர்கள் கைது செய்யப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டு சிறைத் தண்டனை அனுபவித்து வரும் சிலர் தற்போது உண்ணாவிரதப் போராட்டங்களை மேற்கொண்டு வருவது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

நாட்டில் பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களே அவ்வாறு உண்ணாவிரத போராட்டங்களில் ஈடுபட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

சட்டத்தரணிகளை எவ்வித சோதனையும் இன்றி சிறைச்சாலைகளுக்குள் அனுமதிக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அவ்வாறு செய்ய முடியாது.

பாதுகாப்புச் செயலாளராக சிறைச்சாலைகளுக்கு நான் விஜயம் மேற்கொள்ளும் போதும் நானும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றேன். அதற்கான பணிப்புரையை நான் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளேன்.

எனக்கே அவ்வாறான நடைமுறை பின்பற்றப்படும் போது சட்டத்தரணிகளுக்கு அது விதிவிலக்காக முடியாது.

எமது நாட்டைப் பொறுத்தவரை இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபடுபவர்கள் இரண்டு மூன்று தினங்களில் தமக்கு பசி ஏற்படும் போது ஏதாவது காரணங்காட்டி இளநீர் அல்லது குளிர் பானத்தை அருந்தி உண்ணாவிரதத்தை கைவிடுவது வழக்கமாகி வருகிறது.

06

450 – 1000 என்ஜின் வலு வாகனங்கள்;

## இறக்குமதிக்கான அனுமதியை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

450 க்கும் ஆயிரத்திற்கும் இடைப்பட்ட என்ஜின் வேகத்தைக் கொண்ட மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தீர்மானத்திற்கு இணங்க எதிர்காலத்தில் 450 க்கும்1000ற்கும் இடைப்பட்ட என்ஜின் வேகத்தைக் கொண்ட மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்கு முன்பதாக இதுவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவ்வாறான வாகனங்களைப் பதிவு செய்ய 8 லட்சம் ரூபா வரை மிகைக் கட்டணம் அறவிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முழுமையாகப் பதிவு செய்யப்படாத நிலையில் உபயோகத்தில் உள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பில் அதற்கான முறைமைக்கிணங்க அதனைப் பதிவு செய்து கொள்வதற்கு கால அவகாசம் ஒன்றை வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளதாகவும் ராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (ஸ)

செயற்கை முட்டைகள் விற்பனை:

## உண்மைத் தன்மையை அறியத்தருமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**


உள்ளூர் வர்த்தக சந்தைகளில் செயற்கை முட்டைகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதாக வெளிவரும் தகவல்கள் தொடர்பில் பொது சுகாதார பரிசோதகர் சங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

அவ்வாறு செயற்கை முறையில் தயாரிக்கப்பட்டு வரும் முட்டைகள் சந்தைகளில் விற்பனை செய்யப்படுமானால் அது தொடர்பில் உடனடியாக தகவல்களைஅறியத்தருமாறும் அந்த சங்கம் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

06

## ஒட்டுசுட்டானில் கோர விபத்து;



**மாங்குளம் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் நகர் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் 12 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் ஒட்டுசுட்டான் சிவன் ஆலயத்திற்கு முன்பாக உள்ள பேருந்து தரிப்பிடத்திற்கு அருகில் மாங்குளம் நோக்கிய திசையில் பயணித்த பிக்கப் ரக வாகனம் ஒன்று வீதியை கவனிக்காது திடீரென மீண்டும் முல்லைத்தீவு பக்கமாக திரும்ப முற்பட்ட வேளை மாங்குளம் நோக்கி வந்த ஹயஸ் வாகனம் குறித்த வாகனத்துடன் மோதியுள்ளது.

இதில் ஹயஸ் வாகனத்தில் பயணித்த 12 பேர் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 405 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர்

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் சூழ்நிலையில் வெளிநாடுகளில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள 405 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து இலங்கை ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானத்தில் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

இவர்களில் ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தில் இருந்து 341 பேரும் கட்டாரில் இருந்து 64 பேரும் நாடு திரும்பியுள்ளதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன நாடு திரும்பியவர்கள்

06

தினகரன் THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834

தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் ஆவணி மாதம் 29ஆம் நாள் திங்கட்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1442 முஹர்ரம் பிறை 25

### குறள் தரும் சிந்தனை



புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை

புகழை விரும்பிய மனைவியைப் பெறாதவர்க்கு அவர்களை ஏளனம் செய்வார் முன்னே ஆண் சிங்கமாய் நடக்கும் பெருமித நடை இல்லை.

## மக்களின் அவலத்தை தீர்ப்பதில் முன்னுரிமை வழங்க வேண்டும்

வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி சம்பந்தமான கோரிக்கைகள் தமிழர் அரசியல் தரப்புகளில் இருந்து சமீப காலமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சி அமோக வெற்றியீட்டி, பலம் வாய்ந்த ஆட்சியொன்றை அமைத்ததைத் தொடர்ந்து அபிவிருத்தி தொடர்பான கோரிக்கைகள் வலுப்பெற்றுள்ளன.

தமிழ் இனத்தின் அரசியல் தொடர்பான கோரிக்கைகளையெல்லாம் தற்காலிகமாக ஒருபுறம் வைத்து விட்டு, அபிவிருத்தி விடயங்களிலேயே முழுமையான கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று வடக்கு, கிழக்கில் உள்ள அரசியல்வாதிகள் பலர் இப்போது கருத்து வெளியிடத் தொடங்கியுள்ளனர். வலுவான அரசாங்கமொன்று உருவாகியிருப்பதனால் எழுந்துள்ள கோரிக்கையாக இதனைக் கொள்ள முடியும்.

பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் தெரிவுகளை அடிப்படையாக வைத்து நோக்குகின்ற போது, அரசியல் கோரிக்கைகளைப் பார்க்கிலும் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட ஆதங்கமே மேலோங்கியிருப்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக இத்தனை காலமும் கருதப்பட்டு வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இம்முறை ஏற்பட்டுள்ள பாரிய சரிவும், பாராளுமன்றத்துக்கு பிரதிநிதிகளாக புதிய முகங்கள் தெரிவாகியிருப்பதும் மக்களின் இன்றைய ஆதங்கத்தை தெளிவாகப் புலப்படுத்துகின்றன. யாழ் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளரான அங்கஜன் இராமநாதன், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளரான வியாழேந்திரன் ஆகியோர் வெற்றி பெற்றமை தமிழ் மக்களின் புதிய சிந்தனைக்கான அறிகுறிகளாகவே தென்படுகின்றன.

உண்மையில் கூறுவதானால் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் மிகவும் சலிப்படைந்திருக்கிறார்கள். மூன்று தசாப்த கால தொடர்ச்சியான யுத்த சூழலில் தங்களுக்கு எற்பட்டுள்ள உயிர்,உடைமை இழப்புகளை இலகுவில் மறந்து விடுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. யுத்த காலத்தில் கூடுதலான உயிர்களையும், உடைமைகளையும் பறிகொடுத்தவர்கள் தமிழ் மக்களாவர். ஆனால் இந்த இழப்புகள் தமிழ் மக்களுக்கு மாத்திரம் ஏற்படவில்லை. பொலிஸார், படை வீரர்கள் மற்றும் சிங்கள, முஸ்லிம் மக்கள் ஏராளமானோர் உயிர், உடைமை இழப்புகளைச் சந்தித்திருக்கின்றார்கள். எமது நாட்டின் குடிமக்கள் என்ற ரீதியில் அனைத்து இன மக்களுமே யுத்த காலத்தில் பலவிதத்திலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யுத்தம் நிலவிய காலப்பகுதியில் தேசியப் பிரச்சினைக்கு சமரசமான தீர்வொன்றைக் காண்பதற்காக பேச்சுவார்த்தைகளும், அதற்கான முயற்சிகளும் பல தடவைகளில் முன்னெடுக்கப்பட்ட போதிலும், எதுவுமே பலனைத் தரவில்லை. பேச்சுவார்த்தை மேசைக்கு புலிகள் இயக்கம் வந்திருந்த போதிலும், பிரிவினைக் கொள்கையில் அவர்கள் உறுதியாக இருந்ததன் காரணத்தினால் சமாதானப் பேச்சைக் குழப்புவதிலும், யுத்தத்தை மீள ஆரம்பிப்பதிலுமே அவர்கள் மறைமுகமான திட்டம் கொண்டிருந்தனர். எனவேதான் அனைத்து முயற்சிகளுமே உரிய பலனைத் தராமல் போய் விட்டன.

முப்பது வருட கால யுத்தம் முடிவுக்கு வந்து தசாப்த காலம் கடந்து விட்டது.இக்காலப் பகுதியில் வடக்கு, கிழக்கில் அச்சமற்ற சூழ்நிலை நிலவுகின்ற போதிலும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற வேண்டிய பிரதான தேவை அப்பிரதேசங்களில் உள்ளது.

அரசியல் சார்ந்த விடயங்கள் ஒருபுறம் இருந்தாலும், மக்களின் ஏனைய பிரச்சினைகளே இன்று முன்னிலையில் நிற்கின்றன. மக்களின் அவலங்கள் முதலில் தீர்க்கப்படுவது அவசியம். வடக்கு, கிழக்கின் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் உண்மையான அவலங்கள் தமிழ் தேசியம் பேசுவோரின் கண்களுக்குத் தெரிவதில்லை. அம்மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமே இன்றி குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். தங்களை தமிழ் அரசியல்வாதிகள் ஏறெடுத்தும் பார்ப்பதில்லையென்று அம்மக்கள் கூறுகின்றனர்.

அரசியல் பிரச்சினைகள் பற்றியெல்லாம் அவர்களுக்கு ஆர்வம் குறைவு. அன்றாட சீவனோபாயம் மாத்திரமே அம்மக்களின் தலையாய பிரச்சினையாக இருக்கிறது. தங்களின் அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் மாத்திரமே தங்களைத் தேடி வந்து விட்டுச் செல்வதாக அவர்கள் வேதனையுடன் கூறினர்.

இவ்வாறான நீண்ட கால ஏமாற்றத்தின் விளைவாகவே வடக்கு, கிழக்கில் இம்முறை பொதுத் தேர்தலின் போது மக்களின் சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காண முடிகிறது. அபிவிருத்தியும் அன்றாட சீவனோபாயமுமே தங்களது தலையாய பிரச்சினைகள் என்பதை முடிவாகக் கூறியுள்ளனர் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள். அங்குள்ள தமிழ் அரசியல்வாதிகள் பலரின் இன்றைய கருத்தும் இதுவாகவே உள்ளது.

நடைமுறைச் சாத்தியமற்ற விடயங்களை மக்கள் மத்தியில் கூறுவது பொருத்தமானதல்ல. உலகப் போக்கு மற்றும் தேசிய அரசியலின் போக்கு பற்றியெல்லாம் சிந்தித்து, தமது மக்களின் அவல வாழ்வைத் தீர்த்து வைப்பதற்கான காரியங்களில் இவ்வாறான அரசியல்வாதிகள் ஈடுபட வேண்டும். அதுவே காலத்திற்குப் பொருத்தமான நடவடிக்கையாகும்.

editor.tkn@lakehouse.lk

# அறுநூறு வருட வரலாற்றுப் பெருமை வாய்ந்த பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயம்

### வருடாந்த உற்சவம் நாளை ஆரம்பம்

பதினைந்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் செப்டெம்பர் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை(நாளை) திருக்கதவு திறத்தல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இந்த ஆலய உற்சவத்தின் சிகரம் என வர்ணிக்கப்படும் பாண்டவர்கள் திரௌபதை சகிதம் தேவாதிகள் தீயில் இறங்கும் தீமிதிப்பு வைபவம் ஒக்டோபர் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.



தற்போது கொரோனா வைரஸ் தொற்று காரணமாக சுகாதாரபாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றியே ஆலய உற்சவ கால வழிபாடுகள் நடைபெறவுள்ளன. ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் முகக்கவசம் அணிந்திருத்தல், சமூக இடைவெளியைப் பின்பற்றல் போன்றவற்றுடன், இம்முறை பக்தர்கள் காவடி எடுத்தல், கற்பூரச்சட்டி எடுத்தல் போன்ற நேர்த்திக்கடன்களை செலுத்த முடியாது. அத்துடன் ஆலய வளாகத்தில் கடைகள் வைப்பதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை. ஆலய உற்சவ காலத்தில் சுகாதாரப் பிரிவினர் சுகாதார கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் கிராமிய வழிபாட்டையே தமது வழிபாடாக கருதி வருகின்றனர். இம்மக்கள் சக்தி வழிபாட்டில் மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருப்பதை இங்குள்ள கிராமங்கள் தோறும் அமைந்துள்ள சக்தி ஆலயங்கள் பறைசாற்றி நிற்கின்றன.

அந்த வகையில் கண்ணகி அம்மன், காளி அம்மன், மாரி அம்மன், மீனாட்சிஅம்மன், பேச்சி அம்மன், நாககன்னி அம்மன், திரௌபதை அம்மன் என பல ஆலயங்களை நிறுவி அதன் மூலம் தமது வேண்டுதல்களை நிறைவேற்றி வருகின்றனர்.

சக்தி ஆலயங்களில் உற்சவங்கள் ஆரம்பிக்கப்பட்டால் மிகுந்த பயபக்தியுடன் மக்கள் அவ்வழிபாட்டில் ஒன்றித்து விடுகின்றனர். தமது உள்ளத்தையும், இல்லத்தையும், கிராமத்தையும் தூய்மையாக வைத்திருப்பதுடன் சில ஊர்க்கட்டுப்பாடுகளை விதித்து புனிதமாக வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர். அம்மன் அருளால் தங்கள் குறைகளையும் தீர்த்துக் கொள்கின்றனர். இது காலங்காலமாக மக்கள் மத்தியில் இடம்பெற்று வரும் தெய்வ நம்பிக்கையாகும்.

கிழக்கில் பல்வேறு சக்தி ஆலயங்கள் அமையப் பெற்றாலும் அதில் மிகத் தொன்மையான ஆலங்கள் சில அமைந்துள்ளன. மட்டக்களப்பிற்கு தெற்கே 40 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது வர்த்தக நகரான கல்முனை. கல்முனை நகரில் இருந்து வடக்கே 3 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது ப ழைமை வாய்ந்த பாண்டிருப்பு கிராமம். இங்கு தான்ப ழைமையின் பெருமை கூறும் பா ண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தின் உற்சவம் புரட்டாதி மாதத்தில் ஆரம்பமாகி மரபு வழி சார்ந்த வழிபாட்டு முறைகளின்படி 18 தினங்கள் பூசைகள் இடம்பெற்று வருகின்றன.

கிழக்கில் தொன்மை வாய்ந்த சக்தி ஆலயங்களில் ஒன்றாக பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதிஅம்மன் ஆலயம் விளங்குகின்றது. 'தீப்பள்ளயம்'என்றால்தான் அனைவருக்கும் தெரியும். இங்கு நடைபெறும் பூசைவழிபாடுகள் ஏனைய ஆலயங்களில் இருந்து வேறுபட்டு நிற்கின்றன. திரௌபதிஅம்மனை வருந்தி அழைத்து கும்பிட்டு மன்றாடி வந்தனை செய்து வழிபடுகின்ற மரபு சிறப்பானது. பாண்டவர் வேடம் பூண்டு நிற்கின்றவர்களுக்கு இங்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. மனிதனை தெய்வமாக பூஜிக்கும் மகாசக்திஆலயமாகவும் பாண்டிருப்பு திரௌபதிஅம்மன் ஆலயம் விளங்குகின்றது.

மகாபாரதக் கதையினை மையமாக வைத்து 18 தினங்கள் பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலய உற்சவங்கள் நடைபெறுகின்றன. இலங்கையில் முதன்முதலில் திரௌபதி அம்மனுக்கென ஆலயம் அமையப் பெற்றது பாண்டிருப்பிலேயாகும். வட இந்தியாவில் இருந்து தாதன் மாமுனியும் அவரது ஆட்களும் இந்தியாவின் கொங்குநகரில் இருந்து கப்பலேறி புறப்பட்டனர். அவர்கள் கிழக்கு கரையை வந்தடைந்தனர். மட்டக்களப்பு பகுதியிலிருந்து புறப்பட்ட தாதன்மா முனிவர் அந்நாளில் நாகர்முனை என அழைக்கப்பட்ட திருக்கோவிலைச் சென்றடைந்து அங்கு தங்கியிருந்து மகாபாரதக் கதையினை மக்கள் மத்தியில் பரப்பி வரலானார்.

இந்தியாவிலிருந்து தாதன் என்பவர் இங்கு வந்திருப்பதனை அறிந்து கொண்ட மட்டக்களப்பு பகுதிக்கு சிற்றரசனாக இருந்த மாருதசேனனுடைய புத்திரன் எதிர்மன்னசிங்கன் (கி.பி.1539_ கி.பி. 1583 வரை) தாதனைக் கண்டு அவரது நோக்கம் வருகை பற்றி விசாரித்துஅறிந்து கொண்டான். தாதனும் தனது வருகையின் நோக்கம் பற்றி மன்னனிடம் எடுத்து இயம்பினார். அத்தோடு தமது வழிபாட்டிற்குகந்த இடம் ஒன்றைத் தேடிவழங்குமாறும் கேட்டுக் கொண்டார்.

எதிர்மன்னசிங்கனும் தாதனின் விருப்பப்படிஅவரையும் அழைத்துக் கொண்டு மீண்டும் கடல் வழிப்பயணம் செய்த போது அருகே கடலும் ஆலவிருட்சங்களும் கொக்கட்டிமரங்களும் நாவல் மரங்களும் மேற்கே அடர்ந்த வனப்பகுதியும் காணப்பட்ட பாண்டிருப்பைக் கண்டு இறங்கி அங்கேயே தங்கி தான் கையோடு கொண்டு வந்திருந்த விஷ்ணு, திரௌபதி, பாண்டவர்கள் சிலைகளை வைத்து கொக்கட்டிமரத்தடியில் கொத்துப் பந்தலிட்டு வழிபாடு நடத்தி வந்தார். மன்னனும் தாதனின் வழிபாட்டிற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கினான். இதேவேளை திரௌபதிஅம்மனின் மகிமையை அறிந்து கொண்ட கண்டி மாநகரைஆட்சி புரிந்த மன்னன் விமலதர்மசூரியன் (கி.பி.1594_ கிபி 1604) இங்கு வந்து அம்மனை தரிசித்து விட்டு பொன், வெள்ளி பொருள் கொடுத்து சென்றதாக கல்வெட்டுக்களில் இருந்து அறியக் கிடக்கின்றது.

ஆரம்பத்தில் தாதன் ஆலயம் என அழைக்கப்பட்ட இவ்வாலயம் பின்பு பாண்டிருப்பு திரௌபதிஅம்மன் ஆலயம் என பெயர் பெற்றது. இந்த ஆலயத்தின் பிரசாதமாக மருத்துவ மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் வாசனைமிக்க 'பாண்டாரப் பொட்டு' அற்புதம் மிக்கதும் பிணிதீர்க்கும் அரும் மருந்தாகவும் காணப்படுகின்றது. இலங்கையில் மிக நீண்ட தீக்குழியைக் கொண்ட ஆலயமாக பாண்டிருப்பு திரௌபதிஅம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இங்கு பெண்கள் தீமிதிப்பில் ஈடுபட முடியாது.

(06 ஆம் பக்கம் பார்க்க)

**செ.துஜியந்தன்**
(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

# அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட விவசாய ஊக்குவிப்பு வாரம்

அம்பாறை மாவட்டத்தில் 'விஷேட விவசாய ஊக்குவிப்பு வாரம்' பிரகடனப்படுத்தப்பட்டு, செப்டம்பர் 07ம் திகதி திங்கட்கிழமை முதல் 12ம் திகதி சனிக்கிழமை வரையான ஏழு தினங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.எப்.ஏ.சனீரின் ஏற்பாடு மற்றும் வழிகாட்டலில், மாவட்டத்திலுள்ள 98 விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட இவ்வேலைத்திட்டத்தின் போது, விவசாயிகள், வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கையாளர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் நன்மையடையும் வகையில் பல்வேறு பயன்மிக்க வேலைத் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.





அம்பாறை மாவட்டத்தில் சமகாலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட விஷேட விவசாய ஊக்குவிப்பு வாரத்தில், அட்டாளைச்சேனை விவசாய விரிவாக்கல் பிரிவில் பல்வேறு வேலைத் திட்டங்கள் ஏற்பாடு செய்து நடைமுறைப்படுத்தப்பட்டதாக அட்டாளைச்சேனை விவசாய விரிவாக்கல் நிலையப் பொறுப்பதிகாரி, விவசாயப் போதனாசிரியர் ஏ.எச்.ஏ.முபாறக் தெரிவித்தார்.

நெற்பயிர்களைத் தாக்கும் கபில நிற தத்திகள் (அறக்கொட்டியான்), சோளம் செய்கையை தாக்கும் படைப் புழு என்பனவற்றின் தாக்கம் மற்றும் கட்டுப்பாடு தொடர்பில் விவசாயிகளுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று நீர்ப்பாசன திட்டப் பணிப்பாளர் காரியாலயத்தில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காளான் செய்கை மற்றும் காளான் உணவு நுகர்வை ஊக்குவிக்கும் விழிப்புணர்வு நிகழ்வு அட்டாளைச்சேனை தைக்காநகரில் இடம்பெற்றது. இதன் போது காளான் கஞ்சி தயாரித்து விநியோகிக்கப்பட்டது.



கூட்டெரு உற்பத்தியாளர்களை அதிகரித்து அவர்களுக்கு மேலதிக வருமானத்தை பெற்றுக்

கொடுப்பதுடன், நஞ்சற்ற உணவு உற்பத்தியை நிறைவாகக் கிடைக்கச் செய்யும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டெரு தயாரித்தல் செயன்முறைப் பயிற்சி அட்டாளைச்சேனை விவசாய விரிவாக்கல் பிரிவிலுள்ள ஆலம்குளம் விவசாயக் கிராமத்தில் இடம் பெற்றது. நஞ்சற்ற உணவு உற்பத்தி, தொற்றா நோய் பாதுகாப்பு மற்றும் நாற்றுமேடை பயிர் முகாமைத்துவம் என்பன தொடர்பில் விளக்கமளிக்கும் விழிப்புணர்வு நிகழ்வுகள் அட்டாளைச்சேனை தள ஆயர்வேத வைத்தியசாலை மற்றும் அந்நூர் மகாவித்தியாலயம் என்பனவற்றில் இடம்பெற்றன.

அட்டாளைச்சேனை புறத்தோட்டம் பிரதேசத்தில், நாற்றுமேடை முகாமைத்துவம் தொடர்பில் விவசாயிகளுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. அதேபோன்று சம்புநகர் பிரதேசத்தில் பரிசோதனையின் மூலம் வளமான மண்ணைக் கண்டறிதல் நிகழ்வு இடம் பெற்றது. இவை தவிர, நெற்செய்கையில் செலவினைக் குறைத்து, அதிக இலாபம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வின் போது, ஒருங்கிணைந்த பீடைப் பரிபாலனம் மற்றும் ஒருங்கிணைந்த போசணை முகாமைத்துவம் என்பன தொடர்பில் விவசாயிகளுக்கு விரிவான விளக்கமளிக்கப்பட்டதாகவும் விவசாயப் போதனாசிரியர் ஏ.எச்.ஏ.முபாறக் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், நாடளாவிய ரீதியில் 10 இலட்சம் வீட்டுத் தோட்டங்களை உருவாக்கும் அரசின் 'சௌபாக்கியா' வேலைத் திட்டத்தின் கீழ், வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கையில் ஆர்வமுள்ள அட்டாளைச்சேனை பிரதேச மக்களுக்கு அட்டாளைச்சேனை விவசாயப் பயிற்சி நிலையத்தினால் பயிர் விதைகள் ஏற்கனவே வழங்கி வைக்கப்பட்டன. இதன் போது மிளகாய், கத்தரி, பயற்றை, வெண்டி, கீரை, கௌபி, ராபிள் உள்ளிட்ட பல்வேறு பயிர் விதைகள் விநியோகிக்கப்பட்டன. இப்பயிர்களின் மூலம் செய்கையாளர்களுக்கு தற்காலத்தில் சிறந்த அறுவடை கிடைத்து வருவதாகவும் முபாறக் குறிப்பிட்டார்.

விவசாய அமைச்சு மற்றும் விவசாயத் திணைக்களம் என்பன இணைந்து நடைமுறைப்படுத்திய இவ்வேலைத் திட்டத்தின் மூலம் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையாளர்கள் 200 பேர் மற்றும் நெற்காணி வரம்புகளில் மரக்கறிச் செய்கையில் ஆர்வமுள்ளவர்கள் 300 பேர் என மொத்தம் 500 பேர் நன்மையடைந்தமை குறிப்பிடத்தக்கது.

கொவிட் 19 கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக நாடு எதிர்கொண்டுள்ள அசாதாரண சூழ்நிலைக்கு மத்தியிலும், வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கையாளர்களுக்கு பயிர் விதைகளை உரிய காலத்தில் துரிதமாக விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருந்ததாகவும் முபாறக் மேலும் சுட்டிக்காட்டினார். இப்பணிகளுக்கு அட்டாளைச்சேனை விவசாய விரிவாக்கல் நிலைய விவசாயப் போதனாசிரியர் எஸ்.பிரேம்நாத், தொழில்நுட்ப உதவியாளர்கள் வீ.நிரோஷன், எஸ்.ரேணுகா ஆகியோர் நிறைவான ஒத்தழைப்பு நல்கி வருவதாகவும் விவசாயப் போதனாசிரியர் முபாறக் தெரிவித்தார்.

**ஐ.எல்.எம்.ரிஸான்**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

' பெரும்பான்மை கட்சிகளுடன் சிறுபான்மை மக்கள் இணைந்து செயற்படும் காலம் தற்போது வந்துள்ளது' என்று கூறுகிறார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்பாட்டாளர் **என்.எம். சுஜப்.**

# பெரும்பான்மை கட்சிகளுடன் சிறுபான்மை மக்கள் இணைந்து செயற்படும் காலம் தற்போது வந்துள்ளது

## ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்பாட்டாளர் என்.எம். சுஜப் பேட்டி

தினகரனுக்காக பேட்டியொன்றை வழங்கிய அவர் "முஸ்லிம்கள் இந்த நாட்டில் சிறுபான்மைச் சமூகம் என்பதை மறந்து செயற்படக் கூடாது. முஸ்லிம் அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரை சுயநல அரசியல்தான் கோலோச்சுகின்றது. இதனை முஸ்லிம்கள் புரிந்து கொண்டு விட்டார்கள். அண்மையில் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளை இதற்கான சிறந்த சான்றாக எடுத்துக் கொள்ள முடியும்" என்றும் சுஜப் தெரிவித்தார்.

"எமது முஸ்லிம் தலைமைகள் அண்மைக் காலமாக அணிதிரண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பின்னால் அள்ளுண்டு சென்றதன் காரணமாக துரதிஷ்டவசமான நிலைமையொன்று தற்போது உருவாகியுள்ளது. ஆனால் பொதுஜன பெரமுன அரசாங்கம் முஸ்லிம் சமூகத்தை புறக்கணிப்பதாகத் தெரியவில்லை' என்று சுஜப் மேலும் தெரிவித்தார்.

**கேள்வி: திடீரென அரசியலுக்குள் பிரவேசிப்பதற்கு தங்களுக்கு ஏன் எண்ணம் ஏற்பட்டது?**

**பதில்:** நான் சிறுபராயம் தொடக்கம் சமூக சேவையில் நாட்டம் கொண்டவன். இந்நிலையில் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக அவ்வப்போது அரசியல்வாதிகளுடன் தொடர்பினை ஏற்படுத்தியிருந்தேன். அண்மைக் காலமாக எமது முஸ்லிம் அரசியல் தலைமைகளின் போக்குகளில் விரக்தியடைந்தேன்.குறிப்பாக முஸ்லிம்கள் இந்த நாட்டில் சிறுபான்மைச் சமூகம் என்பதை மறந்து செயற்படக் கூடாது. அந்த வகையில் எமது முன்னோடிகள் பெரும்பான்மைச் சமூகத்துடனும் ஆளும் அரசாங்கத்துடனும் இணைந்து செயற்பட்டமை சிறந்த முன்னுதாரணமாகும். எனினும் எமது தற்கால தலைமைகளின் போக்குகள் பெரும்பான்மைச் சமூகத்தை விசனப்படுத்துவதாக அமைந்துள்ளதை எவரும் மறுக்க முடியாதுள்ளது. இவ்வாறான நிலைமையை சகிக்க முடியாமலே தனிவழி என்றாலும் பரவாயில்லை அரசாங்கத்துடன் அல்லது பெரும்பான்மை கட்சிகளுடன் இணைந்து அரசியலில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. தற்போது எனக்கு சமூக அங்கீகாரம் கிடைக்கத் தொடங்கியுள்ளது.

**கேள்வி: தற்போதைய அரசாங்க அமைச்சர்களுடன் தங்களுக்கு எவ்வாறான தொடர்புகள் உள்ளன?**

**பதில்:** நான் ஜனாதிபதியின் சகோதரர்களான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் சமல் ராஜபக்ஷ, அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ போன்றவர்களுடன் அடிக்கடி தொடர்புகளை ஏற்படுத்தி வருகின்றேன். அரசியல் நெருக்கடியான காலகட்டத்தில் கூட நான் அவர்களுடனேயே செயற்பட்டதை அவர்கள் நன்கு புரிந்துள்ளார்கள். அதனால் அவர்களிடத்தில் எனக்கு போதியளவு மரியாதை உள்ளது. அதேபோன்று அவர்களது சிபாரிசுக்கமைவாக ஏனைய பெரும்பாலான அமைச்சர்களுடன் நட்பைப் பேணி வருகின்றேன். ஆகவே இந்த தொடர்புகளைக் கொண்டு ஆத்ம திருப்தியான சமூக சேவையில் ஈடுபடுவதுடன் பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளையும் செய்யலாம் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது.

**கேள்வி: உங்களது பிரதேசங்களில் ஏனைய முஸ்லிம் கட்சிகள் கோலோச்சுகின்ற சவாலுக்கு எவ்வாறு முகங்கொடுப்பீர்கள்?**

**பதில்:** மர்ஹூம் அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கிய காலகட்டத்தில் சமூகத்திற்கு ஓர் அரசியல் கட்சியின் தேவை காணப்பட்டது. அவரும் அக்கட்சியின் ஊடாக சமூகத்தை சரியாக வழிநடத்தினார். சமூகமும் நன்மையடைந்தது. ஆனால் தற்காலத்தில் அக்கட்சி பல கூறுகளாக உடைந்து, சுயநல அரசியல் கோலோச்சுகின்றது. இதனை முஸ்லிம்கள் புரிந்து விட்டார்கள். அண்மையில் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளை சிறந்த சான்றாக எடுத்துக் கொள்ள முடியும். முஸ்லிம் சமூகம் அக்கட்சிகளை கட்டம் கட்டமாக ஒதுக்க ஆரம்பித்து விட்டது. அதனால் எதிர்கால தேர்தல் எமக்கு பெரும் சவாலாக அமையுமென எதிர்பார்க்கவில்லை.



> ‘முஸ்லிம்கள் இந்த நாட்டில் சிறுபான்மைச் சமூகம் என்பதை மறந்து செயற்படக் கூடாது. முஸ்லிம் அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரை சுயநல அரசியல்தான் கோலோச்சுகின்றது. இதனை முஸ்லிம்கள் புரிந்து கொண்டு விட்டார்கள்’

**கேள்வி: வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மைக் கட்சிகள் ஊடாகத்தான் மக்களுக்குப் பணியாற்ற முடியும் என்ற கருத்து தொடர்பில் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

**பதில்:** அந்தக் காலம் கடந்த தேர்தலுடன் மலையேறி விட்டது. சிறுபான்மைக் கட்சிகளுக்கு தற்போது தேசிய மட்டத்தில் இடமில்லை என்பதை பொதுமக்கள் புரிந்து விட்டார்கள். சிறுபான்மைக் கட்சிகள் துண்டங்களாகவும் துகள்களாகவும் உடைந்து விட்டன. அதனால் சிறுபான்மை மக்கள் தற்போது பெரும்பான்மைக் கட்சிகளுடன் இணையத் தொடங்கி விட்டார்கள். ஆரம்ப காலகட்டத்தில் அரசியலில் சிறுபான்மை மக்கள் பெரும்பான்மைக் கட்சிகளுடன்தான் இருந்தார்கள். அந்த நிலை மீண்டும் வந்து விட்டது. எனவே பெரும்பான்மைக் கட்சிகளுடன் இணக்கப்பாட்டுடன் செயற்படுவதன் மூலமே சிறுபான்மை மக்கள் தமது அபிலாஷைகளை வென்றெடுக்க முடியும் என்ற நிலையே தற்போது உள்ளது.

**கேள்வி: மாகாண சபைத் தேர்தலில் நீங்கள் போட்டியிடுவீர்களா? அவ்வாறாயின் உங்களது செயற்பாடுகளுக்கு அரசியல் ரீதியிலான முட்டுக்கட்டைகள் இருக்கும் தானே?**

**பதில்:** நிச்சயமாக மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வேண்டுமென எனது கட்சி என்னை வலியுறுத்தியுள்ளது. நானும் அதற்குச் செவிசாய்த்துள்ளேன். இந்நிலையில் எனது செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையிடக் கூடிய பலமிக்க அரசியல் சக்தி அங்கு இல்லை. அவர்கள் அனைவருமே தசாப்த கால எதிர்க்கட்சியினர். பொதுஜன பெரமுன அரசாங்கம் இன்னும் பல தடவைகள் ஆட்சியிலிருக்கும் என நம்புகிறோம். அந்த வகையில் அரசாங்கத்தினால் தமது தேவைகளை நிறைவேற்ற முடியுமென்ற புரிதல் சாதாரண மக்களுக்கும் உண்டு. எனவே எனது பணிகளுக்கு எவரும் தடை போட முடியாது. முஸ்லிம் கட்சிகள் அரசாங்கத்தில் சரணடைவதற்கு எடுக்கின்ற முயற்சிகள் கூட தோல்வியில்தான் முடியும். சந்தர்ப்பவாதிகளை, குற்றச்சாட்டுக்கள் நிறைந்தவர்களை, நன்றி கெட்டவர்களை இந்த அரசாங்கம் உள்வாங்குவதற்கு தயாரில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். கடந்த தேர்தலின் போது ஒதக்கப்பட்ட இவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கும் நிலையேற்பட்டுள்ளதனால் எந்த வகையிலும் இவர்களினால் பிரகாசிக்க முடியாது.

கடந்த காலத்தில் நான் சார்ந்துள்ள அணி எதிர்க்கட்சியாக இருந்த போது கிஞ்சித்தும் என்னை நோக்காதவர்கள், தற்போது என்னைக் கொண்டு காரியம் சாதித்துக் கொள்வதற்கு நான் முட்டாளாக இருக்க மாட்டேன். இந்த அரசாங்கத்தின் மூலமாக நான் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு வேலைத் திட்டங்களை செய்வதற்கான முன்னெடுப்புக்களைச் செய்துள்ளேன். சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் அவற்றிற்கான கோரிக்கைகளை முன்வைத்துள்ளேன். இக்கோரிக்கைகளுக்கு அரசாங்க உயர்மட்டத்தினர் எனக்கு ஆசி வழங்கியுள்ளனர். அதற்கிணங்க அமைச்சர்களும் எனக்கு உறுதியளித்துள்ளார்கள். எதிர்வரும் ஆண்டில் எனது மக்கள் பணி சிறப்பாக நடைபெறும்.

பேட்டி கண்டவர்:
**எம்.ஜி.ஏ. நாஸர் ...**
(ஏறாவூர் நிருபர்)

# அம்பாறை மாவட்டத்தில் இரு பிரதேச சபைகளுக்கு புதிதாக தவிசாளர் தெரிவு

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய இரு பிரதேச சபைகளுக்கான தவிசாளர்கள் கடந்த வாரம் தெரிவு செய்யப்பட்டனர்.

நடந்து முடிந்த பொதுத்தேர்தலையடுத்து மேற்படி இரு சபைகளினதும் தவிசாளர்கள் இராஜினாமா செய்திருந்தனர். அதனாலேற்பட்ட வெற்றிடங்களுக்கு புதிதாக உள்ளூராட்சி மன்ற சட்டப்படி கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.மணிவண்ணன் முன்னிலையில் புதிய தவிசாளர்கள் தெரிவு இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச சபையின் புதிய தவிசாளராக சுயேச்சைக் குழு உறுப்பினரான அமரதாஸ ஆனந்த தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம் 17 ஆண்டுகளாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வசமிருந்த நாவிதன்வெளி பிரதேசசபையின் ஆட்சி கைமாறியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகியிருக்கும் நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளர் தவராசா கலையரசன் தனது தவிசாளர் பதவியை இராஜினாமாச் செய்திருந்த நிலையில், அப்பதவி வெற்றிடமானதையடுத்து புதிய தவிசாளரை தெரிவு செய்வதற்கான விசேட அமர்வு அண்மையில்பதில் விசாளர் ஏ.கே அப்துல் சமட் தலைமையில் பிரதேச சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது புதிய தவிசாளரை தெரிவு செய்வதற்கான தேர்தலை கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.மணிவண்ணன் நடத்தி வைத்தார்.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்த அமர்வில் தேர்தலுக்கான வேட்பாளர்களை முன்மொழியுமாறு அவர் சபையைக் கோரிய போது இருவரின் பெயர்கள் தவிசாளருக்காக பிரேரிக்கப்பட்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரும் பதில் தவிசாளருமான ஏ.கே. அப்துல் சமட் சுயேச்சைக் குழு உறுப்பினரான அமரதாஸ ஆனந்தவின் பெயரை பிரேரித்தார். அதனை சுயேச்சைக் குழு உறுப்பினர் தி. யோகநாயகன் ஆமோதித்தார். இதன் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பாக அந்தோனி சுதர்சனை அக்கட்சி உறுப்பினர் முத்துக்குமார் விக்னேஸ்வரன் பிரேரிக்க அதே கட்சியைச் சேர்ந்த மற்றுமொரு உறுப்பினரான மு.நிரோஜன் வழிமொழிந்த நிலையில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

இதனடிப்படையில் வெளிப்படையிலான வாக்கெடுப்பு இடம்பெற்ற போது தவிசாளராக தெரிவு செய்யப்பட்ட சுயேச்சைக் குழு உறுப்பினரான அமரதாஸ ஆனந்தவிற்கு ஆதரவாக 07 வாக்குகளும், மற்றையவரான தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பாக அந்தோனி சுதர்சனுக்கு 06 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதன் போது 13 பேர் கொண்ட நாவிதன்வெளி பிரதேச சபையில் வாக்களிப்பு அடிப்படையில் சுயேச்சை குழு உறுப்பினரான அமரதாஸ ஆனந்த வெற்றி பெற்ற நிலையில் அவரை தவிசாளராக பிரகடனம் செய்வதாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மணிவண்ணன் அறிவித்தார்.

புதிய தவிசாளர் அமரதாஸ ஆனந்த கருத்துத் தெரிவிக்கையில், நாவிதன்வெளி பிரதேசத்தில் முஸ்லிம் மக்களோடு இணைந்து பொதுஜன பெரமுன கட்சிக்கு ஆதரவினை வழங்கி அபிவிருத்தியை மேற்கொள்ளப் போவதாக சுட்டிக் காட்டினார்.

சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் இராஜினாமா செய்த நிலையினால் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவுக்கான விசேட அமர்வு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் தலைமையில் சபா மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேச சபை உறுப்பினரும் முன்னாள் தவிசாளருமான ஏ.எம். முஹம்மட் நௌஷாட் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டு திறந்த வாக்களிப்பில் பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல். எம்.மாஹிர் ஏழு வாக்குகள் பெற்றுக் கொண்டதுடன் பிரதேச சபை உறுப்பினரும் முன்னாள் தவிசாளருமான ஏ.எம்.முஹம்மட் நௌஷாட் பதின்மூன்று வாக்குகள் பெற்றுக் கொண்டு மீண்டும் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஐந்து உறுப்பினர்கள், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏழு உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு உறுப்பினர் உள்ளிட்ட பதின்மூன்று உறுப்பினர்கள் ஆதரவுடன் சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளராக மீண்டும் ஏ.எம்.முஹம்மட் நௌஷாட் தெரிவு செய்யப்பட்டார்.

இதில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஏ.ஜே. எம்.இர்ஷாட், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஏ.ரீ.எம்.றாபி, சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட், உதவித் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சம்மாந்துறை பிரதேச சபை தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக போட்டியிட்டு தவிசாளராகப் பதவி வகித்த ஏ.எம்.முஹம்மட் நௌஷாட் தனது தவிசாளர் பதவியை பொதுத்தேர்தலின் போது மேடைகளில் பேசப்பட்ட பேச்சுக்களின் தாக்கத்தினால் கடந்த ஒகஸ்ட் மாதம் 10ம் திகதி இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறூப் நிருபர்)


# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இளைஞருக்கு நேர்ந்த பரிதாபம்

## மஸ்கெலியா, பிரவுன்ஸ்வீக் தோட்டத்தில் இரவில் சம்பவம்

மஸ்கெலியா, பிரவுன்ஸ்வீக் தோட்டத்தில் பாதுகாப்பற்ற முறையில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் மண்ணுக்குள் புதையுண்டு உயிரிழந்த பரிதாப சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு (12.09.2020) இடம்பெற்றது.

பிரவுன்ஸ்வீக் தோட்டத்தில் புளூம் பீல்ட் பிரிவைச் சேர்ந்த சுப்ரமணியம் அமிலசந்திரன் (வயது 29) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

தேயிலை மரங்களைப் பிடுங்கி, பாதுகாப்பற்ற முறையில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையிலேயே மண்மேடு சரிந்ததால் அவர் மண்ணுக்குள் புதையுண்டு பலியானார். அவர் முழுமையாக மண்ணுக்குள் புதையுண்டதுடன், தலையின் மேல் பகுதி மட்டுமே வெளியில் தெரிந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.







கொழும்பில் தொழில் புரியும் மேற்படி நபர் நேற்றுமுன்தினம் இரவே வீட்டுக்கு வந்துள்ளார். அதன் பின்னர் மாணிக்கக்கல் அகழப் போவதாக மனைவியிடம் கூறிவிட்டு இரவு 9 மணிக்கு வீட்டை விட்டுச் சென்றுள்ளார்.

பொழுது விடிந்தும் அவர் வீடு திரும்பாததால் உறவினர்கள் தேடிச் சென்ற போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவருக்கு இரண்டு வயதில் குழந்தையொன்று உள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக மஸ்கெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**மஸ்கெலியா விசேட நிருபர்...**

## அமைச்சர் பீரிஸ் தலைமையில்...

ஜீ.எல். பீரிஸுடன் அமைச்சர்களான அலி சப்ரி, உதய கம்மம்பில, நிமல் சிறிபால டி சில்வா, விமல் வீரவன்ச, இராஜாங்க அமைச்சர்கள் சுசில் பிரேமஜயந்த, சதாசிவம் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, பிரேமநாத் டி தொலவத்த ஆகியோரும் இக்குழுவில் அடங்குகின்றனர். மேற்படி குழுவின் அறிக்கை நாளை 15 ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் கையளிக்கப்படவுள்ளது. (ஸ)

## விக்னேஸ்வரன் மீதான வழக்கை...

சட்டத்தரணி டெனிஸ்வரன் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை தவறானது என்றும் அவரை மீள அமைச்சராக உள்வாங்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் 29.06.2018 வழங்கிய இடைக்காலக் கட்டளையை செயற்படுத்த தவறிவிட்டார் என சட்டத்தரணி டெனிஸ்வரன் நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்றை நீதியரசர் விக்கினேஸ்வரனுக்கு எதிராக தாக்கல் செய்திருந்தார்.

பிரதான வழக்கில் சட்டத்தரணி டெனிஸ்வரன் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை தவறானது என வட மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றம் 05.08.2019 தீர்ப்பளித்தது.

இடைக்காலக் கட்டளையை செயற்படுத்த நீதியரசர் விக்னேஸ்வரன் தவறிவிட்டார் என்ற நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணைக்காக நாளை எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

நீதியரசர் விக்னேஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவர் பாராளுமன்றில் ஆற்றிய உரைகள் காரணமாக சிங்கள அதிதீவிர சக்திகளின் கோபத்துக்கு அவர் ஆளாகியுள்ளார். அத்தரப்புக்கள் இந்நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தற்போது கூர்ந்து அவதானிக்க தொடங்கியுள்ளனர். இவ்வழக்கில் நீதியரசர் விக்னேஸ்வரன் குற்றவாளியாக காணப்பட்டால் அவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்க வேண்டி வரும் என்ற நிலையை இத்தரப்பினர் பெரிதும் விரும்புகின்றனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சட்டத்தரணி கலாநிதி. குமார வடிவேல் குருபரன்,

நீதியரசர் விக்னேஸ்வரன் தான் கடமை ஆற்றிய நீதிமன்றங்களில் கூண்டில் ஏறி சாட்சி சொல்வதை தவிர்ப்பது தமிழ் சட்ட சமூகத்தின் மாண்பை காப்பாற்றுவதற்கு அவசியம். கட்சி வேறுபாடுகளுக்கப்பால் தமிழ் அரசியல்வாதி – அதுவும் ஒரு சட்டத்தரணி தொடுத்த வழக்கால் ஓர் நீதியரசர் குற்றவாளியாக காணப்பட்டார் என்றோ பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தார் என்ற இழி நிலை ஏற்படக் கூடிய சந்தர்ப்பத்தைத் தவிர்ப்பது அவசியம். சட்டத்தரணி டெனிஸ்வரன் இன்றைய அரசியல் சூழலை கருத்தில் கொண்டு நீதிமன்ற அவமதிப்பு வழக்கை பெருந்தன்மையாக வாபஸ் பெற வேண்டும். அப்படி அவர் செய்தால் அவர் மீதான நன்மதிப்பு உயரும் எனக் குறிப்பிட்டார்.

## அமரர் அறுமுகன் குடும்பம்....

அரசியல் பிரமுகர்கள், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினதும், மறைந்த தலைவர்களான சௌமிய மூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரினது அரசியல் மற்றும் தொழிற்சங்க வகிபாகத்தை பாராட்டி பேசியதுடன், மலையக மக்களுக்கான காங்கிரஸின் முக்கியத்துவத்தையும் பட்டியலிட்டுக்காட்டினர்.

இந்நிலையில் அனுதாபம் தெரிவித்த அரசியல் பிரமுகர்களுக்கு நன்றி தெரிவித்து செந்தில் தொண்டமானால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மறைந்த எமது தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணையை முன்வைத்து உரையாற்றிய பிரதமர் மஹிந்த ராஜபக்ச, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, சபை முதல்வர் தினேஷ் குணவர்தன, ஆளுங்கட்சி பிரதம கொறடாவான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, எதிரணி பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியல்ல ஆகியோருக்கு தொண்டமான் குடும்பத்தின் சார்பிலும், மலையக மக்களின் சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன், எமது தலைவரின் கடந்தகால அரசியல் பயணத்தை நினைவூட்டி அவருடனான அனுபவங்களை பகிர்ந்துகொண்டு, இன,மத, குல, கட்சி பேதங்களுக்கு அப்பால் அவர் மக்களுக்கு ஆற்றியுள்ள சேவைகளை பாராட்டிய இலங்கைத் தமிழரசுக்கட்சி, ரெலோ, புளொட், தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் தேசிய மக்கள் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஈ.பி.டி.பி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, பொதுஜன ஐக்கிய முன்னணி, தேசிய காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் நன்றிகளை சமர்ப்பித்துக் கொள்கின்றேன் என்றார்.

## இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்கு...

வடக்கு கிழக்கில் அபிவிருத்தியையோ அல்லது மக்களின் உரிமைகள் தொடர்பிலேயோ சிந்திக்கவில்லை.மாறாக கட்சி சார்ந்த சர்ச்சைகளிலேயே அவர்களது காலம் கழிகின்றது.

அதனால் தான் அந்தக் கட்சி படிப்படியாக சரிவடைந்தது. அதன் தொடர்ச்சியாகவே இம்முறை தேர்தலில் வீழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

தமிழ் மக்களின் உரிமை மற்றும் அபிவிருத்தியைப் பெற்றுக்கொடுக்க பொருத்தமானவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரல்ல என்பதாலேயே மக்கள் இந்த முறை அவர்களுக்கு குறைவான ஆதரவையே வழங்கியுள்ளார்கள்.

தமிழ் மக்களின் உரிமை பற்றி சிந்திக்கும் போது, கடந்த காலங்களில் முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசாங்கத்தோடு இணைந்து சில நிபந்தனைகளை முன்வைத்து அபிவிருத்தி சார்ந்த விடயங்களை முன்னெடுத்தார்கள்.அவ்வாறு அபிவிருத்திக்காக போராடியவர்கள் அவர்களின் உரிமை சார்ந்த விடயங்கள் எதையும் இழக்கவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும்.

ஆனால் தமிழ் மக்களைப் பொருத்தவரை உரிமை அபிவிருத்தி என இரண்டுமே இன்னமும் கேள்விக்குறியாகத்தான் உள்ளது.

முப்பது வருட யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தேவை மிக அதிகமாக காணப்படுகின்றன. வாழ்வாதாரம், தொழில்வாய்ப்பு, கல்வி மேம்பாடு பொருளாதாரத்திற்கான கட்டமைப்புக்களை உருவாக்குவது இவையெல்லாம் அபிவிருத்தி சார்ந்த விடயமாக இருந்தாலும் அந்த மக்களது இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கான திட்டங்கள் அவை.

இன்று வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் இருப்பே ஒரு கேள்விக்குறியாக உள்ளது.அதனால் முதலில் அந்த இருப்பை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்க வேண்டும்.தமிழ் தலைவர்கள் பலரும் தமிழ் மக்களுக்கு பிரச்சனை இருக்கின்றது. பிரச்சினை இருக்கின்றது என்று காலங்காலமாக கூறிக்கொண்டு வருகிறார்களேஒழிய பிரச்சனைக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான பாதையில் பயணிப்பதில்லை. பிரச்சினையை வைத்துக் கொண்டு நாம் தொடர்ச்சியாக அரசியலை நடத்த முடியாது. அந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வை அரசாங்கத்துடன் இணைந்து முடிந்தளவு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு அதற்குள் உரிமை சார்ந்த விடயங்களையும் நாங்கள் உள்ளீர்க்க முடியும்.

உரிமை சார்ந்த விடயங்களுக்கு சமமாக அபிவிருத்தி சார்ந்த விடயங்களை முன்னெடுக்க வேண்டும் அதுதான் தற்போது வடக்கு கிழக்கில் முக்கியமாக உள்ளது. (ஸ)

## மன்னார் ரயில் நிலையம்...

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,...

வவுனியா பெரியகாடு இராணுவ புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து தப்பி வந்த நபர் ஒருவர் நேற்று மாலை மன்னார் சௌத்பார் பகுதியில் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் மன்னார் சௌத்பார் புகையிரத நிலையத்தை சூழவுள்ள பகுதியில் நடமாடி திரிந்ததையடுத்து மன்னார் பிரதான புகையிரத நிலையம் முற்றிலும் மூடப்பட்டுள்ளதுடன் கொழும்பில் இருந்து மன்னார் வரும் புகையிரதங்களும் தரித்து நிற்காமல் செல்வதற்கான ஏற்பாடுகளை புகையிரத நிலையம் மேற்கொண்டுள்ளது.

அதே நேரம் நேற்று முன்தினம் மன்னார் புகையிரத நிலையத்தில் கடமையில் இருந்த ஊழியர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் , புகையிரத நிலைய ஊழியர்களுக்கு சி.பீ.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும் நேற்று மன்னார் புகையிரத நிலைய பகுதிகளை சூழ மன்னார் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகளினால் கிருமி தொற்று நீக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தீப்பிடித்த நியூ டயமன் கப்பல்...

கப்பலின் கெப்டன் உள்ளிட்ட பணியாளர்களிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் நியூ டயமன் கப்பல் தொடர்பில் எதிர்கால தீர்மானங்கள் சம்பந்தமாக ஆராயும் முக்கிய கலந்துரையாடல் இன்று நடைபெறவுள்ளதாக கடல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. கப்பலில் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்திய சகல தரப்பினருடனும் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எட்டப்படவுள்ளதாக அந்த அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தர்னீ பிரதீப் தெரிவித்துள்ளார்.

கப்பலுக்கு பாரிய சேதம் ஏற்படவில்லை என்பதால் கப்பலை இலங்கை கடற்பரப்பிற்குள் கொண்டு வருவதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும் கப்பலின் தற்போதையநிலைமைதொடர்பில்உறுதிப்படுத்திய பின்னர் அது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை; தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு செலவாகிய நிதி தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். குறித்த கப்பல் தற்போது கிழக்குக் கரையோரமாக சங்கமன்கண்டிக்கு 45 கடல் மைல் தொலைவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (ஸ)

## தமிழ் மக்களுக்காக எனது...

அம்பாறை மாவட்ட மக்களை அபிவிருத்தியின்பால் இட்டுச்செல்ல சகல அரசியல் கட்சிகளும் இணைய வேண்டும்.

இதனூடாக தமிழ் முதலமைச்சர் ஒருவரை பெற வேண்டும். இதனை ஒரு இனவாதமாக எவரும் பார்க்க கூடாது. இதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.இன்று எமது மக்கள், அவர்களுக்கு சாட்டை அடி கொடுத்துள்ளனர். இதனை அவர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும். இது தவிர போராளிகளுக்கான வாழ்வாதார திட்டங்களை மிக விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம். இத்திட்டத்தை எமது புலம்பெயர் மக்களின் உதவியுடன் மேற்கொள்ள தற்போது தீர்மானித்துள்ளோம்.

முதலில் சுய தொழில் முயற்சி வாய்ப்புக்களை ஏற்படுத்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. சில கிராமங்களில் மக்களிற்கு அரசியல் தெளிவின்மை காணப்படுகின்றது. கடந்தகால தேர்தல்களின் போது சில தரப்பினர் சாராயப் போத்தல்கள், பணம் கொடுத்து வாக்குகளை வாங்கிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இதற்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன.தமிழ் மக்கள் மாற்றத்தை விரும்புகின்றார்கள். இதற்கு தமிழரசு கட்சி தலைவரின் தோல்வியை குறிப்பிட்டு கூற முடியும். விளையாட்டு விவகாரங்களுக்கான அமைச்சராக நாமல் ராஜபக்ச நியமிக்கப்பட்டமை வரவேற்க கூடியது. எமது இளைஞர்களுக்கு எதிர்காலத்திற்கு சிறந்த வாய்ப்புக்களை வழங்க கூடியதாக இருக்கும். அந்த வகையில் அமைச்சர் நாமல் ராஜபக்சவை விமர்சிக்க முடியாது. நாங்கள் சொல்கின்ற கருத்துக்களை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் என அவர் கூறினார்.

**பாருக் ஷியான்**

## தமிழரசுக் கட்சியின் இன்றைய...

சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே சிவஞானத்திற்கு எழுதியுள்ள கடிதமொன்றிலேயே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதற்கமைய, கடந்த பொதுத் தேர்தலில் கட்சியின் பாரிய பின்னடைவுக்கு, சுமந்திரனே பிரதான காரணமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எம்.ஏ சுமந்திரன், கட்சியின் கட்டுக்கோப்பை மீறி, தன்னிச்சையாக மேற்கொண்ட தீர்மானங்களினால், கடந்த தேர்தலில் பல வாக்குகளை இழக்க நேரிட்டதாக கே.வி. தவராசா குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், எம்.ஏ சுமந்திரன் கட்சியிலிருந்து நீக்கப்படாத பட்சத்தில், ஏழு தசாப்தங்களுக்கு மேலாக நிலைநிறுத்தப்பட்ட தமிழரின் உரிமைகளுக்கான அர்ப்பணிப்புக்கள் மற்றும் தியாகங்கள் அர்த்தமிழந்து போகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், சுமந்திரனை கட்சியிலிருந்து உடனடியாக நீக்காவிட்டால், அது பாரிய வரலாற்றுத் தவறாக அமையும் என தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா மேலும் குறிப்பிட்டுள்ளார். குறித்த கோரிக்கை கடிதத்தின் பிரதிகள், தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் கட்சியின் உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## UNP பிரதித் தலைவர் தெரிவு ...

நடைபெறும் என அவர் தெரிவித்தார்.

மேலும் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் தொடர்பாகவும் இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார். இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவிக்காக பரிந்துரைக்கப்பட்ட எட்டு பேரில் ஒருவரை பிரதி தலைவர் பதவிக்காக தெரிவு செய்யவுள்ளதாக கட்சியின் உயர் மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை, பிரதி தலைவரின் பதவிக்காக வேறு சிலரின் பெயர்களும் பரிந்துரைக்கப்படும் பட்சத்தில் வாக்கெடுப்பின் மூலம் பிரதி தலைவர் செய்யப்படுவார் எனவும் கூறப்படுகிறது.

## சுமந்திரன், ஸ்ரீதரன் குறித்து...

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் கூறுகையில்,

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் ஒரு உறுப்பினர் என்ற வகையில் அவர் அந்தக் கடிதத்தினை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதம் எனக்குக் கிடைத்துள்ளது. அவரால் அனுப்பப்பட்ட கடிதத்தினை நான் இன்னும் முழுமையாகப் பார்க்கவில்லை. அதனை ஒழுங்கு நடவடிக்கைக் குழுவில் சமர்ப்பித்து, விடயங்களை ஆராய்ந்து அந்தக் குழுவில் இருப்பவர்கள் யார் என்பதையும் ஆராய்ந்து தீர்மானித்து முறைப்பாடு பரிசீலிக்கப்படும். இதேவேளை, தவராசாவின் முறைப்பாடு மட்டுமல்லாது ஏற்கனவே வேறு பல முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. சுமந்திரன், ஸ்ரீதரன் மற்றும் குணாளனுடைய முறைப்பாடுகள் என பல முறைப்பாடுகள் இருக்கின்றன. எனவே, இவ்விடயங்கள் தொடர்பாக ஒழுங்கு நடவடிக்கைக் குழு விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்று குறிப்பிட்டார்.



அம்பலந்துவை ஜனாஸா நலன்புரிச் சங்கத்துக்கு புவாத் ஹாஜியார் பவுண்டேஷன் கதிரைகள் மற்றும் கூடாரம் போன்றவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.இந்த ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் இலவச மக்கள் சேவைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த அன்பளிப்பு கிடைக்கப் பெற்றுள்ளதாக ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் பிரமுகர்கள் தெரிவித்தனர். அம்பலந்துவை பிரதேசத்தில் ஜனாஸா நல்லடக்கத்துக்கு அவசியமான கடன், புடைவை வழங்கல் உள்ளிட்ட தேவைகளை இச்சங்கம் இலவச சேவையாக முன்னெடுத்து வருகின்றது. ஜனாஸா வீடுகளுக்கு அவசியமான கூடாரம்,மின்குமிழ் மற்றும் கதிரைகள் என்பனவும் இச்சங்கத்தினால் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.மேற்படி பவுன்டேசனுக்கு ஜனாஸா நலன்புரிச் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது. (பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# தோட்டதுரையை இடமாற்றக்கோரி தொழிற்சங்க போராட்டம்

ஹற்றன் சுழற்சி நிருபர்)

சர்வாதிகாரிபோல் செயற்படும் தோட்டதுரையை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு வலியுறுத்தி அட்டன், செம்புவத்த தோட்ட தொழிலாளர்கள் (12) அன்று தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பளத்தை குறைத்து, நிபந்தனைகளை விதித்து தொழிலாளர்களின் அடிவயிற்றில் அடிக்கும் துரையை வெளியேற்றும்வரை போராட்டம் தொடரும் எனவும் தோட்ட மக்கள் அறிவித்துள்ளனர்.

அட்டன் பிளான்டேசன் நிர்வாகத்தின் கீழ் தான் செம்புவத்த தோட்ட மக்கள் தொழில் புரிகின்றனர். அத்தோட்டத்துக்கு ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் புதிய முகாமையாளர் (துரை) ஒருவர் வந்துள்ளார். அவர் வந்த பின்னரே 'அராஜக முகாமைத்துவம்' ஆரம்பமானது என தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். " வறட்சியான, குளிரான காலத்திலும் 18 கிலோ பறித்தால்தான் ஒரு நாள் பெயர், அவ்வாறு இல்லாவிட்டால் அரை நாள் பெயரே வழங்கப்படுகின்றது. இது தொடர்பில் பல தடவைகள் சுட்டிக்காட்டியும், தொழிற்சங்கங்களை நாடியும் தீர்வு கிடைக்கவில்லை. தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்ட முற்பட்டால் வெளியில் இருந்து ஆட்களை அழைத்துவந்து கொழுந்து பறிக்கும் நடவடிக்கையில் துரை ஈடுபடுகின்றார்.

சம்பளம் குறைவாக வழங்கப்படுவதை சுட்டிக்காட்டினால், மற்றையதொரு வவுச்சர் மூலமே எஞ்சிய கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. இவற்றுக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தயாரானோம். பேச்சுவார்த்தைமூலம் தீர்வு காண்போம். தொழிலுக்கு செல்லுமாறு தொழிற்சங்க தலைவர்கள் அறிவித்தனர். " என்றும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

## தண்டனை பெற்ற... (03 ஆம் பக்கத் தொடர்)

சிலர் இப்போதே உண்ணாவிரதத்தை கைவிட்டுள்ளனர். ஓரிரு தினங்களில் மற்றவர்களும் அதை கைவிட்டு விடுவர். குற்றங்களைப் புரிபவர்களின் பதவி மற்றும் தராதரம் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. அதனால்தான் நாம் பொலிசார், குற்றத் தடுப்பு அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினரை கூட கைது செய்துள்ளோம். வெளியிலுள்ள குற்றவாளிகளை கைது செய்வதற்கு முன்னர் சிறைச்சாலைகளுக்குள் யுத்தம் நடத்த வேண்டியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேசிய மின்... (03 ஆம் பக்கத் தொடர்)

நிறைவடைந்துள்ளதாகவும் மன்னார் காற்றலை மின் உற்பத்தி நிலையத்தின் உயர் அதிகாரி வேலு சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

கடற்கரை பிரதேசத்தில் கிலோமீட்டர் நிலப்பரப்பில் 33 கோபுரங்களை கொண்டதாக இன்று மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 6 கோபுரங்கள் நிறுவப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். தற்போது 30 கோபுரங்களை செயற்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன்மூலம் 103.5 மெகாவோட் மின் சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## உண்மைத் தன்மையை... (03 ஆம் பக்கத் தொடர்)

சந்தைகளில் பிளாஸ்டிக் முட்டைகள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக சமூக வலைத்தளங்கள் மூலம் பரப்பப்படும் விமர்சனங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி வருவதாக மேற்படி சங்கத்தின் தலைவர் உபுல் ரோகண தெரிவித்துள்ளார். (ஸ)

## 405 இலங்கையர்கள்... (03 ஆம் பக்கத் தொடர்)

விமான நிலையத்தில் வைத்தே பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது டன் தனிமைப்படுத்தி லுக்காக தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் விமானநிலையத்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

## அறுநூறு வருட வரலாற்றுப்... (04 ஆம் பக்கத் தொடர்)

ஆலய உற்சவ காலங்களில் பாண்டவர்கள் திரௌபதி கண்ணன் தேவாதிகள் என ஆலயத்தில் கட்டுக்கு நிற்பவர்கள் எக்காரணம் கொண்டும் தங்களது வீடுகளுக்குச் செல்ல முடியாது. அந்தளவிற்கு பயபக்தியுடன் விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஆலய உற்சவத்தின் 18 நாட்களில் முக்கிய வழிபாடாக முதலாம் நாள் பூர்வாங்க கிரியைகள், திருக்கதவு திறத்தல், பாண்டவர்கள் கடல் குளித்து ஆயுதம் கழுவி வந்து ஊர்க்காவல் பண்ணல், கொயேற்றம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. மூன்றாம் நாள் மகாபாரத பாராயண ஏடு திறத்தல் இடம்பெறும். ஏழாம் நாள் சுவாமி எழுந்தருளல் பண்ணல் ( ஸ்ரீ கிருஷ்ணர் அத்தினாபுரம் எழுந்தருளல்) நிகழ்வு மிகவும் எடுப்பாக பாண்டிருப்பு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து இடம்பெறுகின்றது. எட்டாம் நாள் நாட்கால் வெட்டல் நிகழ்வு இடம்பெறும். பன்னிரண்டாம் நாள் கலியாணக்கால் வெட்டல் நிகழ்வும், பதினாறாம் நாள் பாண்டவர்கள், திரௌபதை சகிதம் வனவாசம் செல்லல் நிகழ்வும், பதினேழாம் நாள் அருச்சுனன் தவநிலை செல்லல் காட்சியும், பதினெட்டாம் நாள் மாலை ஆலய உற்சவத்தின் சிகரமாக விளங்கும் தீமிதிப்பு வைபவமும் இடம்பெறுகின்றன. மறுநாள் தீக்குழிக்கு பால் வார்க்கும் பாற்பள்ளயச் சடங்குடன் உற்சவம் நிறைவு பெறுகின்றது.

பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயத்தின் உற்சவங்கள் யாவும் மகாபாரதக் கதையினை அடியொற்றியதாகவே இடம்பெறுகின்றன. மகாபாரதத்தில் தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் இடையில் நடைபெற்ற போரில் பாண்டவர்கள் சந்தித்த சத்திய சோதனைப் பயணங்களை எடுத்துக் காட்டும் வகையிலே திரௌபதை அம்மன் வழிபாடு அமைந்துள்ளது.

இதில் முக்கிய திருவிழாவாக பாண்டவர்கள் வனவாசம் செல்லல், அருச்சுனன் தவநிலை செல்லல், பாண்டவர்கள் திரௌபதை சகிதம் தீப்பாய்தல் ஆகிய நிகழ்வுகள் உற்சவ காலத்தின் இறுதி மூன்று தினங்களும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. இக்காலப் பகுதியில் நாட்டின் நாலாபாகங்களிலிருந்தும் பக்தர்கள் பாண்டிருப்புக்கு படையெடுப்பார்கள். பாண்டிருப்பு மட்டுமல்ல கல்முனைப் பிரதேசமே விழாக்கோலம் பூண்டிருக்கும்.

அற்புதமும், மகிமையும், பழமையும், புதுமையும் நிறைந்த மகா சக்தி ஆலயமாக பாண்டிருப்பு ஸ்ரீதிரௌபதை அம்மன் ஆலயம் திகழ்கின்றது. இந்த ஆலயம் கடந்த 2016 இல் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் கம்பீரமாக காட்சியளிக்கின்றது. பண்பாட்டுக்கும், பக்தி வழிபாட்டிற்க்கும் பேர் போன பாண்டிருப்பு கிராமத்தை எட்டுத்திக்கும் கீர்த்தி பெற வைத்துள்ள திரௌபதை அம்மன் அருளை நிதம் வேண்டி இம்மக்கள் போற்றி வழிபடுகின்றனர்.

இம்முறை முக்கிய திருவிழாக்களான பாண்டவர்கள் திரௌபதை சகிதம் வனவாசம் செல்லல் நிகழ்வு செப்டெம்பர் 30 ஆம் திகதியும், ஒக்டோபர் 01 ஆம் திகதி அருச்சுனன் பாசுபதம் பெறத் தவம் செய்தலும் அரவாணைக் களப்பலியிடலும் நிகழ்வும், ஒக்டோபர் 02 ஆம் திகதி மாலை பாண்டவர்கள் திரௌபதை தேவாதிகள் சகிதம் தீமிதித்தல் நிகழ்வும், 03 ஆம் திகதி காலை பாற்பள்ளயமும் நடைபெறுவுள்ளன.

## அமைச்சர் அமித்ஷா ஆஸ்பத்திரியில் அனுமதி



மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா, முழு உடல் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை 47 லட்சத்து 58 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்படைந்துள்ளனர். அதே போல, 78 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். பொதுமக்கள் மட்டுமல்லாமல், மருத்துவர்கள், காவல்துறையினர், அரசியல் தலைவர்கள் உள்ளிட்டவர்களும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிப்படைகின்றனர்.

அந்தவகையில், கடந்த 2ம் திகதி மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா கொரோனா வைரஸ் தொற்றால் பாதிப்படைந்தார். அதனை அடுத்து, டெல்லியில் உள்ள மேதாந்தா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்ற அவர், பின்னர் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பில் இருந்து குணமடைந்து வீடு திரும்பினார்.

அதனை அடுத்து, கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொரோனாவிற்கு பிந்தைய சிகிச்சைக்காக டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா அனுமதிக்கப்பட்டார். உடல் சோர்வு காரணமாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியானது. பின்னர் குணமடைந்த அவர் வீடு திரும்பினார்.

இந்நிலையில், இன்று மீண்டும் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா அனுமதிக்கப்பட்டுள்ளார். மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா, முழு உடல் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுள்ளது.

# லடாக்கில் இந்திய, சீன படைகள் குவிப்பு; எல்லையில் என்ன நடக்கும் என பதற்றம்



லடாக்கில் இந்தியா, சீனா ஆகிய இரண்டு நாட்டு படைகளும் மிக அருகில் குவிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கியால் சுடும் தூரத்தில் இரண்டு நாட்டு படைகளும் குவிக்கப்பட்டுள்ளது.

லடாக்கில் தற்போது கொஞ்சம் கொஞ்சமாக பதற்றம் அதிகரித்து வருகிறது. ராணுவ மற்றும் ராஜாங்க ரீதியான பேச்சு வார்த்தைகள் எல்லாம் தோல்வி அடைந்து விட்டன. இதனால் எல்லையில் அடுத்து என்ன நடக்கும் என்ற கேள்வி எழுந்துள்ளது. இரண்டு நாடுகளும் எல்லையில் போர் செய்வதை விரும்பவில்லை. ஆனாலும் எல்லையில் அதிக அளவில் இரண்டு நாடுகளும் படைகளை குவித்து வருகிறது. இதனால் எல்லையில் பதற்றம் அதிகரிக்க தொடங்கி உள்ளது.



இந்த நிலையில் இரண்டு நாட்டு படைகளும் நேற்று மிக அருகில் குவிக்கப்பட்டது. துப்பாக்கியால் சுடும் தூரத்தில் இரண்டு நாட்டு படைகளும் குவிக்கப்பட்டுள்ளது. ஸ்பாங்கூர் கணவாய் அருகே சீன படைகள் குவிக்கப்பட்டுள்ளன. பல்லாயிரம் வீரர்கள் எல்லைக்கு கொண்டு வரப்பப்பட்டுள்ளனர். கணவாயின் இன்னொரு பக்கம் இந்திய வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு நாட்டு படைகளும் மிக அருகில் இருப்பதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. பீரங்கிகள், ஆயுதங்களை சீனாவின் படைகள் எல்லைக்கு கொண்டு வந்துள்ளது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியாவும் அங்கு ஆயுதங்களை இறக்கி உள்ளது. இந்தியாவின் நவீன பீரங்கிகள் சீன படையில் இருந்து வெறும் 500 மீட்டர் தூரத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் அடுத்து என்ன நடக்கும் என்ற பதற்றம் எழுந்துள்ளது. லடாக்கில் தற்போது சீனா தனது "militia squads" எனப்படும் சிறப்பு படை பிரிவை எல்லையில் இறக்கி உள்ளது. இது சீனாவின் சிறப்பு பயிற்சி பெற்ற படைப்பிரிவு ஆகும். ராணுவ வீரர்கள் மட்டுமின்றி சிறப்பு பயிற்சி பெற்ற பல்வேறு வீரர்கள் இந்த குழுவில் இடம்பெற்று இருப்பார்கள். இந்தியா லடாக்கில் இருக்கும் முக்கியமான மலைகளை ஆக்கிரமித்துள்ளது.

இந்தியா இதற்காக சிறப்பு மலை பிரிவு படையை எல்லைக்கு அனுப்பி உள்ளது. லடாக்கில் பாங்காங் திசோ அருகே இருக்கும் பெரும்பாலான மலைகளை இந்தியா கைப்பற்றி உள்ளது. இந்த நிலையில் தற்போது சிறப்பு படை பிரிவை சீனாவும் இறக்கி உள்ளது. இந்த படையும் மலை ஏறுவதில் அதிக திறமை கொண்ட படைப் பிரிவு என்பது குறிப்பிடத்தக்கது.

லடாக்கில் மலைகளை கைப்பற்ற சீனா இவர்களை களமிறக்கி உள்ளது. இந்த குழுவில் மலை ஏறும் வீரர்கள், பாக்ஸர்கள், உள்ளூர் சண்டை குழுவில் இருக்கும் வீரர்கள், குங்பு வீரர்கள் ஆகியோர் இடம்பெற்று உள்ளனர். இந்த கலவையான குழுவைதான் எல்லையில் தற்போது சீனா களமிறக்கி உள்ளது. எல்லையில் பொதுவாக போர் வரும் போது மட்டுமே இந்த படைகளை சீனா கொண்டு வரும், தற்போது இவர்கள் எல்லையில் குவிக்கப்பட்டுள்ளது பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

## நடிகை கங்கனா போதை பொருள் பயன்படுத்தினாரா?

நடிகை கங்கனா தடை செய்யப்பட்ட போதை பொருளை பயன்படுத்தினாரா என்பது குறித்து விசாரணை நடத்த மும்பை பொலிஸாருக்கு மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

நடிகை கங்கனா ரணாவத் சமீபத்தில் மும்பையை பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் போல உணருவதாக கூறினார். இதையடுத்து அவருக்கும், மாநிலத்தை ஆளும் சிவசேனாவுக்கும் வார்த்தை போர் வெடித்தது. இதையடுத்து பாந்திரா பாலி ஹில்லில் உள்ள நடிகையின் பங்களாவில் சட்டவிரோத புதுப்பிப்பு பணிகள் நடந்ததாக கூறி மும்பை மாநகராட்சி அதை இடித்து தள்ளியது. இதனால் மோதல் மேலும் முற்றியது. நடிகை கங்கனா முதல்மந்திரி தாக்கரேயை அவரது டுவிட்டர் பக்கத்தில் தரக்குறைவாக விமர்சித்தார். விசாரணை நடத்த உத்தரவு

இந்த பரபரப்புக்கு மத்தியில் நடிகை கங்கனா போதை பொருள் பயன்படுத்தினாரா என்பது குறித்து விசாரணை நடத்த மும்பை பொலிஸாருக்கு மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.



இதுகுறித்து மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், கங்கனா தடை செய்யப்பட்ட போதை பொருள் பயன்படுத்தினாரா என்பது குறித்து விசாரணை நடத்த மாநில அரசு உத்தரவிட்டுள்ளது என்றார்.

நடிகை கங்கனாவுடன், ஆத்யாயன் என்ற நடிகர் உறவில் இருந்தார். அந்த நடிகர் அளித்த பேட்டி ஒன்றில், கங்கனா தடை செய்யப்பட்ட போதை பொருளை பயன்படுத்தினார் எனவும், தன்னையும் போதை பொருளை பயன்படுத்த வற்புறுத்தியதாகவும் குற்றம்சாட்டி இருந்தார்.

இந்த குற்றச்சாட்டை வைத்து தான் கங்கனா போதை பொருள் பயன்படுத்தினாரா என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்த உள்ளனர்.

## சிறுநீரகக் கோளாறினால் இளம் இசை அமைப்பாளர் திடீர் மரணம்



சிறுநீரகக் கோளாறு காரணமாக பிரபல பின்னணி பாடகி அனுராதா பட்வலின் மகன் மரணம் அடைந்தார். பிரபல பின்னணி பாடகி அனுராதா பட்வல். இந்தியில் ஏராளமான பாடல்களை பாடியுள்ளார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி உள்பட வேற்று மொழி படங்களில் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

தமிழில், அருண் விஜய்யின் 'பிரியம்' படத்தில், தில் ரூபா தில் ரூபா, 'கனவே கலையாதே' படத்தில் இடம்பெற்ற பூசு மஞ்சள் பூசு மஞ்சள் உட்பட பல சூப்பர் ஹிட் பாடல்களை பாடியுள்ளார். கமல்ஹாசன் ஏக் துஜே கேலியே படத்தில், மேரே ஜீவன் சாத்தி பாடலை எஸ்.பி.பியுடன் இணைந்து பாடியுள்ளார்.

இவர் கடந்த 2017ம் ஆண்டு பத்மஸ்ரீ விருது பெற்றுள்ளார். இவரது கணவர் அருண் பட்வல். இவர் இசை அமைப்பாளர். இவர்களுக்கு ஆதித்யா பட்வல் (35) என்ற மகனும், கவிதா பட்வல் என்ற மகளும் இருந்தனர். ஆதித்யா பட்வல் இசையமைப்பாளராக இருந்து வந்தார். கடந்த சில வருடங்களுக்கு முன் வெளியான தாக்கரே படத்துக்கு அவர் இசை அமைத்திருந்தார்.

நவாஸுதின் சித்திக் நடித்திருந்த இந்தப் படம் சிவசேனா தலைவர் பால் தாக்கரேவின் பயோபிக். இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு, இவருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டது. சிகிச்சை பெற்று நலமுடன் இருந்தார். இந்நிலையில் மீண்டும் அவர் உடல் நிலை பாதிக்கப்பட்டது. இதனால் மும்பையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார்.

அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மரணம் அடைந்தார். சிறுநீரக கோளாறு காரணமாக அவர் இறந்ததாக டாக்டர்கள் தெரிவித்தனர். ஆதித்யா பட்வல் மறைவுக்கு பழம்பெரும் பாடகியான லதா மங்கேஷ்கர், பாடகரும் இசை அமைப்பாளருமான சங்கர் மகாதேவன் உள்பட ஏராளமான திரையுலகினர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

## இந்தியாவில் இதுவரை 5.62 கோடி கொரோனா பரிசோதனைகள்

நாட்டில் சனிக்கிழமை ஒரே நாளில் 10,71,702 பேருக்கு கொரோனா நோய்த் தொற்றுக்கானபரிசோதனைகள்நடத்தப்பட்டுள்ளதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ஐசிஎம்ஆா்) தெரிவித்துள்ளது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களின் படி, நாட்டில் செப்டம்பர் 12 ஆம் தேதி வரை 5 கோடியே 62 லட்சத்து 60 ஆயிரத்து 928 கொரோனா நோய்த்தொற்று பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. சனிக்கிழமை காலையுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மட்டும் சுமார் 10 லட்சத்து 71 ஆயிரத்து 702 க்கும் மேற்பட்டோருக்கு கொரோனா நோய்த் தொற்றுக்கானபரிசோதனைகள்நடத்தப்பட்டுள்ளன. நாடு முழுவதும் 1,668 பரிசோதனைக்கூடங்கள் இயங்கி வருகின்றன.

இதில் 1,035 ஆய்வகங்கள் அரசுக்கு சொந்தமானவை. நாட்டில் சனிக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் 94,372 பேருக்கு புதிதாக கொரோனா நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதே கால அளவில் 1,114 பேர் பலியாகி உள்ளனர். தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 47,54,357 ஆக அதிகரித்துள்ளது. மொத்த உயிரிழப்பு 78,586ஆக அதிகரித்துள்ளது. குணமடைந்தோா் எண்ணிக்கை 37,02,596ஆக உயா்ந்துள்ளது. நாடு முழுவதும் தற்போது 9,73,175 பேர் நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.


SINCE 1892

FINTREX finance

பின்ட்ரெக்ஸ் பினான்ஸ் லிமிடெட்
மாபெரும் ஏல விற்பனை

130 டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்கள்
மற்றும் மோட்டார் சைக்கிள்கள்
2020 செப்டம்பர் 20 ஞாயிற்றுக்கிழமை
இல.63, இசிபதன மாவத்தை, கொழும்பு 05
என்ற முகவரியில் அமைந்துள்ள
எமது முதன்மை மற்றும் ஏலவிற்பனை நிலையத்தில்
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரம் :

| மோட்டார் கார்கள் | | | | டுவல் பேபர்ஸ்: | | | |
|---|---|---|---|---|---|---|---|
| NW CBD | xxxx | சுசூகி -DAA-MH55S | 2017 | WP NB- | xxxx | டொயோட்டா-ஹைஏஸ் TRH224 | 2008 |
| SG CBD- | xxxx | சுசூகி-DAA-MH55S | 2017 | 57- | xxxx | நிஸான்-VYE24 | 1990 |
| WP CBC | xxxx | சுசூகி-DAA-MH55S | 2017 | | | | |
| WP CBC- | xxxx | மஸ்டா-DAA-MM42S | 2015 | லொறிகள்: | | | |
| WP CAD- | xxxx | ஹொண்டா-DAA-RU3 வெசெல் | 2014 | WP LI- | xxxx | டாட்டா-LPT 709 | 2011 |
| WP KW- | xxxx | டொயோட்டா-DAA-ZVW30-பிரியஸ் | 2011 | CP HB- | xxxx | மஸ்டா-பொங்கோ | 1997 |
| WP KN- | xxxx | டொயோட்டா - பிரியஸ் | 2009 | | | | |
| WP KW- | xxxx | டொயோட்டா-DAA-ZVW30 பிரியஸ் | 2012 | டிரக்குகள்: | | | |
| NW JA- | xxxx | டொயோட்டா- கொரல்லா | 2004 | WP LA- | xxxx | லங்கா அசோக் லேலண்ட்-டாரஸ் | 2005 |
| 64 | xxxx | BMW-325TD54/D | 1994 | | | | |
| வேன்கள்: | | | | மினி டிரக்குகள்: | | | |
| WP NC- | xxxx | KDH வேன | 2010 | SG PP- | xxxx | மஹின்ட்ரா-கியோ லோட் கரியர் | 2010 |

மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள்:
பஜாஜ் மற்றும் TVS முச்சக்கர வண்டிகள் மற்றும் பஜாஜ் பல்சர், **பஜாஜ் CT 100**, பஜாஜ் டிஸ்கவர், பஜாஜ் பிலெட்டினா, ஹீரோ அப்ரிலா, ஹீரோ டேஷ், **ஹீரோ டிலெக்ஸ்**, ஹீரோ டெஸ்டினி, **ஹீரோ கிரெஸியா**, ஹொண்டா ஹொனெட், **ஹீரோ I ஸ்மாட்**, ஹீரோ கரிஷ்மா R, ஹீரோ மெஸ்ட்ரோ, **ஹீரோ மெஸ்ட்ரோ எட்ஜ்**, ஹீரோ பிலெஷர், **ஹீரோ எக்ஸ்ரீம் ஸ்போட்**, ஹொண்டா CD 110, **ஹொண்டா டியோ**, ஹொண்டா நவி, **KTM டுக்**, TVS அபாச்சி, **TVS மெட்றோ**, TVS-NTORQ, **TVS ஸ்கூட்டி பெப்ட்**, TVS ட்விஸ்டர், **TVS டிரம்**, TVS ஸ்போட், **யமஹா அல்பா**, யமஹா FZ, **யமஹா ரே ZR** மோட்டார் சைக்கிள்கள் என்பன.

பார்வையிடல் - செப்டம்பர் 17 வியாழக்கிழமை முதல்
இல. 346, மானல்வத்த, பொலேகல, கோணவல, களனி என்னுமிடத்தில்
(காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை)
(ஏல விற்பனை தினத்தில் வாகனங்களைப் பரிசோதிக்க முடியாது)

மேலதிக விபரங்களுக்கு **www.sandslanka.com** என்ற எமது இணைய தளத்தைப் பார்க்கவும்.

விற்பனை நிபந்தனைகள்

- **சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் ஏலவிற்பனை நடைபெறும்.**
- பொருட்களைப் பார்வையிட கொள்வனவாளர்கள் தொகுதி அடிப்படையிலேயே அனுமதிக்கப்படுவார்கள்.
- சுகாதார அமைச்சின் COVID 19 வழிமுறைகளுக்கு அமைய, முதலில் வந்தவர்களுக்கு முதல் சேவை என்ற அடிப்படையில் கொள்வனவாளர்கள் வரையறுக்கப்பட்ட அடிப்படையில் அழைத்துச் செல்லப்படுவார்கள்.
- **நுழைவு:** ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக **மீளளிக்கப்படாத** ரூபா 2,000/- செலுத்துவதுடன், **மீளச் செலுத்தப்படும்** ரூபா 25,000/- ஐ வைப்புச் செய்தல் வேண்டும். பதிவு நடவடிக்கைகளுக்காக காலை 8.30 மணிக்கு நுழை வாயில் திறக்கப்படும்.
- கொடுப்பனவுகள்: விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் **மீளளிக்கப்படாத** 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் **2020 செப்டம்பர் 23 ஆந் திகதி புதன்கிழமை** பி.ப 3.00 மணிக்கு முன்னர், கொழும்பு 07, தர்மபால மாவத்தை, இல. 101 என்ற முகவரியில் அமைந்துள்ள **பின்ட்ரெக்ஸ் பினான்ஸ் லிமிட்டெட்** நிறுவனத்தில் காசாகச் செலுத்தப்பட வேண்டும். அன்றைய தினமே வாகனத்தையும் அங்கிருந்து அகற்ற வேண்டும்.
- **எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.**
- ஏலதாரரின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்

தலைமை அலுவலகம்:
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி: 081-2227593
தொலை/ஃபக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

CELEBRATING 125 Years

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்ட்ன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671467, 011-2671468
தொலை/ஃபக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

011 2671468
www.sandslanka.com





யாழ்ப்பாணம் – நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) வருடாந்தத் திருவிழா நேற்று காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது. எதிர்வரும் 21ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும் ,22ஆம் திகதி காலை தீர்த்த திருவிழாவும் இடம்பெறவுள்ளன. படங்கள்: ஐ.சிவசாந்தன்

## தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து தப்பியவர் மன்னாரில் கைது

**மன்னார் குறுப் நிருபர்**

வவுனியா பெரியகாடு இராணுவ முகாம் தனிமைப்படுத்தல் நிலையத்தில் வெளிநாட்டிலிருந்து விசேட விமானத்தில் அழைத்துவரப்பட்டு தங்க வைக்கப்பட்டிருந்த சிலாபம் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தப்பி ஓடியுள்ள நிலையில் குறித்த நபர் நேற்று முன்தினம் மாலை மன்னார் சௌத்பார் புகையிரத நிலைய பகுதியில் வைத்து சௌத்பார் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் கட்டார் நாட்டிலிருந்து விசேட விமானத்தில் அழைத்து வரப்பட்டிருந்த சிலாபம் மாதம்பே பகுதியைச் சேர்ந்த விஜித்த றுவான் குணவர்த்தன (வயது36) என்ற நபர் வவுனியா பெரியகாடு இராணுவ முகாம் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் தப்பிச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் குறித்த நபர் நேற்று முந்தினம் மாலை 6.30 மணியளவில் மன்னாரில் கைது செய்யப்பட்டார்.

## யாழ். பொம்மைவெளி வசந்தபுரத்தில் பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்




**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட பொம்மை வெளி வசந்தபுரம் பிரதேச மக்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படுவதாக கூறி பழைய வீட்டை இடித்து புதிய வீட்டுத் திட்டத்திற்கு தயாராகுமாறு கூறிய அரச அதிகாரிகளினால் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மிகவும் தாழ் நிலப் பிரதேசமான வசந்தபுரம் பொம்மை வெளிமக்கள் மழை காலத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால் அவர்களுக்கு தற்பொழுது வீடு எதுவும் இல்லை. அரசாங்க அதிகாரிகளால் பழைய வீட்டினை அழித்து புதிய வீடு கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும் இந்த அரசாங்கத்தினால் வீட்டுத் திட்டத்திற்கான படங்கள் எதுவும் வழங்கப்படவில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினர்.

அத்துடன் அரச அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் நடந்து கொள்வதாகவும் தாம் புறக்கணிக்கப்படுவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினர். குறிப்பாக இந்த பிரதேசத்தில் 92 குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

மழை காலம் நெருங்குவதால் தங்களுக்கான வீட்டுத் திட்டத்தை துரிதப்படுத்தி தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

மேலும் தமக்கான வீட்டுத் திட்டத்தில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு பல தரப்பினரிடம் கோரிக்கை விடுத்தும் யாரும் கண்டு கொள்ளவில்லை என விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ் விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வருமாறும் கோசமெழுப்பினர்.

## அனுமதிப்பத்திரமின்றிய மதுபானங்கள் கைப்பற்றல்

**மன்னார் குறுப் நிருபர்**

அனுமதிப்பத்திரமின்றி கொழும்பில் இருந்து மன்னாருக்கு கொண்டு வரப்பட்ட ஒரு தொகுதி மதுபான போத்தல்கள் நேற்று முன்தினம் மாலை மன்னார் பொலிஸார் கைப்பற்றியுள்ளதோடு, இரு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.



மன்னார் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களுக்கு அமைவாக, மன்னார் பொலிஸ் நிலைய போதைப்பொருள் தடுப்பு பிரிவினரும் இணைந்து மதுபான போத்தள்களை கைப்பற்றியுள்ளனர்.

அனுமதிப்பத்திரம் இன்றி கொழும்பில் இருந்து மன்னார் முருங்கன் பகுதிக்கு கொண்டு வரப்பட்டு மன்னார் சௌத்பார் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்ட போதே மாலை மன்னார் தள்ளாடி சந்தியில் வைத்து பொலிஸார் கைப்பற்றி உள்ளனர்.

பார ஊர்தி ஒன்றினுள் பியர் போத்தல்களை அடுக்கி வைத்து சூட்சுமமான முறையில் அனுமதிப் பத்திரமின்றி 750 மில்லி லீட்டர் கொண்ட 660 மதுபான போத்தல்கள் கொண்டு வந்த போதே மன்னார் தள்ளாடி சந்தியில் வைத்து பொலிஸார் கைப்பற்றியுள்ளதோடு. அனுராதபுரத்தை சேர்ந்த 29 மற்றும் 39 வயது இரு சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மாங்குளத்தில் 200 ஏக்கர் காணி கோரல்; மக்கள் எதிர்ப்பு

**மாங்குளம் குறுப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள மாங்குளம் பகுதியில் வவுனியா,யாழ்ப்பாணத்தினை சேர்ந்தவர்களுக்கு 200 ஏக்கர் காணியினை வழங்க மாங்குளம் பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தினை சேர்ந்த பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காணி இல்லாத நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். இன்று வரை அவர்களுக்கான காணிகள் வழங்கப்படாத நிலையில் மாங்குளம் பகுதியில் வெளிமாவட்டத்தினை சேர்ந்த 29 பேர் 200 ஏக்கருக்கு மேற்பட்ட காணியினை கோரியுள்ள நிலையில் குறித்த காணிகளை வழங்குவது தொடர்பில் தீர்மானிப்பதற்காக ஒட்டுசுட்டான் பிரதேச செயலக காணிப்பயன்பாட்டு திட்டமிடல் குழுக்கூட்டத்தில் காணியினை கோரியவர்களுக்கு காணி வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணம்,வவுனியாவைச் சேர்ந்தவர்களுக்கு தலா 40 ஏக்கர் வரையில் காணியினை கோரியுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிக்கும் எத்தனையோ குடும்பங்கள் விவசாயம் செய்யவும் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்குமாக ஒரு துண்டு காணி இல்லாத நிலையில் அரசாங்கம் காணிகளை வழங்கக்கூட முன்வராத நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள்

இவ்வாறான நிலையில் வெளி மாவட்டத்தினை சேர்ந்தவர்களுக்கு பண்ணை அமைப்பதற்கு காணிகளை வழங்கி மாவட்டத்தினை சேர்ந்தவர்களை தொடர்ச்சியாக கூலித்தொழிலாளியாகவும் வறுமைக்கோட்டிற்கு கீழ் தள்ளும் செயற்பாடாகவே இதனை பார்க்க முடிவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான காணி வழங்கும் நடவடிக்கைக்கு மாங்குளம் பிரதேச மக்கள் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளதுடன் போராட்டம் செய்யவும் முடிவெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்கள்

இது தொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக காணி பகுதி உத்தியோகத்தர் ஒருவரை தொடர்பு கொண்ட போது,..

தமது பிரதேச செயலகத்திற்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை நிராகரிக்க முடியாது எனவும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு அதன் அடிப்படையில் மக்களினதும் பொது அமைப்புக்களினதும் காணிப் பயன்பாட்டு குழுவினரின் தீர்மானங்களின் பின்னரே காணி வழங்குவது தொடர்பாக முடிவெடுக்க முடியும் என்றார்.

### மன்னார் மாவட்ட ஈரோஸ் அமைப்பாளர்

## அரசுடன் இணைந்து மீனவர் பிரச்சினையை தீர்க்க முடிவு

**தலைமன்னார் நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் செறிந்து வாழும் மீனவ மற்றும் விவசாயிகளின் பிரச்சினைகளை அரசுடன் இணைந்து செயல்படும் கடற்தொழில் நீரியல்

வளத்துறை அமைச்சர் மூலம் தீர்த்து வைப்பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கையாக ஈரோஸ் கட்சி செயல்பட இருக்கின்றது என ஈழவர் ஜனநாயக முன்னணியின் அமைப்பு (ஈரோஸ்) கட்சியின் மன்னார் மாவட்டத்தின் அமைப்பாளர் ஜே.யோகராஜ் குரூஸ் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தின் ஈரோஸ் கடசியின் நிர்வாகக் கூட்டம் பேசாலையில் சனிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஈழப்புரட்சி அமைப்பு உப தலைவர் வி.சசிதரன், மன்னார் மாவட்ட அமைப்பாளர் ஜே.யோகராஜ் குரூஸ், மாவட்ட செயலாளர் நாதன் குலாஸ் மற்றும் கிராம மட்ட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

அரசுடன் இணைந்து செயல்படும் ஒரு தமிழ் கட்சிக்கு ஆதரவு கொடுத்து கல்வி, பொருளாதார மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய விடயங்களில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் எனவே தொடர்ந்து அவ் கட்சியுடன் பயணிக்கவும் அனைத்து உறுப்பினர்களையும் ஒன்று சேர்க்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டே கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. ஈரோஸ் மன்னார் மாவட்ட அமைப்பாளர் ஜே.யோகராஜ் குரூஸ் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் எமது மாவட்டத்தின் கல்வி, பொருளாதார அபிருத்திகளுக்கான கருத்துக்களை பெற்று இதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும் நடவடிக்கையாகவே நாங்கள் எதிர்காலத்தில் எங்கள் கட்சியின் அரசியல் முன்னெடுப்பாக மேற்கொள்ள இருக்கின்றோம்.

குறிப்பாக மன்னார் மாவட்ட மீனவர்கள் பல நூற்றுக்கணக்கான இந்திய இழுவைப் படகுகள் எமது கடற் பிராந்தியத்துக்குள் அத்துமீறி நுழைந்து பாரிய மீன்பிடி களங்களைக் கொண்டு மீன்பிடியில் ஈடுபட்டு வருவதால் எமது மாவட்ட மீனவ சமூகம் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றது.

இவ் விடயத்தை இன்றைய எமது கடற்தொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவதால் அவர் மூலம் எமது மன்னார் மாவட்டத்தில் செறிந்து வாழும் எமது மீனவர்கள், விவசாயிகளின் பிரச்சினைகளை அவரூடாக தீர்த்துக் கொடுப்பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் எடுக்கின்றோம என்றார்.



வவுனியாவில் வீதியை கடக்க முற்பட்ட விஷேட தேவைக்குட்பட்ட வயோதிபருக்கு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உதவிபுரிவதை படத்தில் காணலாம். படம் வவுனியா நிருபர்



மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் இவ்வருடம் கா.பொ.த.சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு கணித பாட மாதிரி வினாத்தாள் அடங்கிய புத்தகம் அன்பளிப்பு செய்யப்பட்ட போது. படம்: மன்னார் குறுப் நிருபர்

## சிவில் பாதுகாப்பு திணைக்கள வவுனியா மாவட்ட அலுவலகம் திறப்பு



**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் மாவட்ட அலுவலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் ஓய்வு பெற்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவால் இவ் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.சிவில் பாதுகாப்பு பிரிவினரின் சேவைகளை விஸ்தரித்து அவர்களுக்கான தேவைகளை பெற்றுக் கொடுக்கும் முகமாக இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் சிவில் பாதுகாப்பு திணைக்கள வவுனியா அதிகாரிகளுடன் கலந்துரையாடலும் இடம்பெற்றது.இதில் சிவில் பாதுகாப்பு திணைக்கள வவுனியா வலய கட்டளை அதிகாரி ருவான் மிலாவான், பொலிஸ் அதிகாரிகள், சிவில் பாதுகாப்பு பிரிவினர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## வவுனியாவில் ஹெரோயினுடன் 5 பேர் கைது

**வவுனியா விசேட நிருபர்**

வவுனயாவில் ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருட்களுடன் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

வவுனியா சிதம்பரபுரம், தேக்கவத்தை, மாமடு ஆகிய பகுதிகளிலேயே குறித்த 5 பேரும் ஹெரோயின் மற்றும் கஞ்சா போதைப் பொருட்களுடன் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்டவிசேடநடவடிக்கைகளின் போதே போதைப் பொருட்கள் மீட்கப்பட்டன.

வவுனியா மாமடு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது 2 கிலோ கேரள கஞ்சா மற்றும் 2 கிராம் ஹெரோயின் என்பவற்றை மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மோட்டார் சைக்கிளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், சிதம்பரபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 420 மில்லிகிராம் மற்றும் 310 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், தேக்கவத்தை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது 390 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் 43,000 ரூபாய் பணம் என்பவற்றுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்ட 5 பேரிடமும் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிசார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# சமுர்த்தி திணைக்களத்தினால் மக்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்பட வேண்டும்

## மாவட்டப் பணிப்பாளர் சப்றாஸ்

(பெரியநீலாவணை விசேட நிருபர்)

சமுர்த்தி திணைக்களம் வெறும் முத்திரைகளை வழங்கும் திணைக்களமாக இல்லாமல் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துகின்ற திணைக்களமாக மாற்றப்பட வேண்டிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. என சமுர்த்தி திணைக்களத்தின் அம்பாரை மாவட்ட பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்றாஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைய உள்ளூர் விவசாய உற்பத்திகளை அதிகரிக்கச் செய்யும் தேசிய வேலைத் திட்டத்திற்கு அமைய தற்போது விவசாய உற்பத்தி மற்றும் ஊக்குவிப்பு வாரம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்ட பயிர்களை வழங்கி வைக்கும் நிகழ்வு மருதமுனை நற்பிட்டிமுனை சமுர்த்தி சமூக அடிப்படை வங்கியில் அதன் முகாமையாளர் எம்.எம்.எம்.முபீன் தலைமையில் நடைபெற்றது. இங்கு உரையாற்றும் போதே மாவட்ட பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரசாங்கம் சுபிட்சமான இலங்கை எனம் இறுக்கமான பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தி உள்ளது. இதனூடாக பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை அரசு வகுத்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி இறக்குமதியை குறைத்து உள்நாட்டு உற்பத்தியை கூட்டி அதனூடாக எமது தேவையை உள்நாட்டிலேயே பூர்த்தி செய்யப்பட வேண்டும் மேலதிக உற்பத்திகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருமானத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.



வறுமையை இல்லாமல் செய்வதற்கு சமுர்த்தி திணைக்களம் பெரும் பங்களிப்பினை வழங்கி வருகிறது. எதிர்காலத்தில் இந்த திணைக்களத்தை, சமுர்த்தி வங்கிகளை கணினிமையப்படுத்தி புதிய முறையை அறிமுகப்படுத்தவுள்ளோம். இதற்கான பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

சிங்கபூர் நாட்டில் படித்தவர் முதல் பாமரர் வரை எல்லோருடைய வீடுகளிலும் வீட்டுத் தோட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எமது நாட்டில் தனியாள் வருமானத்தில் உணவுக்கான செலவாக அறுபது வீதம் செலவழிக்கப்படுகிறது. எனவே எதிர்காலத்தில் உள்ளூர் உற்பத்திகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு சமுர்த்தி பயனாளிகள் பங்களிப்பு செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி.ஏ.நஜீம், திட்ட முகாமையாளர் ஏ.எம்.எஸ்.நயீமா உட்பட திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட தொழில் வழிகாட்டல் பயிற்சிக்கான புதிய கட்டட திறப்பு விழா பாடசாலை அதிபர் நா .சந்திரலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது மட்டக்களப்பு கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரி .உதயகரன், உயர் அதிகாரிகள் சகிதம் திறந்து வைப்பதனை காணலாம். (படம்; ஆரையம்பதி தினகரன் நிருபர்)

# உறங்கிக் கொண்டிருந்த பெண்ணின் தாலிக்கொடி கத்திமுனையில் அபகரிப்பு

மட்டக்களப்பு குறூப் நிருபர்

தூங்கிக்கொண்டிருந்த பெண்ணின் கழுத்திலிருந்த தாலியை கத்தியை வைத்து பறித்தெடுத்த திருடன் தப்பிச்சென்ற சம்பவம் நேற்றுமுன்தினம் (12) அதிகாலை காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதியில் இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி தெரிவித்தார்.

ஆரையம்பதி பிரதான வீதியிலுள்ள பாடசாலை ஆசிரியையான பெண் தனது வீட்டில் கணவர் மற்றும் பிள்ளைகளுடன் தூங்கிக் கொண்டிருந்த பொழுது பெணணின் கழுத்தில் கத்தியை வைத்து மாலையை பறித்த போது அப்பெண் கூச்சலிடவே மாலையை பறித்தெடுத்துக் கொண்டு தப்பியோடியதாக பொலிசார் தெரிவித்தனர்.

# சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம்

திருமலை மாவட்ட விசேட நிருபர்



கிண்ணியாவைச் சேர்ந்த சராப்தீன் நஸீரா என்பவர் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் தற்போது கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பிரதி அதிபராக கடமையாற்றுகிறார். கிண்ணியா பிரதேசத்தில் அதிபர் சேவை தரமுடைய ஒரே ஒரு சட்டத்தரணியான இவர், ஓய்வுபெற்ற கிராம சேவை அதிகாரியான எம்.எச். சராப்தீன் மற்றும் உம்மு ஜெமீலா ஆகியோரின் கனிஷ்ட புதல்வியும் ஆவார்.

# அரச நாடக விழாவில் 'பறப்பிழந்த வண்ணத்துப்பூச்சி'க்கு எட்டு விருதுகள்

மண்டூர் குறூப் நிருபர்

அரச நாடக விழா வெள்ளிக்கிழமை (11) இடம்பெற்றபோது கலாசார அமைச்சிடமிருந்து "பறப்பிழந்த வண்ணத்துப்பூச்சி" நெடும் நாடகம் 2 ஆம் இடத்தைப் பெற்று எட்டு விருதுகளையும் 'மண்குழித்து' நாடகம் முதல் சிறந்த நாடகமாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழில் நான்கு குறுநாடகங்களும் இரு நெடுநாடகங்களும் முதல்கட்ட போட்டியில் தேறி இறுதிப்போட்டிக்கு தெரிவாகி இருந்தது.

பறப்பிழந்த வண்ணத்துப்பூச்சி நெடும் நாடகம் துணை நடிகர் விருது, சிறந்த நடிகை விருது, ஒப்பனைக்காக இரு விருது, ஆடை அலங்காரத்திற்காக இரு விருது, பிரதியாக்கத்திற்காக இரு விருது உட்பட எட்டு விருதுகளை "பறப்பிழந்த வண்ணத்துப்பூச்சி" பெற்றுள்ளது.

சிறந்த நாடகமாக 'மண்குழித்து' முதல் நாடகமாக தெரிவு செய்யப்பட்டதுடன், குறு நாடகம் மற்றும் நெடு நாடகத்தில் விருது பெற்றவர்கள் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் படித்துக் கொண்டிருக்கின்ற, படித்து முடித்து நாடகச் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மட்டு. ஹோமியோபதி வைத்திய நிலையத்தில் மருந்துகள் இன்மையால் நோயாளர்கள் பாதிப்பு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு நகரத்தில் இயங்கி வரும் அரச ஹோமியோபதி வைத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு கடந்த மூன்று மாதங்களாக மருந்துகள் வழங்கப்படாததையிட்டு நோயாளர்களால் கவலையை தெரிவித்துள்ளனர்.

குறித்த வைத்திய நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் (11) ஒன்றும் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வைத்திய சாலைக்கு நாள் தோறும் 40 தொடக்கம் 50 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களுக்கு கடந்த மூன்று, நான்கு மாதங்களாக மருந்துகள் வழங்கப்படவில்லை எனவும், வைத்தியர் மருந்து வரவில்லை நான் என்ன செய்வது என கூறுவதாகவும், மருந்து இல்லை என அறிவித்தல் போட்டுள்ளதாகவும், இவ்வைத்தியசாலையில் வேறு வசதிகளும் இல்லை எனவும், பாதிக்கப்பட்ட நோயாளர்கள் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வைத்திய நிலையத்திற்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி எம்.ஏ.எம்.முனீர் கருத்து வெளியிடுகையில், இலங்கை மருத்துவ சபையின்கீழ் இயங்கிவரும் இவ்வைத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றரை வருட காலத்தில் சுமார் ஐயாயிரம் நோயாளர்கள் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வருவதாகவும், சிகிச்சை பயனளிக்கின்றது என்ற உறுதியான நம்பிக்கையில் நாளாந்தம் 40 தொடக்கம் 50 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்வதாகவும், இவ்வைத்திய நிலையம் ஆரம்பிக்கும்போதே 20 வீதமான மருந்துகளுடன்தான் ஆரம்பிக்கப் பட்டதாகவும் தெரிவித்தார்.

மேலும் ஒரு வைத்தியரும் ஒரு மருந்து வழங்குனர் உட்பட இருவர் மாத்திரம் அலுவலக தளபாட வசதிகளுமற்ற நிலையில் மாநகர சபையின் தளபாடங்களுடன் இவ் வைத்திய சிகிச்சை நிலையம் இயங்கி வருகின்றது.

புதிய அமைச்சர் சிசிர ஜயகொடி ஹோமியோபதி வைத்திய முறைமையினை மேம்படுத்தி வருகின்றார். அவர் இவ்வைத்திய முறையினை முன்னிலைப்படுத்தி அடுத்த கட்டத்திற்கு கொண்டுசெல்வார் என நம்பிக்கை தெரிவித்தார்.

# கல்முனை கிரீன்பீல்ட் பகுதியில் கொட்டப்பட்ட திண்மக்கழிவுளை அகற்ற நடவடிக்கை

(நற்பிட்டிமுனை விசேட நிருபர்)

கல்முனை கிரீன்பீல்ட் வீட்டுத் தொகுதிக்குப்பின்னால்அமைந்துள்ள பகுதியில் கொட்டப்பட்டிருந்த திண்மக்கழிவுகள் வெள்ளிக்கிழமை (11) கல்முனை மாநகர சபையினால் முற்றாக அகற்றப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக திண்மக் கழிவுகளி னால் இப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும்ம யானைகள் படை யெடுப்பதாகவும் இதனால் மக்கள் பல்வேறு அசௌகாரியங்களை எதிர்நோக்குவதாக சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இதையடுத்து மாநகர முதல்வர் ஏ.எம் றகீபின் அவசர அறிவுறுத்தலின் பேரில் மாநகர ஆணையாளர் எம்.சி.அன்சார், மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அர்ஷாத் காரியப்பர் ஆகியோர் மேற்கொண்ட அவசர நடவடிக்கையின் பயனாக மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினால் இக் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன.



கல்முனைப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற திண்மக் கழிவுகள் கிரீன்பீல்ட் வீட்டுத்தொகுதிக்கு பின்னாலுள்ள இடத்தில் தற்காலிகமாக ஒன்றுசேர்க்கப்பட்டு, பின்னர் அவை அட்டாளைச்சேனை, பள்ளக்காடு பகுதிக்கு அனுப்பப் படுவது வழக்கமாகும். எனினும் பெக்கோ இயந்திரம் பழுதடைகின்ற சில சந்தர்ப்பங்களில் இக்கழிவுகளை முகாமைத்துவம் செய்வதிலும் அவற்றை உரிய நேரத்தில் பள்ளக்காட்டுப் பகுதிக்கு அனுப்புவதிலும் சில தடங்கல்கள் ஏற்படுகின்றன.

இவ்வாறான பிரச்சினை காரணமாகவே கல்முனை கிரீன்பீல்ட் வீட்டுத்தொகுதிக்குப் பின்னால் அமைந்துள்ள பகுதியிலிருந்து திண்மக்கழிவுகளை அகற்றுவதில் தாமதம் ஏற்பட்டதாக கல்முனை மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அர்ஷாத் காரியப்பர் தெரிவித்தார்.

கல்முனை மா ந கர வாழ் மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்கு எமது மாநகர சபை மிகவும் பொறுப்புடன் முன்னிற்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# மூதூரில் காட்டு யானைகள் அட்டகாசம்

( தோப்பூர் தினகரன் நிருபர் )

மூதூர், பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கட்ட பறிச்சான் தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் அறபா நகர் கிராமத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதாக பிரதேச வாசிகள் கூறுகின்றனர்.

வெள்ளிக்கிழமை (11) அதிகாலை கிராமத்திற்குள் உட்புகுந்த காட்டுயானைகள் விவசாயி ஒருவரின் தோட்டத்திலுள்ள 11. தென்னை மரங்களை அழித்து நாசப்படுத்தியிருப்பதாக கூறுகின்னர்.

மேலும் இது தவிர மூதூரின் இன்னும் சில இடங்களிலும் காட்டு யானைகளின் தொல்லை காணப்படுவதாக பிரதேச வாசிகள் கூறுகின்றனர்.

இதனை கட்டுப்படுத்த உரிய பகுதியினர் கவனம் செலுத்தவேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



## கிழக்கில் டெங்கு ஒழிப்பு துப்புரவுப் பணிகள் தீவிரம்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் தற்பொழுது மழைக் காலநிலை ஆரம்பித்துள்ளதை அடுத்து , டெங்கு ஒழிப்பு துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வருடம் ஜனவரி முதல் செப்டம்பர் முதல் வாரம் வரையான காலப்பகுதியில் 25 பேர் மரணித்துள்ளதாகவும், 26,000 க்கும் அதிகமானவர்கள் டெங்கு நோய்த் தாக்கத்திற்குள்ளாகியுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் தகவல் தெரிவிக்கின்றது. சுரட்டை, யோகட் கப், பழைய ரயர், குரும்பை மட்டை, பூச்சாடி உள்ளிட்ட நீர்தேங்கும் பொருட்கள்

தொடர்பில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது



அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் சாரண ஆசிரியர்களுக்கு ஆணைப்பத்திரம் வழங்கும் நிகழ்வு நிந்தவூரில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்ட சங்கத்தின் தலைவர் யூ.எல்.எம்.ஹாசிம், மாவட்ட ஆணையாளர் எஸ்.ரவீந்திரன்,உதவி ஆணையாளர்,எம்.ஐ.உதுமாலெவ்வை ஆகியோர் பத்திரங்களை வழங்கி வைப்பதை காணலாம். (படம்;பாலமுனை தினகரன் நிருபர்)

# சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக நிந்தவூர் ஜஃபர் பதவி உயர்வு

(நிந்தவூர் குறூப் நிருபர்)

நிந்தவூர் 16ஐ சேர்ந்த பொலிஸ் அத்தியட்சகர் தரத்தில் (SP), உதவிப் பணிப்பாளராக கடமையாற்றிக் கொண்டிருக்கும், ஏ.முஹம்மது ஜஃபர் கடந்த (10) ஆம் திகதி முதல் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சர்வதேச பொலிஸ் சங்கத்தின் நிரந்தர அங்கத்தவராகவும், இலங்கை பிரிவின் பொருளாளராகவும் பதவி வகிக்கின்றார். மும்மொழிகளிலும் சிறப்பாக சேவையாற்றக் கூடிய திறமையால் பொலிஸ் திணைக்களத்தின் பல புலமைப் பரிசில்களை பெற்றுள்ளதுடன், உள்நாட்டிலும் மற்றும் ஜெர்மனி, ஆஸ்திரேலியா, இந்தியா போன்ற நாடுகளினால் வழங்கப்பட்ட விஷேட பயிற்சிகளையும் பெற்றுள்ளார். 2010 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சமாதான படையில் சேர்ந்து ஹெயிட்டி நாட்டில் ஒரு வருட சேவையையும் வழங்கியுள்ளார்.



நிந்தவூர் அல் அஷ்றக் தேசிய பாடசாலையின் பழைய மாணவரான இவர், நிந்தவூர் பிரதேசத்தின் முதன்முதலாவது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக வரலாற்றில் இடம் பிடித்துள்ளார்.

# நிந்தவூரில் வீட்டுத் தோட்ட ஊக்குவிப்பு செயற்பாடு

(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

ஜனாதிபதியின் எண்ணக்கருவில் உருவான சௌபாக்யா தேசிய உணவு உற்பத்தியினை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் வீட்டுத் தோட்டச் செய்கையினை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் தற்போது நாடு தழுவிய ரீதியில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக, நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள நிந்தவூர் பத்தாம் பிரிவு அட்டப்பள்ளம் பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகள் மத்தியில் மனைப் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பும் வகையில், வீட்டுத் தோட்டப் பயிர்கள், நாற்றுக்கள் மற்றும் பயிர் விதைகள் போன்றன வியாழக்கிழமை (10) வழங்கி வைக்கப்பட்டன.

வலய சமுர்த்தி முகாமையாளர் எம்.இக்ராம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது, சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.சி. அன்வர், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.எஸ். பரீரா, சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் வி.சிறிநாதன் உள்ளிட்ட துறைசார்ந்த முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது குறித்த பிரதேசத்தில் வீட்டுத் தோட்டத்தினை ஊக்குவிக்கும் விஷேட செயன்முறைக் கருத்தரங்கொன்று இடம்பெற்றதுடன், வீட்டுத் தோட்ட உரிமையாளர்கள் இப் பயிர்ச் செய்கையின்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்தும் அதிகாரிகளால் கேட்டறியப் பட்டன. அத்தோடு இப்பிரதேசத்தில் உள்ள பல்வேறு வீட்டுத் தோட்டங்கள் விவசாயத் துறை அதிகாரிகளால் பார்வையிடப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது.

# சுற்றுலாத்துறையை மீள கட்டியெழுப்ப நடவடிக்கை

## பொத்துவிலில் அமைச்சின் செயலாளர்

அம்பாறை சுழற்சி நிருபர்)



கொவிட்19 வைரஸ் தொற்றின் காரணமாக, பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத் துறையை, மீள கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கையை சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராய்ச்சி முன்னெடுத்து வருகின்றார்.

பொத்துவில், அறுகம்பை சுற்றுலா பிரதேசத்தை அபிவிருத்தி செய்தல் தொடர்பிலும், அப்பிரதேசத்திலுள்ள குறைபாடுகளை கண்டறியும் பொருட்டும், சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழுவினர் அறுகம்பை பிரதேசத்திற்கு வருகை தந்திருந்தனர்.

இலங்கை சுற்றுலா கைத்தொழில் சம்மேளத்தின் ஏற்பாட்டில், பொத்துவில் பிரதேச செயலகத்தின் வழிநடத்தலுடன் இக்கலந்துரையாடல் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இலங்கை சுற்றுலா கைத்தொழில் சம்மேளத்தின் தலைவர் ஏ.எம்.ஜவ்பர் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராய்ச்சி, சுற்றுலாத்துறை அமைச்சின் அபிவிருத்திக்கான பணிப்பாளர் எஸ். எல்.எம்.ஹசீம், அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் உமா நிராஞ்சனி, பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எஸ்.எம். வாஸீத், பொத்துவில் உதவி பிரதேச செயலாளர் வை. றாசீத் முப்படைகளின் அதிகாரிகள் மற்றும் சுற்றுலாத்துறை தொழிலாளர்கள், ஹோட்டல் உரிமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அமைச்சின் செயலாளர் அங்கு தொடர்ந்தும் தெரிவிக்கையில், கொவிட் 19 தாக்கம் காரணமாக, விமான நிலையங்கள் மூடப்பட்டு சேவைகள் அனைத்து நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் அதிகம் பாதிக்கப்பட்டது சுற்றுலாத்துறையாகும். வீழ்ச்சியடைந்துள்ள இச்சுற்றுலாத்துறையை மீள கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகளை சற்றுலாத்துறை அமைச்சும் அரசாங்கமும் முன்னெடுத்து வருகின்றது. சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அத்துறை சார்ந்த தொழிலில் ஈடுபட்டுவருபவர்களுக்கு மிகக்குறைந்த வட்டியில் கடன் சலுகைகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் அவர்கள் எதிர் நோக்கிவரும் சவால்கள், பிரச்சினைகள் தொடர்பிலும் உரிய பிரதேசங்களுக்குச் சென்று ஆராய்ந்து அவர்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெற்றுவருகின்றோம்.

சுற்றுலாத்துறைக்கு புகழ்பெற்றுள்ள அறுகம்பை குடா பிரதேசம், சேர்பிங் கடலலை நீர்ச் சறுக்கல் விளையாட்டுக்கும், உலகில் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளதனால் அரசாங்கத்தின் சுற்றுலா வலய அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் இது முக்கிய இடம் வகிக்கின்றதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.



திருகோணமலை மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாவட்டத்தின் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து நேற்று (13) கலந்துரையாடிய போது... (படம்: கந்தளாய் தினகரன் நிருபர்)

# கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா அம்பாறையில்

துறைநீலவணை நிருபர்

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடா வருடம் நடாத்தப்படும் தமிழ் இலக்கிய விழா அம்பாறை மாவட்டத்தில் நடைபெறவுள்ளதாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தெரிவித்தார்.

இதற்கமைய இவ்விழா தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் கூட்டம் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஐ. கே. ஜீ. முத்துபண்டா தலைமையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக முகாமைத்துவ மண்டபத்தில் இன்று (14) நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் இலக்கியவான்கள், அரச திணைக்கள உயர் அதிகாரிகள், கலாசார உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு தமது ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கவுள்ளனர். இக்கூட்டத்திற்கு சமுகமளிக்கும் அனைவரும் முகக் கவசம் அணிந்து வருவதுடன், சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# ஆசிரியர்கள் மனிதாபிமான ரீதியில் சேவையாற்ற முன்வர வேண்டும்

## கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அழைப்பு

(காரைதீவு குறூப் நிருபர்)



கொரோனாவுக்கு பிந்திய இன்றைய சூழ்நிலையில் இழந்த கல்வியை மீட்பதற்காக உரிமைகள் சலுகைகளைத் தூக்கியெறிந்துவிட்டு மனிதாபிமான ரீதியில் சேவையாற்ற முன்வாருங்கள் என கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிசாம் சம்மாந்துறையில் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் சம்மாந்துறை வலயத்திற்கான உத்தியோக பூர்வ விஜயம் கடந்த (10) இடம்பெற்றது.

கல்வி அபிவிருத்தி தொடர்பான கூட்டம் கல்விசார் உத்தியோகத்தர்களுடன் சுமுகமாக நடைபெற்றது. பின்பு வலய அதிபர்களுக்கான கூட்டம் இடம்பெற்றது.

அங்கு பணிப்பாளர் மேலும் பேசுகையில்:

இன்றைய காலகட்டத்தில் கல்வி அபிவிருத்தி என்பது சவாலாக மாறிவிட்டது. கொரோனா அச்சுத்தலால் இழந்த கல்வியை மீட்டெடுப்பதில் சிக்கல்நிலை தோன்றியுள்ளது. அதனிடையே 3 பொதுப் பரீட்சைகளும் வருகின்றன. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் இன்னும் ஒருமாதத்தில் வருவதால் அவர்களது சுயகற்றலுக்கு வழிவிட்டு போதுமான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் செய்ய வேண்டும்.

ஆனால் இம்முறை க.பொ.த சாதாரணதரப் பரீட்சை என்பது சவால் மிக்கதொன்றாகிறது.

இன்னும் நான்கு மாதங்களில் தனிப்பட்ட கற்றலுக்கு ஒரு மாதம் போனால் ஆக 3 மாதங்களே எஞ்சியுள்ளன. பரீட்சையை வெற்றிகரமாக நம்பிக்கையுடன் முகங்கொள்ள மாணவர்களை தயார்படுத்த வேண்டும். பரீட்சையில் வெற்றிபெற சிறந்தபெறுபேற்றைப் பெற நம்பிக்கையூட்ட வேண்டும்.

எனவே இன்றைய அசாதாரண சூழ்நிலையில் விடுபட்ட பாடப்பரப்பை ஆசிரியர் பூர்த்தி செய்வதைவிட நேரடியாக பரீட்சைக்குத் தயார்படுத்தும் யுக்திகளை கையாள வேண்டும்.

வெகுவிரைவில் கிழக்கிலுள்ள பாடரீதியான உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களை அழைத்துக் கலந்துரையாடி இது தொடர்பான ஆலோசனைகளைப் பெறவுள்ளோம்.

நாம் இங்கு குறைகள் பிடிக்கவோ பழிவாங்கவோ வரவில்லை. மாறாக கிழக்கின் கல்வித் தரத்தை உயர்த்தவும் சா.தரப் பரீட்சைக்கு தயார்படுத்தும் யுக்திகளை தேடவும் புறப்பட்டுள்ளோம்.

எதிர்வரும் இருவார காலப் பகுதியில் குறித்த ஆலோசனைகளைப் பெற்று திட்டங்களை தீட்டி நடைமுறைப் படுத்த வேண்டியுள்ளது என்றார்.

# வெளிநாட்டில் தொழில் புரிவோரின் சமுர்த்தி விடயத்தில் நியாயமாக நடந்து கொள்ளுங்கள்

## பிரதேச சபை உறுப்பினர் அஸ்மி

வாழைச்சேனை விசேட நிருபர்

வறுமை ஒழிப்பை இலக்காகக் கொண்டு அரசினால் முன்னெடுக்கப்பட்டு வரும் சமுர்த்தி வழங்கல் திட்டங்களில் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் செல்வோருக்கு சமுர்த்தி திட்டங்களிலிருந்து நீக்குதல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது நிறுத்தப்பட்டு, அவர்கள் விடயத்தில் நியாயமாக நடந்து கொள்ளுங்கள் என கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் கே.எல்.அஸ்மி கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசு சமுர்த்தி போன்ற மக்கள் நலத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை பாராட்டத்தக்கது. இதனூடாக மக்களின் வாழ்வாதாரம் ஓரளவு நிவர்த்திக்கப்படுகிறது.

அத்துடன் மேலதிக பொருளாதாரத்தை ஈட்டிக்கொள்ளும் நோக்குடனே வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை நம்பி பலர் செல்கின்றனர். சமுர்த்தி பெறும் குடும்பத்தின் தலைவர் வெளிநாடுகளுக்குச் செல்கின்ற போது, அவரை குறித்த திட்டத்திலிருந்து நீக்கி விடும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படுவதனால் அவர்களின் குடும்ப நிலை மிகவும் மோசமாக பாதிக்கப்படுகின்றது.

சமுர்த்தி திட்டங்களிலிருந்து நீக்கப்படுதல் தொடர்பில் வெளிநாடுகளில் பணி புரியும் பல சகோதரர்கள் எம்மைத்தொடர்பு தமது கவலைகளை வெளியிட்டு வருகின்றனர்.

வெளிநாடுகளை நம்பிச்செல்கின்ற போது குடும்ப உறவுகளைப்பிரிந்து சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்து வருகிறார்கள்.

இவ்வாறான நிலையில் அவர்களுக்காக வழங்கப்பட்டுள்ள சமுர்த்திக் கொடுப்பனவுகள் நிறுத்தப்படுவது அநீதியான செயற்பாடுகளாகும்.

ஆகவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பட்டதாரி பயிலுநர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி





கிண்ணியா மத்திய நிருபர்

திருகோணமலை மாவட்டத்தில் பட்டதாரி பயிலுநர்களாக நியமனம் வழங்கப்பட்டவர்களுக்கு 21 நாள் பயிற்சி திட்டத்தின் கீழ், தலைமைத்துவ பயிற்சி நேற்று (13) திருகோணமலை மங்கிபிரிஜ் இராணு முகாமில் ஆரம்பமானது.

மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலகப் பிரிவில் இருந்தும் மொத்தம் 1,171 பேர் பட்டதாரி பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்கள் A,B,C,D,E என ஐந்து குழுக்காகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குழுவிற்கான பயிற்சிகளும் தெரிவு செய்யப்பட்ட 5 இடங்களில் தொடர்ச்சியாக மாறி மாறி இடம்பெறவுள்ளது.

பயிற்சிகள் யாவும் தலைமைத்துவம், முகாமைத்துவம், அரச துறை, பொதுமக்கள் துறை மற்றும் செயத்திட்ட அறிக்கை தயாரித்தல் ஆகிய தலைப்பின் கீழ் வழங்கப்படவுள்ளன.

இதன் பிரகாரம் தலைமைத்துவ பயிற்சிகள் அனைத்தும் திருகோணமலை மங்கிபிரிஜ் இராணு முகாமிலும் முகாமைத்துவ பயிற்சி மாவட்ட செயலகத்திலும் தனியார் துறை பயிற்சிகள் தனியார் நிறுவனங்களிலும் பொதுமக்கள் தொடர்பான பயிற்சிகள் மூதூர் மற்றும் திருகோணமலை பிரதேச செயலகத்திலும் செயத்திட்ட அறிக்கை தயாரித்தல் தொடர்பான பயிற்சிகள் அந்தந்த பிரதேச செயலகங்களிலும் வழங்கப்படவுள்ளன.

கர்ப்பிணி தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் நலனில் கவனம் செலுத்தி அவர்களுக்கு ஏற்றாப் போல் பயிற்சி திகதிகள் மாற்றி அமைக்கப்படும்.

செயத்திட்ட அறிக்கை தயாரித்தல் தொடர்பாக 600 தலைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கு ஏற்றாற்போல் அவர்களுக்குரிய நிரந்தர நியமனம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# களுவாஞ்சிகுடியில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

மண்முனை தென் எருவில்பற்று சுகாதார பணிமனையினால் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப் பணிமனையில் பிரதம மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் பிராந்திய மேலதிக சுகாதாரப் பணிப்பாளர் ஏ.எஸ்.ஐ.நளிரா, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இயங்கோவன், மண்முனை தென் எருவில் பற்றிலுள்ள ஆலயங்களின் நிர்வாக சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இன்று வரை டெங்கு நோயின் தாக்கத்திற்குள்ளானவர்கள் என்ற சந்தேகத்தில் 228 பேர் இனங் காணப்பட்டதாகவும் அவர்களில் 180 பேர் டெங்கு காய்ச்சலினால் பாதிக் கப்பட்டுள்ளனர் . மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தை டெங்கு நுளம்பு அற்ற பிரதேசமாக வைத்திருப்பதற்கு பொதுமக்களும், சமூக பிரதிநிதிகளும் ஆதரவு வழங்குமாறு பிராந்திய பொதுச் சுகாதராப் பரிசோதகரினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

# தம்பலகாமத்தில் காட்டு யானைகள் அட்டகாசம்

திருமலை மாவட்ட விசேட நிருபர்

தம்பலகாமம் கல்மிட்டியாவ பகுதியில் காட்டு யானைகள் குடியிருப்பு பகுதிகளில் வருகை தந்து அட்டகாசம் புரிவதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துகோரளவிடம் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

தம்பலகாமம் கல்மெட்டியாவ தெற்கு பகுதியில் வேளாண்மை அறுவடைக்கு பிறகு காட்டு யானைகள் ஊருக்குள் பிரவேசித்து குடியிருப்புகளையும் , பயிர்களையும் துவசம் செய்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் காட்டு யானைகளுக்கு மின்சார வேலி இருந்தும் சரியான பராமரிப்பு இன்றி அவை செயலிழந்து காணப்பட்டதாக தெரிவித்தனர். இதன் போது இதை கவனத்திற் கொண்டு எதிர்வரும் மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில் சமர்ப்பித்து உடனடியாக தீர்வை பெற்று தருவதாக அவர் உறுதியளித்துள்ளார்.



திருகோணமலை பட்டினமும் சூழலும் மனையாவெளி கிராமத்திக்கு உட்பட்ட சனசமூக நிலையத்தில் நேற்று (13) சன சமூக சங்கத்தின் தலைவர் த.பி. சிதம்பர பிள்ளையின் தலைமையில் சிரமதான நிகழ்வு இடம்பெற்ற போது.
(படம்; முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்)





மட்டக்களப்பு அருள்மிகு ஸ்ரீ வில்காம பிள்ளையார் ஆலயத்தில் சனிக்கிழமை பால்குட பவனியும் சங்காபிஷேகமும் இடம்பெற்றன. கிரான் காளிகோவிலில் இருந்து ஸ்ரீ வில்காம பிள்ளையார் ஆலயத்திற்கு பக்த அடியார்கள் பால்குடம் சுமந்து வந்தனர்.பால்குட பவனியும் சங்காபிஷேகமும் பிரதம சிவாச்சாரியார் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சபரிமலை குரு முதல்வர் மஹாராஜா ராஜகுரு ஆன்மீக அருள்ஜோதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் இடம் பெற்றன. (படம்;கல்குடா தினகரன் நிருபர்)

# மன்னாரில் இந்து எழுச்சி மாநாடு

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் இந்துக் குருமார் பேரவையின் ஏற்பாட்டில் இந்து எழுச்சி மாநாடும், இந்துக் குருமார் பேரவையின் 25 ஆவது ஆண்டு விழாவும் நேற்று மன்னார் நகர மணடபத்தில் நடைபெற்றது.

மன்னார் இந்துக் குருமார் பேரவையின் தலைவர் மனோ ஐங்கர சர்மா தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது.

நேற்று காலை 9.45 மணியளவில் மன்னார் பிரதான பாலத்தடியில் இருந்து மன்னார் நகர மண்டபம் வரை அமைதியான முறையில் ஊர்வலம் இடம் பெற்றது.

ஊர்வலத்தில் இந்து குருமார்கள், இந்து மக்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன் போது நந்திக்கொடியை ஏந்தியவாறு மன்னார் நகர மண்டபம் வரை ஊர்வலமாக வந்தனர்.

அதனைத் தொடர்ந்து மன்னார் நகர மண்டபத்தில் அமைக்கப்பட்ட கலாநிதி மனோகரக் குருக்கள் அரங்கில் நிகழ்வுகள் நடைபெற்றது.

இதன் போது நடனம் மற்றும் உரைகளும் இடம் பெற்றன.

நிகழ்வில் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பிரதம குரு கருணாநந்த குருக்கள், கொழும்பு சிறி பத்திரகாளியம்மன் ஆலய பிரதம குரு குமன் குருக்கள், சிவசேன அமைப்பின் தலைவர் மரவன் புலவு சச்சிதானந்தன் உட்பட இந்து மத குருக்கள், அறநெறி பாடசாலை மாணவர்கள், பலர் கலந்து கொண்டனர்.











## 11.09.2020 மற்றும் 12.09.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 1,422,302

பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 125,005,852.40

ரூ. 65,061,962.40 சுப்பர் பரிசு 01 ரூ. 2,000,000.00 பரிசுகள் 04 ரூ. 1,000,000.00 பரிசுகள் 02 ரூ. 100,000.00 பரிசுகள் 52

www.nlb.lk

### OFFICIAL RESULTS — சுப்பர் வாசனா (NLB NATIONAL LOTTERIES)



DRAW DATE 12 / 09 / 2020 — 1534 DRAW NUMBER

சுப்பர் இலக்கம் 07 — வெற்றி இலக்கங்கள் 21 40 43 44

| | | | |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | 01 |
| 2 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 15,000.00 | 07 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 116 |
| 4 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 381 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 4844 |
| 6 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 4521 |
| 7 பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 62037 |
| 8 பரிசு | சுப்பர் இலக்கம் மாததிரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 15326 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை
Rs. 3,100,120.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியில் இருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
Rs. 20,921,767.08

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — இல. 32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01. Phone : 0114 607 000, 0112 324 324 Fax : 0114 663 416 Web : www.nlb.lk

### நீரோகா லக்ன ஜய — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 702 — திகதி 2020/09/11

லக்கினம்: தனுசு — வெற்றி இலக்கங்கள்: 03 10 27 68

| | பரிசு கட்டமைப்பு | பரிசு தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ம் பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ.1,000,000/- | 1 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களுடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 10,000/- | 5 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 2,000/- | 71 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்களுடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 200/- | 335 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100/- | 3,563 |
| 6ம் பரிசு | 1 இலக்கத்துடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 60/- | 4,687 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20/- | 51,490 |
| 8ம் பரிசு | லக்கினம் மட்டும் பொருந்துமாயின் | ரூ. 20/- | 18,974 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசு தொகை
ரூ. 3,305,800.00

அடுத்த சுப்பர் பரிசு
ரூ. 17,355,320.50

ரூ. 5 லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசு அரசாங்க வரி சட்ட திட்டங்களுக்கு அமைவானதாகும். பரிசுப்பணம் பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை அவசியமாகும்

வெல்லப்பட்ட லொத்தர் சீட்டு, சீட்டிழுப்பு நடைப்பெற்ற தினத்திலிருந்து 6 மாத காலம் மாத்திரமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை — இல 32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு 01. அவசர அழைப்பு: 011 2324324, 011 4607000 இணையதளம்: www.nlb.lk

### Mega Power மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம்: 609 — உத்தியோகபூர்வ முடிவுகள் — திகதி: 11/09/2020

உங்களை வெற்றியாளர்களாக்கும் உங்களின் நம்பிக்கை

ஆங்கில எழுத்து: B — சுப்பர் இலக்கம்: 09 — வெற்றி இலக்கங்கள்: 18 22 25 65

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 04 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 150 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 334 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8,861 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5,770 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 144,596 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 26,180 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.234,388,349.15

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.11,223,316.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.14,614,795.20

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ. 5,249,420.00

தேசிய லொத்தர் சபை — டீ.ஆர்.து. முதலிகே மாவத்தை, கொழும்பு 01 தொலைபேசி: 0112-470662, 0114-607000 இணையம்: www.nlb.lk — ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. — வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

### Mega Power மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம்: 610 — உத்தியோகபூர்வ முடிவுகள் — திகதி: 12/09/2020

உங்களை வெற்றியாளர்களாக்கும் உங்களின் நம்பிக்கை

ஆங்கில எழுத்து: A — சுப்பர் இலக்கம்: 26 — வெற்றி இலக்கங்கள்: 10 59 62 64

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 09 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 141 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 334 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8,197 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5,310 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 135,257 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 24,579 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.234,502,951.95

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.11,337,918.80 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.14,729,398.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ. 6,436,820.00

தேசிய லொத்தர் சபை — டீ.ஆர்.து. முதலிகே மாவத்தை, கொழும்பு 01 தொலைபேசி: 0112-470662, 0114-607000 இணையம்: www.nlb.lk — ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. — வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

### ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1054 — திகதி 2020.09.12

ஆங்கில எழுத்து: O — வெற்றி இலக்கங்கள்: 0 9 7 0 7 8

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | |
|---|---|---|---|
| 01 பரிசு | 0 9 7 0 7 8 | ரூ. 2,000,000.00 | பரிசு 1 |
| 02 பரிசு | 9 7 0 7 8 | ரூ. 100,000.00 | பரிசுகள் 3 |
| 03 பரிசு | 7 0 7 8 | ரூ. 10,000.00 | பரிசுகள் 31 |
| 04 பரிசு | 0 7 8 | ரூ. 1,000.00 | பரிசுகள் 275 |
| 05 பரிசு | 7 8 | ரூ. 50.00 | பரிசுகள் 2,911 |
| 06 பரிசு | 8 | ரூ. 20.00 | பரிசுகள் 27,835 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | |
|---|---|---|---|
| 07 பரிசு | 0 9 7 0 7 | ரூ. 10,000.00 | பரிசுகள் 2 |
| 08 பரிசு | 0 9 7 0 | ரூ. 1,000.00 | பரிசுகள் 28 |
| 09 பரிசு | 0 9 7 | ரூ. 100.00 | பரிசுகள் 285 |
| 10 பரிசு | 0 9 | ரூ. 50.00 | பரிசுகள் 3,004 |
| 11 பரிசு | O | ரூ. 20.00 | பரிசுகள் 12,795 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | ரூ. 200.00 | பரிசுகள் 58 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 4,081,450.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டுழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த புதன்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — 32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01. தொலைபேசி: 011 4607000, 011 2324324 பக்ஸ்: 011 4669416 Web : www.nlb.lk

### தன நிதானய — உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 2020/09/11

சீட்டிழுப்பு இலக்கம் - 314

ஆங்கில எழுத்து: T — வெற்றி இலக்கங்கள்: 01 20 22 32

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்'கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 02 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 56 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 159 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 3,623 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 2,483 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 61,945 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 11,688 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 2,510,940.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 79,956

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை
116,476,358.64

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2537 — சீட்டிழுப்பு திகதி 11.09.2020

ஆங்கில எழுத்து: L — வெற்றி இலக்கங்கள்: 18 19 22 35

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 191 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 415 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10414 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6846 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 170545 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 30964 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 219,383

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை
ரூ. 6,942,420.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 65,061,962.40

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01 தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2538 — சீட்டிழுப்பு திகதி 12.09.2020

ஆங்கில எழுத்து: F — வெற்றி இலக்கங்கள்: 15 20 41 54

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 04 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 65,061,962.40 | 01 |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 04 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 176 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 399 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 9703 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6456 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 160844 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 29350 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 206,933

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை
ரூ. 71,245,382.40

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 60,000,000.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01 தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

### மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4242 — உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 11-09-2020

வெற்றி எழுத்து: V — வெற்றி இலக்கங்கள்: 9 0 9 6 9 6

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 9 0 9 6 9 6 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 0 9 6 9 6 | ரூபா. 100,000/- | 12 |
| 3ஆம் பரிசு | 9 6 9 6 | ரூபா. 10,000/- | 104 |
| 4ஆம் பரிசு | 6 9 6 | ரூபா. 1,000/- | 1,111 |
| 5ஆம் பரிசு | 5 6 | ரூபா. 100/- | 11,016 |
| 6ஆம் பரிசு | 6 | ரூபா. 20/- | 109,335 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 9 0 9 6 9 | ரூபா. 10,000/- | 11 |
| 8ஆம் பரிசு | 9 0 9 6 | ரூபா. 1,000/- | 115 |
| 9ஆம் பரிசு | 9 0 9 | ரூபா. 100/- | 1,097 |
| 10ஆம் பரிசு | 9 0 | ரூபா. 50/- | 10,922 |
| 11ஆம் பரிசு | V | ரூபா. 20/- | 43,767 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 10,395,440.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.35,755,114.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை — 32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416. www.nlb.lk

### மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4243 — உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 12-09-2020

வெற்றி எழுத்து: X — வெற்றி இலக்கங்கள்: 3 0 5 3 0 9

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 3 0 5 3 0 9 | ரூபா. 2,000,000/- | 02 |
| 2ஆம் பரிசு | 0 5 3 0 9 | ரூபா. 100,000/- | 10 |
| 3ஆம் பரிசு | 5 3 0 9 | ரூபா. 10,000/- | 100 |
| 4ஆம் பரிசு | 3 0 9 | ரூபா. 1,000/- | 1,030 |
| 5ஆம் பரிசு | 0 9 | ரூபா. 100/- | 10,256 |
| 6ஆம் பரிசு | 9 | ரூபா. 20/- | 101,795 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 3 0 5 3 0 | ரூபா. 10,000/- | 12 |
| 8ஆம் பரிசு | 3 0 5 3 | ரூபா. 1,000/- | 103 |
| 9ஆம் பரிசு | 3 0 5 | ரூபா. 100/- | 1,014 |
| 10ஆம் பரிசு | 3 0 | ரூபா. 50/- | 10,134 |
| 11ஆம் பரிசு | X | ரூபா. 20/- | 40,773 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 11,738,060.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.35,755,114.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை — 32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416. www.nlb.lk



# மகாளய பட்சத்தின் சிறப்பு

மகாளய பட்சத்தில் அன்னதானம் செய்து அது, எல்லா பிதுர்களுக்கு சென்று சேர வரம் கேட்ட கொடை வள்ளல் கர்ணனின் புராண கதை.

கர்ணன் மகாபாரத போரில் கொல்லப்பட்ட பிறகு யமதர்மராஜன் அவரை மிகுந்த மரியாதையுடன் எமலோகத்திற்கு அழைத்துச் செல்கிறார். அங்கு அவர் செய்த பல தர்மங்களுக்காக சொர்க்கத்திற்கு அனுப்புகிறார். கர்ணனும் மகிழ்வுடன் சொர்க்கத்திற்குச் சென்று அனுபவிக்கிறார். சிறிது காலத்தில் கர்ணனுக்குப் பசி எடுக்கின்றது.

உடனே அங்குள்ள சொர்க்க வாசிகளிடம் உணவு எங்கே கிடைக்கும் என கேட்டார். அதை கேட்ட உடன் அனைவரும் மிகுந்த திகைப்படைகின்றனர். சொர்க்கத்தில் உள்ளவர்களுக்கு பசி எடுக்காது, ஆனால் உங்களுக்கு ஏன் எடுக்கிறது என திகைத்தனர்.

சொர்க்கத்தில் நடப்பதை தேவ குரு பிரகஸ்பதி கவனித்துக் கொண்டிருந்தார். அவர் தனது ஞான திருஷ்டியில் அதற்கான விடையை கண்டுபிடிக்கின்றார். கர்ணனிடம் வந்து அவரின் ஆட்காட்டி விரலை சுவைக்குமாறு பிரகஸ்பதி சொல்கிறார்.

பசியில் இருந்த கர்ணன், அவனின் ஆட்காட்டி விரலை சுவைக்கின்றார். அவரின் பசியும் அடங்கி விடுகின்றது.

அது எப்படி என் ஆள்காட்டி விரல் சாப்பிட்டதும் பசி அடங்கியது என பிரகஸ்பதியிடம் கேட்டார். நீ கர்ணனாக இருந்த போது பொன், பொருளை தானமாக அளிப்பதில் உன்னைப் போல் யாரும் இருந்ததில்லை. ஆனால் நீ அன்ன தானம் மட்டும் செய்யவில்லை. ஒரு முறை ஒரு அந்தணர் உன்னிடம் வந்து தன் பசிக்கு உணவு வேண்டும் என கேட்டார். இங்கு அன்னதானம் செய்யவில்லை என்றும், அன்னதானம் செய்யப்படும் இடத்தை உன் ஆள்காட்டி விரலால் காட்டினாய். இதனால் தான் உன் ஆட்காட்டி விரலை சுவைத்ததும் உன் பசி அடங்கியது என்றார் பிரகஸ்பதி.

மீண்டும் பூலோகத்தில் கர்ணன் :

இதை கேட்டதும், கர்ணனின் கண்ணில் கண்ணீர் வந்தது. நேராக எம தர்மனிடம் சென்று நான் மீண்டும் பூமிக்கு ஒரு பட்சம் (15 நாட்கள்) மனித உடலுடன் சென்று அன்னதானம் செய்ய விரும்புகிறேன். என்னை அனுமதிக்க வேண்டும் என கோரினார்.

அதற்கு தர்ம ராஜனும் அனுமதிக்கிறார்.

பூலோகத்திற்கு சென்ற கர்ணன், யாரும் அடையாளம் கண்டு கொள்ளாத இடத்தில் அன்ன தானம் செய்து, தன் நோக்கத்தை நிறைவேற்றினான். 15 நாட்கள் முடிந்த பின்னர், எம தர்மன் வந்து, கர்ணனை மீண்டும் சொர்க்கத்திற்கு வருமாறு அழைத்தார்.

**கர்ணனின் கோரிக்கை:**

கர்ணனின் செயலைப் பார்த்து மகிழ்ந்த எம தர்ம ராஜன், உனக்கு ஒரு வரம் தர விரும்புகிறேன். என்ன வேண்டும் என கேட்டார்.

அதற்கு கர்ணன், “யம தர்ம ராஜரே... மனிதர்கள் முன்னோர்களுக்கு கொடுக்கும் திதி, உணவு அளிக்க மறந்து விடுகின்றனர். அதனால் குறைந்த பட்சம் இந்த பட்சம் திதி மற்றும் அன்ன தானம் செய்வதால் சந்ததி இல்லாத முன்னோர்களுக்கு கூட அது சென்றடைய வேண்டும். கர்ம வினைகளால் பூமிக்கும், சொர்க்கத்திற்கும் அலையும் பிதுர்களுக்கு சென்றடைய வேண்டும்.” என வரம் கேட்டார்.

கர்ணனின் இந்த கோரிக்கையை வரமாக அளித்து மகிழ்ந்தார் யம தர்மன்.

யமன் மகிழ்வுடன் ஒப்புக்கொள்கிறார்.

**கர்ணன் பெற்ற வரம்:**

" யார் இந்த பட்சத்தில் உணவு அளிக்கிறார்களோ அவர்கள் பாக்கியம் பெற்றவர்கள்.

உலகுக்கே சூரியன் சொந்தம் என்பதால், அவரது புத்திரனான கர்ணனும் நமக்குச் சொந்தமாகிறான். அவன் பூமியில் வந்து தர்மம் செய்யும் மகாளயபட்ச காலத்தில், நாம் எல்லோருமே முன்னோர்களை வரவேற்று 14 நாட்களும் தர்ப்பணம் முதலானவை செய்ய வேண்டும்.

கடைசி நாளான மகாளய அமாவாசையன்று முன்னோருக்கு பெரும் படையல் படைத்து, அதை ஏழைகளுக்கு அன்னதானம் செய்ய வேண்டும். மகாளயபட்ச காலத்தில், நம் முன்னோருக்காக விரதம் அனுஷ்டிக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம், முன்னோரின் ஆசி நமக்கு கிடைக்கும். நமக்கு மட்டுமின்றி உலகிலுள்ள பிறருக்கும் பசியின்றி உணவு கிடைக்கும் என்பது ஐதீகம்.

## மாங்கல்யம் காப்பாள்; திருஷ்டியை நீக்குவாள் துர்காதேவி!



செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் வழிபடுங்கள். மங்கல வாழ்வு தருவாள். மங்காத செல்வங்களைத் தந்திடுவாள். பெண்களின் கண்ணீரையும் ஆண்களின் துக்கத்தையும் துடைத்தெறிவாள். வீட்டைச் சுற்றியுள்ள திருஷ்டியையும் நீக்கிடுவாள். சகல சௌபாக்கியங்களுடனும் மாங்கல்ய பலத்துடனும் வாழவைப்பாள் துர்காதேவி.

தேவியின் பல அவதாரங்களில் துர்கையும் ஒன்று. கடும் உக்கிரமும் அதே சமயம் கருணையும் கொண்டதாகத் திகழ்பவள் துர்க்கை என்கிறது புராணம். சிவாலயங்களிலும் பெருமாள் கோயில்களிலும் துர்கைக்கு சந்நிதிகள் அமைக்கப்பட்டு, அங்கே சாந்நித்தியமும் சக்தியும் உருவாக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. சிவாலயத்தில் உள்ள துர்க்கைக்கு சிவ துர்க்கை என்றும் பெருமாள் கோயிலில் உள்ள துர்கைக்கு விஷ்ணு துர்க்கை என்றும் பெயர் அமைத்து வழிபடப்படுகிறது.

ஆலயத்தில், கோஷ்டத்தில் பிராகாரமாக வலம் வந்து துர்கையை வழிபடவேண்டும். துர்க்கை எப்போதுமே ஆக்ரோஷ நாயகிதான். அதேசமயம், தீயவர்களிடம் மட்டுமே தன் கோபத்தைக் காட்டுவாள். தன்னைச் சரணடைவோருக்கு எப்போதும் அரணனாகத் திகழ்வாள்.

தேவர்களையும் ரிஷிகள் பெருமக்களையும் அழிப்பதற்காக, ஆயிரம் அக்ரோணி சேனைகளுடன் பலம் பொருந்திய தளபதிகளுடன் படையெடுத்தான் துர்கமன் எனும் அரக்கன். இதைக் கண்டு கதறிக் கலங்கினார்கள் தேவர்கள். தவித்து மருகியவர்கள் அம்பிகையை, பராசக்தியை சரணடைந்தார்கள். தேவர்களையும் ரிஷிகளையும் ஓரிடத்தில் வைத்து, அவர்களைச் சுற்றி அக்னி மண்டலத்தை உருவாக்கினாள். அவர்களைப் பாதுகாத்தாள்.

அடுத்து, துர்கமனை அழிக்கப் புறப்பட்டாள் தேவி. ஐந்து பாணங்கள் புறப்பட்டுத் துளைக்கும் அம்பை எய்தினாள். அவனுடைய உடலிலிருந்து பஞ்சப் பிராணனும் வெளியே வந்தது. செத்தொழிந்தான் துர்கமாசுரன். அவன் உடலிலிருந்து வந்த மந்திரங்கள் பேரொளியாக தகதகத்தன. அவை லோகநாயகியான பராசக்தியினுள்ளே பிரவேசித்தன. இதனால் அம்பாளுக்கு சர்வ மந்திரமயீ எனும் திருநாமம் அமைந்ததாகச் சொல்கிறது புராணம்.

துர்க்கம் என்றால் கோட்டை என்று அர்த்தம். துர்க்கை என்றால் கோட்டையின் நாயகி என்று அர்த்தம். துர்கமன் எனும் அசுரனை அழித்து, துக்கங்களையெல்லாம் போக்கியவள் என்பதால், அம்பிகைக்கு துர்க்கை எனும் திருநாமம் அமைந்ததாக விவரிக்கிறார்கள் ஆச்சார்யர்கள்.

துர்கையை வழிபடுவதும் அவளின் ஸ்லோகத்தைச் சொல்லி அவளை ஆராதிப்பதும் மிகுந்த சக்தி வாய்ந்தவை. எதிர்ப்புகளையெல்லாம் அடக்கவல்லவை என்கிறார்கள் ஆச்சார்யர்கள்.

ஓம் ஜதா ஜூத் சம்யுக்தமருதேன்னு க்ரித் லக்ஷ்மன்

லோகாயந்த்ரா சந்யுக்தம் பட்மெண்டு சத்ய ஷான்நாம் எனும் துர்க்காதேவியின் ஸ்லோகத்தைச் சொல்லி, செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் வழிபடுங்கள். மங்கல வாழ்வு தருவாள். மங்காத செல்வங்களைத் தந்திடுவாள். பெண்களின் கண்ணீரையும் ஆண்களின் துக்கத்தையும் துடைத்தெறிவாள். வீட்டைச் சுற்றியுள்ள திருஷ்டியையும் நீக்கிடுவாள். சகல சௌபாக்கியங்களுடனும் மாங்கல்ய பலத்துடனும் வாழவைப்பாள் துர்க்காதேவி.

## மானுடவியல்

தொடர்



10

***மகாளய பட்ச காலத்தில் என்ன செய்ய வேண்டும்?***

பித்ருக்களின் ஆராதனைக்கு மகாளயம் என்று பெயர். மகாளயம் என்றால் பெரிய கூட்டம் என்று பொருள். மறைந்த நம் முன்னோர்கள் அனைவரும் நம் இல்லத்தில் கூடும் நேரமே மகாளய பட்சம் ஆகும். பட்சம் என்றால் பதினைந்து நாட்கள்.

மறைந்த நம் முன்னோர்கள் பித்ரு லோகத்திலிருந்து இந்த பதினைந்து நாட்கள் நம்மோடு தங்கும் காலமே மகாளய பட்சம் ஆகும். நற்கதி அடைந்த முன்னோர்களுக்கு செய்ய வேண்டிய தர்ப்பணங்களை சரிவரச் செய்யாததற்கான பிராயச்சித்தமாக மகாளய பட்ச தர்ப்பண முறை அமைந்துள்ளது.

நமது மூதாதையர்களின் ஆசீர்வாதம் நம்மை காக்கும் கவசங்களாகும். ஒருவன் எந்தவொரு செல்வத்தை இழந்தாலும், வறுமையின் எல்லையில் நின்று வாழ்வை நொந்தாலும், அவனது முன்னோர்களான பித்ருக்களின் ஆசீர்வாதம் மட்டும் இருந்தாலே போதும் அவன் மகிழ்ச்சியாக இருப்பான்.

இந்த பதினைந்து நாட்களும் நம் வசிப்பிடத்தை சுத்தமாக வைத்திருந்து நம் முன்னோர்களை வணங்கி வந்தால் நம் வாழ்க்கை விருத்தியடையும்.

இந்த மகாளய பட்சம் பௌர்ணமிக்கு மறுநாள், பிரதமை திதியில் துவங்கி, அமாவாசை வரை நீடிக்கும். புரட்டாசியில் வரும் அந்த அமாவாசையே மகாளய அமாவாசை எனப்படும். தை அமாவாசை, ஆடி அமாவாசை ஆகியவற்றை விட இது சிறந்ததாகும்.

ஒவ்வொரு மாதங்களிலும் அமாவாசையன்று முன்னோரை நினைத்து தர்ப்பணம் செய்யலாம். முன்னோர்கள் மறைந்த தமிழ் மாதத்தில் வரும் திதியிலும், சிரார்த்தம் முதலியன செய்யலாம்.

மகாளய பட்ச காலத்தில் பிரதமை துவங்கி அமாவாசை வரும் வரை தினமும் தர்ப்பணம் செய்ய வேண்டும். ஒட்டுமொத்த முன்னோர்களையும் அப்போது நினைவுக்கூர வேண்டும். தீர்த்தக் கரைகளுக்கு சென்று புனித நீராடி, நம் முன்னோர்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்து வர வேண்டும்.

தற்போது உங்கள் நினைவில் உள்ள தலைமுறையின் முன்னோர்கள் பெயரை டைரியில் குறிக்கச் சொல்ல வேண்டும். அப்படியானால் தான் எதிர்காலத்தில் தர்ப்பணம், சிரார்த்தம் குறித்த அறிவு நம்மிடையே நீடித்து நிலைத்திருக்கும்.

***எந்த திதியில் என்ன பலன்?***

- முதல் நாளான பிரதமை திதியில் தர்ப்பணம் செய்வதால் பணக்கஷ்டம் தீர்ந்து, பணம் வந்து சேரும்.
- இரண்டாம் நாளான துவிதியை திதியில் தர்ப்பணம் செய்வதால் பிறக்கும் குழந்தையின் குணநலன்கள் சிறப்பாக இருக்கும்.
- மூன்றாம் நாளான திருதியை திதியில் தர்ப்பணம் செய்வதால் நாம் நினைத்த காரியங்கள் நிறைவேறும்.
- நான்காம் நாளான சதுர்த்தி திதியில் தர்ப்பணம் செய்வதால் எதிரிகளின் தொல்லை இல்லாமல் வாழலாம்.
- ஐந்தாம் நாளான பஞ்சமி திதியில் தர்ப்பணம் செய்வதால் செல்வம் சேரும், நியாயமான சொத்துக்கள் கிடைக்கும். மேலும் வீடு, நிலம் முதலான சொத்துக்கள் வாங்கி செல்வ செழிப்புடன் வாழலாம்.
- ஆறாம் நாளான சஷ்டி திதியில் தர்ப்பணம் செய்வதால் பேரும், புகழும் கிடைக்கும்.
- ஏழாம் நாளான சப்தமி திதியில் தர்ப்பணம் செய்வதால் சிறந்த பதவிகளை அடையலாம். உத்தியோகத்தில் தலைமை பதவி கிடைக்கும், தடைபட்ட பதவி உயர்வு கிடைக்கும்.
- எட்டாம் நாளான அஷ்டமி திதியில் தர்ப்பணம் செய்வதால் அறிவாற்றல் பெருகும்.
- ஒன்பதாம் நாளான நவமி திதியில் தர்ப்பணம் செய்வதால் திருமணத்தடை நீங்கும். சிறந்த வாழ்க்கைத்துணை அமைவார்கள். குடும்பத்திற்கேற்ற மருமகள் அமைந்து புத்திசாலியான பெண் குழந்தைகள் பிறக்கும். குடும்ப ஒற்றுமை சிறப்பாக இருக்கும்.
- பத்தாம் நாளான தசமி திதியில் தர்ப்பணம் செய்வதால் நீண்ட நாட்களாக இருந்துவந்த ஆசைகள் அனைத்தும் நிறைவேறும்.
- பதினொன்றாம் நாளான ஏகாதசி திதியில் தர்ப்பணம் செய்வதால் படிப்பு, விளையாட்டு மற்றும் கலைகளில் வளர்ச்சி அடைவார்கள்.
- பனிரெண்டாம் நாளான துவாதசி திதியில் தர்ப்பணம் செய்வதால் தங்க நகைகள் சேரும். விலை உயர்ந்த ஆடை சேர்க்கை உண்டாகும்.
- பதின்மூன்றாம் நாளான திரியோதசி திதியில் தர்ப்பணம் செய்வதால் பசுக்கள், விவசாய அபிவிருத்தி, தீர்க்க ஆயுள், ஆரோக்கியம், நல்ல தொழில் போன்றவை சிறப்பாக இருக்கும்.
- பதினான்காம் நாளான சதுர்த்தசி திதியில் தர்ப்பணம் செய்வதால் ஆயுள் விருத்தியாகும். நாம் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கும். மேலும், எதிர்கால தலைமுறையினருக்கு நன்மை உண்டாகும்.

அடுத்து வரும் பதினைந்தாம் நாளானது மகாளய அமாவாசை.

மகாளய பட்சத்தில் தர்ப்பணம் செய்வதால் நமது முன்னோர்களின் ஆசியுடன் நமது வாழ்க்கையும், நமது குழந்தைகளின் வாழ்க்கையும் உயர்வு பெறும்.

**(தொடரும்)**

தொகுப்பு:
கலாநிதி சிவஸ்ரீ கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்

## சுக்கிர ஏகாதசி; மங்காத செல்வம் தரும் மகாலக்ஷ்மி வழிபாடு



சுக்கிர ஏகாதசியில் மகாலக்ஷ்மியையும் மகாவிஷ்ணுவையும் மனதார வழிபடுங்கள். மங்காத செல்வங்களையெல்லாம் கிடைக்கப் பெறுவீர்கள். சுக்கிர யோகம் கிடைக்கப் பெறுவோம். சுபிட்சம் வீடு முழுவதும் நிறைந்திருக்கும். சகல சௌபாக்கியங்களும் கிடைத்து இனிதே வாழலாம். கடன் தொல்லையில் இருந்து மீள்வோம். வீட்டில் தடைப்பட்டிருந்த சகல மங்கல காரியங்களும் கோலாகலமாக நடந்தேறும்.

ஏகாதசி என்பது மகாவிஷ்ணுவை வழிபடுவதற்கான அற்புதமான நாள். மாதந்தோறும் அமாவாசையை அடுத்தும் பௌர்ணமியை அடுத்தும் ஏகாதசி திதி வரும். இந்தநாளில் விரதமிருந்து பெருமாளை வழிபடுவார்கள் பக்தர்கள்.

மாதந்தோறும் ஏகாதசி திதியில் பெருமாளை நினைத்து விரதம் மேற்கொள்வார்கள் பக்தர்கள். இந்தநாளில் காலை முதல் விரதமிருந்து விஷ்ணு சகஸ்ர நாமம் முதலானவற்றை பாராயணம் செய்து வழிபடுவார்கள்.

பெருமாளுக்கு துளசி மாலை சார்த்தி ஆராதனை செய்வார்கள். காலையும் மாலையும் திருமாலை வழிபாடு செய்து, விரதத்தைப் பூர்த்தி செய்வார்கள். புளியோதரையோ சர்க்கரைப் பொங்கலோ நைவேத்தியம் செய்து வேண்டிக்கொள்வார்கள். நான்குபேருக்கேனும் உணவுப் பொட்டலம் வழங்குவார்கள்.

இதேபோல் சுக்கிரவாரம் என்பது மகாலக்ஷ்மிக்கு உகந்த நாள். தேவியர் அனைவருக்குமான விசேஷமான நாள். சுக்கிரவாரம் என்றால் வெள்ளிக்கிழமை என்று அர்த்தம். வெள்ளிக்கிழமை என்பது சுக்கிர பகவானின் ஆட்சி பூரணமாக நிறைந்திருக்கும் நாள். சுக்கிர பகவானின் அருள் வேண்டுமெனில் மகாலக்ஷ்மி வழிபாடு மிக மிக அவசியம்.

ஏகாதசி பெருமாளுக்கு உகந்தது என்றால் சுக்கிரவாரம் என்று சொல்லப்படும் வெள்ளிக்கிழமை மகாலக்ஷ்மி தாயாருக்கு உகந்தது.

## அறநெறி அறிவுநொடி

கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்



**16905)** புரட்டாசி மாதத்தில் அபரபட்சத்தில் கன்யா ராசியில் சூரியன் பிரவேசிப்பது என்னவென்று அழைக்கப்படுகிறது? **மகாளயம் எனப்படும்**

**16906)** மகாளயம் என்பதற்கு மகரிஷிகளாலும் மாமுனிவர்களாலும் கூறப்பட்ட விளக்கம் என்ன?

**‘எல்லாப் பித்ருக்களும் கூடும் இடம், மிகவும் சந்தோஷமான காலம். மிகப்பெரிய இருப்பிடம் என்றெல்லாம்**

**16907)** மகா என்பதுடன் லயம் எவ்வாறு கூடி அமைந்தது?

**நம் முன்னோர்கள் எல்லாம் இந்த நாளில் திரளாக வந்து ஒன்று கூடுவதால், அதாவது லயமாவதால் ‘மகாலயம்’ என்றும் சொல்வார்கள்.**

**16908)** வானுலகில் வாழுபவர்கள் யார்? **தேவர்கள்**

**16909)** இந்த தேவர்களின் காலக்கணக்குப்படி புரட்டாசி மாதம் என்பது தேவர்களுக்கு என்ன காலம்? **நடு இரவாகும்**

**16910)** இந்த காலம் எப்படிபட்டதாக இருக்கும்?

**மிகவும் அமைதியாக இருக்கும் காலம்.**

**16911)** இது பூவுலகில் எதற்கு உகந்த காலமாக கருதப்படுகிறது?

**தெய்வ வழிபாட்டுக்கும் பித்ருக்களை உபசரித்துத் திருப்தி செய்வதற்கும் மிகவும் உத்தமமான, உகந்த காலமாகக் கருதப்படுகிறது.**

**16912)** தர்மத்தின் காவலராக விளங்குபவர் யார்? **யம தர்மராஜா**

**16913)** இந்தக் காலத்தில் தர்மத்தின் காவலரான யம தர்மராஜா என்ன செய்வார்?

**அங்குள்ள பித்ருக்கள் அனைவரையும் பூலோகத்திற்குச் செல்லும்படி கட்டளையிடுவார் என்று கூறப்படுகிறது.**

**16914)** அதன்படி பித்ருக்கள் என்ன செய்வார்கள்?

**அனைவரும் பூலோகத்திற்கு சந்தோஷமாக வருவார்கள்.**

**16915)** இங்கு பித்ருக்கள் என்ன நினைத்துக் கொண்டு வருவார்கள்?

**‘‘இந்தப் புனிதமான நாளிலாவது நம் பரம்பரை வாரிசுகள் நமக்கு சிராத்தம் செய்ய மாட்டார்களா? நமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்க மாட்டார்களா?’’ என்று மிகவும் ஆவலோடும் ஏக்கத்தோடும் எதிர்பார்த்து வருவார்கள்.**

**16916)** மானிடர் வாழ்க்கையில் முக்கிய கடமையாக என்ன செய்ய வேண்டும் என சொல்லப்பட்டிருக்கிறது.

**‘சிராத்தம்’ செய்வது**

**16917)** நாம் மிகவும் பொறுப்போடும் அக்கறையோடும் சிராத்தம் செய்தால் என்ன நடக்கும்?

**பித்ருக்கள் மனம் மகிழ்ந்து ஆனந்தத்துடன் ஆசிர்வாதம் செய்துவிட்டுப் போவார்கள்.**

**16918)** நாம் அவர்களுக்கு நன்றியுடன் சிராத்தம் செய்யவில்லையென்றால் என்ன நடக்கும்?

**‘இந்தப் புனித நாளில்கூட நம்மை நம் வாரிசுகள் நினைக்க மாட்டேன் என்கிறார்களே?’ என்று மனம் நொந்து வெறுப்புடன் சபித்துவிட்டுப் போவார்களாம்.**

**16919)** பல குடும்பங்களில் தீராத பிரச்சினைகள் ஏராளமாக இருப்பதற்கும், வாழ்நாள் முழுவதும் துன்பங்களும் துயரங்களும் தொடர்ந்து வருவதற்கும் காரணம் என்ன?

**முன்னோர்களின் இப்படிப்பட்ட சாபமே.**

**16920)** இந்தத் துன்பங்களிலிருந்து விடுபட்டு பரிகாரம் தேட ஜோதிடர்களிடம் போனால் அவர்கள் என்ன செய்வார்கள்?

**நம் ஜாதகத்தைப் பார்த்து அலசி ஆராய்ந்துவிட்டு, அவர்கள் சொல்லும் முதற்காரணம் பெரும்பாலும் ‘‘முன்னோர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை மறந்து விட்டீர்கள். உங்களுக்குப் பித்ருக்களின் சாபம் இருக்கு. அதுதான் உங்களை இப்படி, ஆட்டிப் படைக்கிறது. நிம்மதியை இழக்கச் செய்கிறது’’ என்றே கூறுவார்கள்.**

**16921)** வானுலகில் வாழும் தேவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகச் செய்யப்படுபவை என்ன?

**வேள்விகள், யாகங்கள், வழிபாடுகள்**

**16922) அது** போலவே நம் பித்ருக்களைத் திருப்திப்படுத்துவதற்காகச் செய்யப்படுபவை என்ன?

**சிராத்தம், தர்ப்பணம் ஆகியவை.**

**16923** பித்ருக்களுக்குரிய சிராத்த, தர்ப்பணங்களை எவ்வாறு செய்ய வேண்டும்?

**முறையாக சிரத்தையுடன்**

**16924)** சிரத்தையுடன் செய்ய வேண்டியது என்பதால் இதற்கு ஏற்பட்ட பெயர் என்ன? **‘சிராத்தம்’**

# நாட்டின் தபால் சேவையை நவீன தொழில்நுட்பத்துடன் கட்டியெழுப்புவேன்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

நாட்டின் தபால் சேவையில் நவீன தொழில் நுட்பங்கள் உள்வாங்கப்பட்டு மக்களின் காலடிக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகள் 'மக்களுக்கான சேவையாக' முன்னெடுக்கப்படவுள்ளதாக தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்தார்.

கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திற்கு அண்மையில் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர் சி. வியாழேந்திரன், தபால் சேவை நடவடிக்கைகளையும் பார்வையிட்டார். இதன் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் தபால் சேவையை ஒரு வினைத் திறன்மிக்க சேவையாக கட்டி எழுப்ப வேண்டும் என்ற விடயத்தில் மிகவும் கவனமாக இருக்கின்றோம். தபால் தொடர்பாக இருக்கின்ற பிரச்சினைகள் தேவைகள் பற்றி ஜனாதிபதியுடன் பேசியுள்ளேன். இந்த இடத்தில் தபால் சேவையாளர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகள் தேவைகள் தரம் உயர்த்தப்பட வேண்டும். அது இன்னும் புதிய தொழில் நுட்ப முறைமைகள் உள்வாங்கப்பட்டு அந்த புதிய தொழில் நுட்ப முறை ஊடாக இன்னும் வளர்த் தெடுக்கப்பட்டு மக்களுக்கான சேவை மிகச் சிறப்பான முறையில் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம்.



நாட்டில் கொரோனா தொற்று ஏற்பட்ட போது எமது ஜனாதிபதி மிகச் சிறப்பாக நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இந்த கொரோனா தொற்றில் மிகப் பெரிய நாடுகள் சவால்களை எதிர்நோக்கியுள்ள தருணத்தில் நாட்டின் ஜனாதிபதி, பாதுகாப்புத் துறையினர்கள், சுகாதாரத் துறையில் உள்ளவர்கள், ஏனைய அதிகாரிகள் அனைவரும் இதை வெற்றிகரமாக கொண்டு சென்றுள்ளார்கள். அந்த வகையில் தபால் மத்திய பரிவர்த்தனை நிலையம் மிகப் சிறப்பாக பணியாற்றியது. பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதம் தொடக்கம் மக்களுக்கான தபால் சேவையை தபால் திணைக்களம் மிகச் சிறப்பாக மேற்கொண்டு இருக்கிறது. அதற்கு நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

உலகத்தில் எந்த நாட்டில் தபால் சேவை மிகச் சிறப்பாக இருக்கின்றதோ அதேபோல் எங்கள் நாட்டினுடைய தபால் சேவையும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளை தற்பொழுது எடுத்துக் கொண்டு இருக்கின்றோம். அதற்கான புதிய திட்டங்களை நாங்கள் உருவாக்கிக் கொண்டு இருக்கின்றோம். அதுதான் ஜனாதிபதியுடைய எண்ணமாகவும் இருந்து கொண்டு இருக்கிறது. எங்களுக்கு ஆலோசனை வழங்கக் கூடிய அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் வழிகாட்டல்களை உள்வாங்கி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உறுதி பூண்டுள்ளோம் எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தபால் வெகுசன ஊடகத்துறை இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஏ. சேனாநாயக. தபால் அதிபர் ரஞ்ஜித் ஆரியரத்ன உள்ளிட் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# மஸ்ஜிதுல் அப்ராரில் கத்தமுல் குர்ஆன்

**பேருவளை விஷேட நிருபர்**

இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான பேருவளை, மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசலில் வருடாந்தம் நடைபெறும் ஆத்மீகஞானி முஹம்மத் ஸாலிஹ் பெரிய மௌலானா (ரஹ்) அவர்களின் பேரிலான கத்தமுல் குர்ஆன் மஜ்லிஸ் நாளை 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.ஐ.எம் ரபீக் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறும்.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் கதீப் மௌலவி எம். தல்ஹா (பாரி) இஷாத் தொழுகையின் பின்னர் விஷேட மார்க்கச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இலங்கையில் ஷாதுலிய்யா தரீக்காவெனும் ஆத்மீக வழிமுறையை சங்கைக்குறிய ஆத்மீகஞானி முஹம்மத் ஸாலிஹ் பெரிய மௌலானா (ரஹ்)அவர்கள் அறிமுகம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி மஜ்லிஸில் கலீபாக்கள், உலமாக்கள், இஹ்வான்கள் பலரும் கலந்துகொள்வர்.

# தடை செய்யப்பட்ட பசளை வகைகளுடன் இருவர் கைது

**ஹம்பாந்தோட்டை குறுப் நிருபர்**

தடைசெய்யப்பட்ட இரசாயன உர வகைகளை லொறியொன்றில் கொண்டு சென்றுகொண்டிருந்த இரண்டு சந்தேக நபர்களை தெற்கு அதிவேக நெடுஞ்சலையின் மத்தளை பிரவேசத்தில் வைத்து லுனுகம்வெஹெரை பொலிஸார் நேற்று (13) கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட வண்டியிலிருந்து க்லைபொசெட் 100 கிராம் கொண்ட 1000 பக்கட்களும், காபோபியுரான் 1000 கிலோவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றப்பட்டுள்ள இரசாயன உரங்களின் பெறுமதி ரூ. 12 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மஹரகம பிரதேசத்திலிருந்து வருகை தந்து தனமல்வில மற்றும் லுனுகம வெஹெரை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்கு இவைகள் கொண்டு வரப்பட்டுள்ளதாக ஆரம்ப விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# காயமடைந்த அரிய வகை ஆமை உயிரிழப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



வில்பத்து தேசிய பூங்காவை அண்மித்த கடற்கரையோரத்தில் காயமடைந்த நிலையில் கரையொதுங்கிய Green Sea Turtle (Chelonia Mydas) எனும் வகை இனத்தைச் சேர்ந்த ஆமை ஒன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக புத்தளம் முள்ளிக்குளம் வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் (11) தெரிவித்துள்ளனர்.

குறித்த ஆமையின் கீழ் தாடையில் பலத்த காயங்கள் காணப்பட்டதாகவும், அதனையடுத்து முள்ளிக்குளம் வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வருகை தந்து சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கும் கூடுதலான நேரம் சிகிச்சை அளித்துள்ள போதிலும் அந்த ஆமை இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கல் ஆமை, இறைச்சி ஆமை மற்றும் மணல் ஆமை என பல பெயர்களில் அழைக்கப்படும் Green Sea Turtle (Chelonia Mydas) இனத்தைச் சேர்ந்த குறித்த ஆமை இலங்கையைச் சுற்றியுள்ள கடல்களில் வசிக்கும் ஐந்து பொதுவான ஆமைகளில் ஒன்றாகும் என சொல்லப்படுகிறது.





புத்தளம் பதினோராம் குறுக்குத்தெருவில் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட மஸ்ஜிதுல் இக்லாஸ் வெள்ளிக்கிழமை (11) ஜும்ஆ தொழுகையுடன் மீள திறந்து வைக்கப்பட்டது. அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பிரதித் தலைவர் அஷ்ஷெய்க் முப்தி யூசுப் ஹனீபா மற்றும் அல் ஹிமா இஸ்லாமிய நிறுவனத்தின் யெலாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.ஏ. நூருல்லாஹ் (நளீமி) ஆகியோர் பள்ளிவாசலை மீள திறந்து வைப்பதையும், பள்ளிவாசலின் அழகிய தோற்றத்தையும் படங்களில் காணலாம். (படங்கள் : புத்தளம் தினகரன் நிருபர்)

# குறைந்த வருமானம் பெறுவோருக்கு விரைவில் அரச தொழில் வாய்ப்பு

## இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வழங்கும் புதிய அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக அநுராதபுரம் மாவட்டத்தில் 3500 க்கும் அதிகமானவர்களுக்கு தொழில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி மனைப்பொருளாதார நுண்நிதி சுயதொழில் தொழில் அபிவிருத்தி மற்றும் கீழ் உழைப்பு அரச வழங்கல் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.



அநுராதபுரத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சென்ற காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கம் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வழங்கும் விடயத்தில் கவனம்செலுத்தவில்லை.அதனை நாம் இப்போது செய்கின்றோம்.வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குவது போன்று குறைந்த கல்வித்தகைமையுடய இளைஞர் யுவதிகளுக்கும் அரச துறையில் தொழில் வாய்பினை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். வினைத்திறன்மிக்க அரச சேவையொன்றினை உருவாக்கும் நோக்கில் அரச துறையில் சிறிய பதவிகள் சில இதன்மூலம் உருவாகின்றது.நாங்கள் எதிர்வரும் காலத்திலும் இந்த நாட்டிலுள்ள இளைஞர் யுவதிகளை அரச துறையில் இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கின்றோம் எனவும் ராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மேலும் தெரிவித்தார்.

# அழுகிய நிலையில் 27 கிலோ கிராம் மீன் கண்டுபிடிப்பு

**ஹம்பாந்தோட்டை குறுாப் நிருபர்**

அம்பலாந்தோட்டை, ரிதியகம புனருத்தாரன நிலையத்தில் பயன்படுத்த முடியாமல் அழுகிய நிலையில் காணப்பட்ட 27 கிலோ கிராம் மீனை அம்பலாந்தோட்டை பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அண்மையில் பரீட்சித்தபோது கண்டெடுத்துள்ளனர்.

நிலையத்தில் சேவையாற்றிய ஊழியர்களிடம் கிடைத்த தகலலையடுத்து பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் மேற் கொள்ளப்பட்ட தேடுதலின்போதே இவ்வாறு அழுகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. மீன் அனைத்தையும் அழித்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள், இதற்கு பிறகு இந்த நிலையத்திற்கு மீன் கொண்டுவரும் போது பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கண்காணிப்பின் கீழ் அனுமதிபெற்று கொண்டுவரப்படுதல் வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டனர்.

# பணத்தை கொள்ளையடித்த இராணுவ வீரர் தலைமறைவு

**திறப்பனை தினகரன் நிருபர்**

ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை பொல்லால் தாக்கி, காயப்படுத்தி அவர் வசமிருந்த ரூபா எண்பதாயிரம் ( 80 ஆயிரம் ) பணத்தை கொள்ளையடித்த சம்பவத்தில் தொடர்புபட்டதாக சந்தேகிக்கப்படும் இராணுவ வீரர் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இவ்வாறு தாக்குதலுக்கு உட்பட்டவர் பரஸங்கஸ்வெவ, கந்துருகஸ் தமன பகுதியில் வசிக்கும் கே.ரணதுங்க ( 57 ) என்ற ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தராவார். இவர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

பரஸங்கஸ்வெவ, ரத்மலை பகுதியில் உள்ள தனது உறவினர் ஒருவருக்கு ஏற்கனவே வழங்கியிருந்த பணத்தை சம்பவம் நடைபெற்ற அன்று பெற்றுக் கொண்டு வீடு நோக்கி சென்ற போதே பாதையில் வைத்து பொல்லால் தாக்கி, தம்மை காயப்படுத்தி தமது பணத்தை கொள்ளையடித்ததாக பாதிக்கப்பட்ட நபர் பொலிசாரிடம் முறையிட்டுள்ளார்.

சந்தேக நபர் பரசங்கஸ்வெவ பகுதியில் வசிப்பவர் எனவும், தலைமன்னார் பகுதி இராணுவ முகாம் ஒன்றில் சேவையாற்றுபவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.



பேருவளை அப்ரார் கல்வி நிலைய விஷேட கூட்டம் பேருவளை மருதானை அரப் வீதியில் உள்ள மர்ஹூம் தேசமான்ய எம்.ஏ பாகீர் மாக்காரின் இல்லத்தில் அண்மையில் நடைபெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாகீர் மாக்கார் உட்பட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.பி.எம் மஹீஸ் உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

படம்: பேருவளை விஷேட நிருபர்

# 2 கிராம் போதைப்பொருளுடன் சந்தேக நபர் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

பாடசாலை மற்றும் பிரத்தியேக வகுப்பு மாணவர்களை இலக்காக கொண்டு விநியோகிப்பதற்கு தயாராக வைத்திவிருந்த இரண்டு கிராம் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவரை கலென்பிந்துனுவெவ சியம்பலாகஸ்வெவ பகுதியில் கைது செய்துள்ளதாக கலென்பிந்துனுவெவ பொலிசார் தெரிவித்தனர்.

கலென்பிந்துனுவெவ பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கலென்பிந்துனுவெவ உஸ்கொல்லாவ பகுதியைச் சேர்ந்த 30 வயது நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.



இலங்கை சமாதானப் பேரவை ஏற்பாட்டில் வெலிகம உள்ளக சமயத் தலைவர்கள் அமைப்புக்கு (LIRC) விசுவாசத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பான ஒருநாள் பயிற்சி செயலமர்வு அண்மையில் ஹிக்கடுவ ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஸிட்ரஸ் இல் (CITRUS Five Stars Hotel. ) இடம்பெற்றது.ஜெஹான் பெரேராவின் வழிகாட்டலில் வளவாளர் விருது பெற்ற இம்ரான் நபீர் வளவாளராக பங்குபற்றினார்.

படம் வெலிகம தினகரன் நிருபர்

# காட்டு யானை தாக்கி வயோதிபர் உயிரிழப்பு

**(புத்தளம் விசேட நிருபர்)**

மஹகிரிந்த குளத்தில் மீன் பிடிப்பதற்காகச் சென்ற மூன்று நண்பர்களுள் ஒருவர் காட்டு யானையின் தாக்குதலில் உயிரிழந்துள்ளதாக கொட்டவேஹர பொலிஸார் தெரிவித்தனர். கொட்டவேஹர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹகிரிந்த பிரதேசத்தைச் சேர்ந்த எச். எம். எம். திலகரத்ன (வயது 65) என்ற தச்சு வேலையில் ஈடுபட்ட நபரே இவ்வாறு காட்டு யானையின் தாக்குதலில் உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் வியாழக்கிழமை இரவு தனது இரண்டு நண்பர்களுடன் இணைந்து வலை வீசி மீன் பிடிப்பதற்காக மஹகிரிந்த குளத்திற்குச் சென்றிருந்துள்ளமை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இரவு 9.00 மணியளவில் மீன் பிடித்துக் கொண்டு மூவரும் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது வழியில் காட்டு யானை குறுக்கிட்டதால் மூவரும் வெவ்வேறு திசைகளில் தப்பி ஓடி தப்பியதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சட்டவிரோத துப்பாக்கியுடன் சந்தேக நபர் கைது

**( புத்தளம் தினகரன் விசேட நிருபர் )**

அனுமதி பத்திரம் பெறாத 12 துளை துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவரை புத்தளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.சந்தேக நபரிடமிருந்து 05 ரவைகளையும், 04 வெற்று ரவைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர் தான் துப்பாக்கியை எவ்வாறு பெற்றார் என்பதையும் அதைப் பயன்படுத்தி என்ன செய்யப்பட்டது என்பதையும் இதுவரை வெளியிடவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# என்னை நம்பி வாக்களித்த மக்களுக்கு அர்ப்பணிப்பான சேவையை வழங்குவேன்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் அதி கூடுதலான விருப்பு வாக்குகளை வழ ங்கி என்னை மதித்த மக்களுக்கு எனது சேவை காலத்தில் அர்ப் பணித்து பணியாற்றுவேன் என சுகாதார அமைச்சரும் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரு மான பவித்ரா வன்னியாரச்சி தெரி வித்தார்.

இரத்தினபுரி குருவிட்ட பிரதேசத் தில் தனக்கு வழங்கிய வரவேற்பு நிக ழ்வுகளில் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வா று தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நீங்கள் வழங் கியுள்ள அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி இந்நாட்டை உலகின் தலைசிறந்த நாடாக மாற்றும் வரை எதிர்க்கட்சிகளின் தலைவர்களான சஜித் பிரேமதாச, ரணில் விக்ர மசிங்க ஆகியோருக்கு மீண்டும் இந்நாட்டின் ஆட்சி அதிகாரத்தை நினைத்துப் பார்க்கவும் இடமளிக்க மாட்டோம்.

தேர்தல் காலங்களில் பல்வேறு விநோதமான சில உரைகளை நாங்கள் செவிமடுத்தோம். ஒரு சில கொரோனா நோயாளிகளுக் காக நாட்டு மக்களுக்கு ஊரடங்குச் சட்டம் போட்டு கஷ்டப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என ஐக்கிய மக்கள் க ட்சியின் தலைவர்



சஜித் பிரேமதாச மேடைகளில் பிரசா ரம் செய்தார்.

தேர்தல் மேடைகளில் கொரோனா நோயாளர்கள் இந்த மருந்தை தான் அருந்த வேண்டும் எனப் பிரசாரம் செய்தார்.இன்னொரு சந்தர்ப்பத்தில் அந்த மருந்தை அருந்த வேண்டாம் எனக்கூறி இன்னொரு மருந்து வகையை அருந்துமாறு கூறினார். இந்த வகையான நகைப்புக்கிடமான விடயங்களில் பொது மேடைகளில் பேசுவோரால் எவ்வாறு நாட்டை ஆள முடியும். பாராளுமன்ற தேர்தல் களிலும் நீங்கள் இம்மாவட்டத்தில் என்னை முதன்மை விருப்பு வாக்கு களால் வெற்றி பெறச்செய்து கௌர வம் படுத்தினீர்கள்.எனவே உங்கள் சேவைக்காக நான் என்னை அர்ப்ப ணித்து சேவையாற்றுவேன் எனவும் அமைச்சர் தனதுரையில் தெரிவித் தார்.

# பஸ் தரிப்பிடத்தில் ஆட்டோ மோதி விபத்து; ஏழுபேர் காயம்



(ஹற்றன் சுழற்சி நிருபர்)

நுவரெலியா ஹற்றன் வீதியில் பத்தனை சந்தியிலுள்ள பஸ் தரிப்பி டத்தில் ஆட்டோவொன்று நேற்று (13) பிற்பகல் 3.30 மணியளவில் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் பாடசாலை மாணவர்கள் மூவர் உட்பட ஏழுபேர் காயமடைந்துள்ள னர்.

ஆட்டோவில் பயணித்த மூவரும், பஸ் தரிப்பிடத்தில் காத் திருந்த நால்வருமே காயமடைந்த நிலையில் சிகிச்சைகளுக்காக கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அக்கரபத்தனையிலிருந்து கொட் டகலை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஆட்டோவொன்றே வேகக்கட்டுப்பாட்டை இழந்து, பஸ் தரிப்பிடத்தில் மோதுண்டு இவ்வாறு விபத்துக்குள்ளா கியுள்ளனது.

அவ்வேளையில் பஸ் தரிப்பி டத்தில் பாடசாலை மாணவர்கள் மூவரும், பெண்ணொருவரும் பஸ் சுக்காக காத்திருந்துள்ளனர். அவர் கள் அனைவரும் காயமடைந்துள்ள னர்.

இவ்விபத்தால் பஸ்தரிப்பிடத் துக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது, திம்புள்ள பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம்

மாத்தளை சுழற்சி நிருபர்



மாத்தளையைச் சேர்ந்த செய்ன் ஷமீக் அஸீரா சட் டத்தரணியாக உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னி லையில் அண்மையில் சத்தியப்பிர மாணம் செய்துகொண்டார்.

மாத்தளை, ஆமினா மகளிர் கல்லூ ரியின் பழைய மாணவியான இவர், லண்டன் பல்கலைக்கழகத்தில் சட் டமாணி சிறப்பு கற்கை நெறியைப் பூர்த்தி செய்துள்ளதுடன் சட்டக் கல் லூரியில் இறுதியாண்டுபரீட்சையில் அதிசிறந்தபெறுபேற்றினை பெற்று சித்தியடைந்துள்ளார். இவர், மாத் தளையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற முன்னாள் வங்கி முகாமையாளர் செயின் ஷமீக், மாத்தளை ஆமினா மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி பௌர்தினா ஷமீக் தம்பதிகளின் புதல்வியுமாவார்.

# ஊவா மாகாண ஆளுநர் முஸம்மிலுக்கு பதுளை அன்வர் பள்ளிவாசலில் வரவேற்பு

பதுளை தினகரன் நிருபர்

ஊவா மாகாண புதிய ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் பதுளை நகர் மஸ்ஜிதுல் அன்வர் பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு (11) விஜயம் செய்தார். அவருக்கு முஸ்லிம் பெருமக்கள் சார்பில் பெரும் வர வேற்பளிக்கப்பட்டது. பள்ளிவாசல் நிருவாகிகளான இம்தியாஸ் பக்கீர் டீன், எம். ரபீக் ஆகியோர் சமூகம் சார்பில் ஆளுநருக்கு பொன்னாடை போர்த்தி பாராட்டி கௌரவித்தனர்.

வரவேற்புரை நிகழ்த்திய அன்வர் பள்ளி தலைவர் இம்தியாஸ், பதுளை அல் அதான் ம.வி, அல் ஹிக்மா ஆரம்பப் பாடசாலைகள் ஆகியவற்றின் தேவைகளுக்கான கோரிக்கைகளையும் முன்வைத்தார்.

இதன்போது விசேட உரையை நிகழ்த்திய ஆளுநர் முஸம்மில், குறித்த குறைபாடுகளை மற்றும் சமூகத்தின் பல்வேறு தேவைகளை நிறைவேற்ற உரிய நடவடிக்கை



களை முன்னெடுப்பேன் என்றும் குறிப்பிட்டார்.

ஊவாவின் முதல் முஸ்லிம் ஆளுநர் என்ற வரலாற்று சாதனை படைத்த ஆளுநரின் நியமனம் எமக் குக் கிடைத்த மிகப்பெரும் வரப் பிர சாதம் என்றும் இதனை நாம் நன்கு சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வெள் ளியன்று ஜும்ஆப் பிரசங்கத்தை நிகழ்த்திய கண்டி மாவட்ட உலமா சபைத் தலைவரும், புர்க்கானிய்யா அரபுக் கல்லூரி அதிபருமான உமர் தீன் மௌலவி குறிப்பிட்டதுடன் விசேட துஆ பிரார்த்தனையையும் நிகழ்த்தினார்.

இரத்தினபுரி மாவட்டம்;

# கடந்த 8 மாதங்களில் 4447 போதை வழக்குகள்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இவ்வாண்டின் கடந்த எட்டு மாதங்களில் இரத்தினபுரி மாவட் டப் பொலிஸ் பிரிவுகளிலிருந்து 4447 போதை வஸ்த்துக்கள் தொடர் பான வழக்குகள் தொடரப்பட்டுள்ள துடன் இவற்றுடன் சம்பத்தப்பட்ட 1095 சந்தேக நபர்கள் கைது செய் யப்பட்டுள்ளதாகவும் இரத்தினபுரி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தின் அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை தொடர் பான தகவல்களை ஊடகவியலாளர் களுக்கு வழங்கும்போதே அதிகாரி கள் இத்தகவல்களை தெரிவித்தனர்.

கஞ்சா, கஞ்சா செடிகள், ஹெரோயின் , கசிப்பு கோடா ஆகிய போதைப் பொருட்கள் இக்கால பகு தியில் மீட்கப்பட்டு நீதிமன்றத்தில் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் அதிகாரிகள் மேலும் தெரி வித்தனர்.

# யுவதியின் சடலம் மீட்பு

அக்குறணை குறூப் நிருபர்

கட்டுகஸ்தோட்டை பாலத் திற்கு அருகில் மகாவலிகங்கை ஆற்றில் இருந்து 21 வயது யுவதி ஒருவரின் சடலத்தை (11) பொலிஸார் கண்டெடுத்துள்ள னர். இவர் தற்கொலை செய்தி ருக்கலாம் எனப்பொலிசார் சந் தேகிக்கின்றனர்.மேற்படி சடலம் கண்டி யஹலதென்ன பிரதேசத் தைச் சேர்ந்த யுவதியொருவரின் சடலம் என அடையாளம் காணப் பட்டுள்ளது. பொலிசார் மேலதிக விசாணைகளை மேற்கொண்டுள் ளனர்.





கம்பளை கல்வி வலயத்திற்குட்பட்ட க/பலந்தொட்ட முஸ்லிம் வித்தியாலயத்தில் பலந்தொட்ட நலன் புரிச்சங்க நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டிட திறப்பு விழாவுக்கு (12) வருகை தந்த விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே பாடசாலை சமூகத்தினால் வரவேற்கப்படுவதையும் அமைச்சர் கட்டிடத்தை திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் எம்.ஐ. றிஸ்வி உட்பட பிரமுகர்களையும் காணலாம். படங்கள் தெல்தோட்டை தினகரன் நிருபர்

# ஜீப் வண்டி மோதி ஆட்டோ விபத்து

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

மஸ்கெலியா நல்லத்தண்ணி பிரதான வீதியில் ஜீப் வண்டி யொன்று முச்சக்கரவண்டியில் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தாக மஸ்கெலியா பொலிஸார் தெரி வித்தனர். மஸ்கெலியா லக்ஷபான 50 ஏக்கர் பகுதியிலே இவ்விபத்து சனிக் கிழமை (12) காலை 06.30 மணியள வில் இடம்பெற்றுள்ளது,

கொழும்பிலிருந்து நல்லத்தண்ணி நோக்கி வந்த ஜீப் வீதியோரம் நிறுத்தி வைத்திருந்த முச்சக்கரவண் டியில் மோதியே இவ்விபத்து ஏற் பட்டுள்ளது.

# ஹற்றன் நகர் பகுதிக்கு ஜீவன் தொண்டமான் கண்காணிப்பு விஜயம்; மக்களுடனும் சந்திப்பு



(ஹற்றன் சுழற்சி நிருபர்)



இலங்கைத் தொழிலாளர் காங் கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் ஹற்றன் நகர் பகு திக்கான கண்காணிப்பு பயணத்தை மேற்கொண்டார்.

அத்துடன், நகரப்பகுதியில் நிலவும் குறைப்பாடுகளையும் மக்கள், நகரசபை அதிகாரிகள் ஊடாக கேட்டறிந்துகொண்டார். அவற்றுக்கான தீர்வுகளை கூடிய விரைவில் வழங்குமாறு சம்பந்தப் பட்ட தரப்பினருக்கு இராஜாங்க அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

இராஜாங்க அமைச்சராக கட மையேற்ற பின்னர் கண்காணிப்பு மற்றும் களப்பயணங்களை மேற் கொண்டு மக்களின் குறைகளை கேட் டறிந்து, தீர்வுகளை முன்வைத்து வரும் ஜீவன் தொண்டமான் இதன் ஓர் அங்கமாக ஹற்றன் நகருக்கு சென்றிருந்தார். இதன்போது மக்கள் மற்றும் வர்த்தகர்களால் முன்வைக் கப்பட்ட கோரிக்கைகளை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக் கப்படும் என உறுதியளித்தார்.

குறிப்பாக ஞாயிறு சந்தைத்தொ குதி கட்டிடத்தொகுதிக்கு சென்றி ருந்த இராஜாங்க அமைச்சர், இங்கு நிலவும் குறைப்பாடுகளையும் நிவர்த்தி செய்வதறகு விரைவில் நட வடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தர வாதத்தை வழங்கினார். அதேபோல ஞாயிறு சந்தைத்தொகுதி மற்றும் ஹற்றன் பஸ் தரிப்பிடத்திலுள்ள பொதுமலசல கூடங்களை புனர மைப்பு செய்வதற்கான நடவடிக் கைகளை உடன் மேற்கொள்ளுமாறு நகரசபை அதிகாரிகளுக்கு அறிவு றுத்தல் வழங்கினார். அதேவேளை, ஹற்றன் நகரில் குப்பை பிரச்சினை யென்பது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது, முறையாக குப்பை கள் அகற்றப்படுவதில்லை எனவும் ஜீவன் தொண்டமானிடம் மக்கள் முறையிட்டனர், அதற்கான நடவ டிக்கையும் நிச்சயம் மேற்கொள்ளப் படும் என இராஜாங்க அமைச்சர் இதன்போது உறுதி வழங்கினார்.

# எதிர்க்கட்சியின் கூற்று உண்மைக்கு புறம்பானது

(இரத்திபுரி சுழற்சி நிருபர்)

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்த சட்டமூலம் நேரடியாக ராஜ பக்ஷ குடும்பத்தை இலக்குவைத்து உருவாக்கப்பட்ட ஆவணமாகும். எதிர்க்கட்சிகள் ராஜபக்ச குடும்பத் திற்கு எதிராக செயற்படுகின்றனர். மக்கள் நலனுக்காக கொண்டு வரப் படும் அர சியலமைப்பின் 20ஆவது திருத்த சட்டமூலம் இரட்டை பிரஜா வுரிமையுடைய பசில் ராஜபக்ஷவை பாராளு மன்ற உறுப்பினர் ஆக்கு வதற்கு கொண்டு வரப்படும் ஒரு குடும்ப ஆவணமாக எதிர்க்கட்சிகள் சித்தரிக்கின்றனர். இது உண்மைக்கு புறம்பானது.



19 ஆவது திருத்த சட்டமூ லத்தில் இரட்டை பிரஜாவு ரிமையையுடைய ஒ ருவர் தேர்தலில் போட்டியிட முடியாது எனக் கூறுகிறது. ஆனால் அதில் இரட்டை பிரஜாவுரிமை உடைய ஒ ருவர் தேசியப்பட்டியல் மூலம் பாரா ளுமன்ற உறுப்பினராக முடியாது எ ன கூறவில்லை. எனவே பசில் ராஜ பக்ஷவை பாராளுமன் றத்துக்கு அ னுப்ப தேவைப்பட்டு இருந்தால் சட் டத்தில் கைதேர்ந்த ராஜபக்ச குடும் பத்தினர் பஷில் ராஜபக் ஷவை தே சியப் பட்டி யல் மூலம் பாராளுமன்ற த்திற்கு அனுப்பி வைத்தி ருப்பர் எ ன ஏற்றுமதி அபி விருத்தி அமைச்சர் ஜானக வக்கும்புற நேற்று தெரிவி த்தார். இரத்தினபுரியில் நேற்று (13) நடை பெற்ற ஊடகவிய லாளர் சந்தி ப்பில் கலந்து கொண்டு உரையாற் றுகையிலேயே அவர் இவ்வாறு தெ ரிவித்தார்.

# புலத்சிங்கள மில்லகந்த தமிழ் வித்தியாலயத்தில் ஐந்தாம் தர பரீட்சை

களுத்துறை சுழற்சி நிருபர்



களுத்துறை மாவட் டத்தின் ஹொரணை கல்வி வலத்துக்குட் பட்ட புலத்சிங்கள மில்லகந்தை தமிழ் வித்தியாலய ஐந்தாம் தர மாணவ, மாண விகளுக்கான இலவச முன்னோடி மாதிரி பரீட்சை செயலமர்வு அகலவத்தை கணபதி அறநெறிப் பாடசாலை ஏற்பாட் டில் பாடசாலை அதிபர் கே. எஸ். கணேசன் தலைமையில் சனிக்கி ழமை (12) பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை விதிமுறைகளை பின் பற்றிய நேர முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வை மாணவர் களிடையே ஏற்படுத்தும் வகையி லான பயிற்சிகள் குடாகங்க தமிழ் வித்தியாலய ஆசிரியர் தங்கையா டிக்ணேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இப் பரீட்சையில் களுத்துறை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய புலத்சிங்கள பகுதியில் அமைந்துள்ள தோட்டப் புற பாடசாலை களைச் சேர்ந்த ஐந்தாம் தர மாணவ, மாணவிகள் ஆர் வத்துடன் பங்கேற்றனர்.

மேலும் இவ் வினாத் தாள்களில் காணப்ப டும் மாதிரி வினாக்கள் பற்றிய இலவசக் கலந் துரையாடல் எதிர் வரும் செப்டம்பர் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் களுத்துறை, நேபட, தெபுவனை பாரதி தமிழ் வித்தியா லய ஆசிரியை திருமதி அ. சந்திரிக் காவின் வழிக்காட்டலுக்கு அமைய புலத்சிங்கள மில்லகந்தை த.வி பிரதான மண்டபத்தில் நடைபெ றும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இல்மனைட் அகழ்வுக்கு எதிராக உலகெங்கும் நடைபெறுகின்ற மக்கள் போராட்டங்கள்



அண்மைக் காலமாக கிழக்கில் இல்மனைட் அகழ்வது தொடர்பான சர்ச்சைகளும் அதற்கு எதிரான மக்கள் போராட்டங்களும் இடம் பெற்று வருகின்றன. இலங்கையில் மட்டுமன்றி உலகில் பல பகுதிகளிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன.

இயற்கை எமக்களித்த வரத்தினை நாம் துஷ்பிரயோகம் செய்ய எப்பொழுது ஆரம்பித்தோமோ அப்பொழுதே இயற்கையும் எமக்கு இன்னல் கொடுக்கத் தொடங்கியது.

1791ஆம் ஆண்டு இங்கிலாந்தில் வில்லியம் க்ரீகர் எனும் புவி அறிவியல் ஆர்வலர் ஆற்றோரம் படிந்திருந்த மணலில் கறுப்பு நிற மணலை மட்டும் பிரித்து ஆராய்ந்தார். அதுவரை அறியப்பட்ட உலோகங்களிலிருந்து அந்த உலோகம் வேறுபட்டிருந்தது. அதுதான் டைட்டானியம். அந்த கறுப்பு மணலின் பெயர் இல்மனைட்.

ஆனால் அதற்கு டைட்டானியம் என்று பெயர் வைத்தவர் மார்ட்டின் க்ளாப்ராத் எனும் ஜெர்மனிய இரசாயனவியல் அறிஞர். 1795ல் இவர் ரூட்டைல் எனும் மற்றொரு கனிமத்திலிருந்து டைட்டானியம் டை ஒக்ஸைட் பிரித்தெடுத்தார். டைட்டன் என்ற சொல்லுக்கு 'வலிமையானவன்' என்னும் பொருள் உண்டு.

டைட்டானியம் ஓர் உலோகத் தனிமம். இயற்கையில் ஒக்ஸிஜனுடன் சேர்ந்து டைட்டானியம் டை ஒக்ஸைட் எனும் சேர்மமாகக் கிடைக்கிறது. பூமியின் மேற்பகுதியில் அதிக அளவில் உள்ள தனிமங்கள் என்று பார்த்தால் டைட்டானியத்திற்கு 9வது இடம் உண்டு.

பெரும்பாலான தீப்பாறைகளிலும் சில வகை உருமாற்றுப் பாறைகளிலும் இப்பாறைகள் சிதைந்து அதன் விளைவாக உருவான படிவுப்பாறைகளிலும் டைட்டானியம் சிறிதளவு உள்ளது. இந்த உலோகம் அலுமினியத்தைப் போல் இலேசானது. ஆனால் இரும்பைப் போல் உறுதியானது. அதிக வெப்பம், இரசாயனவியல் தாக்கங்களைத் தாங்கக் கூடியது.

இத்தனை சிறப்பு அம்சங்களைக் கொண்ட இந்த டைட்டானியம் உலோகத் தனிமத்தை டைட்டானியம் டை ஒக்ஸைட் எனும் அதன் சேர்மத்திலிருந்து பிரித்தெடுக்கும் முயற்சி வணிக ரீதியில் வெற்றி பெற்றது 1946 இல்தான். அதன் பிறகும் கூட டைட்டானியத்தின் உபயோகங்கள் முழுமையாக உணரப் படவில்லை.

1950களிலும் 1960களிலும் நடந்து கொண்டிருந்த பனிப்போரின் போது அன்றைய சோவியத் யூனியன் டைட்டானியத்தை போர் விமானங்களிலும் மற்றைய போர் தளவாடங்களிலும் பயன்படுத்தத் தொடங்கியது. அதன் பின்னரே டைட்டானியத்தின் போர்க்கால முக்கியத்துவம் முழுமையாக உணரப் பட்டது.

**தகவல்: என். ஹரன்**
(ஆலையடிவேம்பு சுழற்சி நிருபர்)

டைட்டானியம் கலந்த இரும்பு தற்போது உயர் தொழில்நுட்ப விமானங்கள், போர் விமானங்கள், ஏவுகணைகள், விண்வெளி ஓடங்கள், மருத்துவ அறுவை சிகிச்சைக் கருவிகள், மின் சாதனங்கள் மற்றும் பல உயர் தொழில் நுட்ப சாதனங்களில் பயன்படுத்தப்படுகிறது.கடல் நீரைக் குடிநீராக மாற்றப் பயன்படுத்தப்படும் சாதனங்களிலும் இந்த உலோகக் கலவை பயன்படுத்தப்படுகிறது.

டைட்டானியம் டை ஒக்ஸைட் பெரும்பாலும் வர்ணம் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. வெண்மை நிறத்தில் மாவு போல் இருக்கும் டைட்டானியம் டை ஒக்ஸட் நிறமியிலிருந்து தயாரிக்கப்படும் வர்ணப்பூச்சுகள் தரமானவை. சிறந்த ஒளிர்தன்மை, நிறைந்த உழைக்கும் திறன், தூய வெண்மை நிறம், ஒளியை உள்ளே புகவிடா தன்மை இவையெல்லாம் டைட்டானியம் டை ஒக்ஸைட் நிறமிக்கு உரித்தானவை.

சாதாரண ஈய வர்ணப் பூச்சுகளிலுள்ள நச்சுத்தன்மை டைட்டானியம் டை ஒக்ஸைட் பூச்சுகளில் இல்லை. இந்த நிறமிகள் ரப்பர் தொழில், பிளாஸ்டிக் தொழில், தோல் மற்றும் துணி உற்பத்தி, அழகு சாதனத் தயாரிப்பு மற்றும் காகித ஆலைகளில் பயன்படுத்தப்படுகின்றன. நாம் அன்றாடம் பயன்படுத்தப்படும் பற்பசைகளிலும் டைட்டானியம் இது பயன்படுகிறது.

இல்மனைட் எனும் கரிய நிற கனிமம்தான் டைட்டானியம் டை ஒக்ஸைட் எனும் வெள்ளை நிற நிறமியின் மிக முக்கிய தாதுப்பொருள். ரஷியாவின் 'இல்மன்' மலை மற்றும் ஏரிப் பகுதிகளில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டதால் இந்தக் கனிமத்திற்கு 'இல்மனைட்' என்று பெயரிடப்பட்டது.

இல்மனைட் ஆலையில் இருந்து வெளியேறும் இரும்பு குளோரைட் மற்றும் அமிலக் கழிவுகள் சுற்றியுள்ள நிலத்தையும், நிலத்தடி நீரையும் பாழ்படுத்த வாய்ப்பிருக்கிறது. ஆலையில் பிரித்தெடுக்கப்படும் ஜிர்க்கான் கனிமம் கதிரியக்கத் தன்மையைக் கொண்டிருப்பதால் ஆலையை சுற்றி 20 கிலோ மீட்டர் தூரத்திற்குள் வாழும் மக்களுக்கும் உயிரினங்களுக்கும் மரபணு நோய்களும், பல்வேறு வகைப் புற்றுநோய்களும் உருவாக வாய்ப்பிருக்கிறது.

இலங்கையின் கிழக்கில் திருக்கோவில்,தம்பிலுவில்,விநாயகபுரம், உமிரி பகுதி கடற்கரையிலும் இல்மனைட் காணப்படுகிறது.

இல்மனைட் வழக்கமாக 'நிர்வாணச் சுரங்க முறை'யில் எடுக்கப்படுகிறது. அதாவது புவிப் பரப்பின் மீதுள்ள அனைத்துத் தாவரங்களும் அழித்தொழிக்கப்பட்டு, பூமியை நிர்வாணமாக்கி, தாதுக்களைத் தோண்டியெடுக்கிறார்கள்.

இதனால் நண்டு இனம் முற்றாக அழிக்கப்படும். வினாயகபுரம் பகுதியில் கண்டல் தாவரங்கள் அழிவடையும் ஆபத்து உள்ளது. இதனால் இறால் வளம் முற்றாக அழியும். இதனை நம்பி தொழிலில் ஈடுபடும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழக்கும்.

உலகில் பாதுகாக்கப்பட வேண்டிய இனமாக அறிவிக்கப்பட்ட கடலாமைகள் முட்டையிட்டு இனம்பெருக்கும் அழகிய கடற்கரைகளுக்கு ஆபத்து உள்ளது.


சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

312

வெற்றிடங்கள்
தொழில் நுட்பம்

இங்கிரிய பலகை ஏற்றுமதி தொழிற்சாலைக்கு வேலையாட்கள் தேவை. மெஷின் ஒபரேட்டர் செயின் ஸோ ஒபரேட்டர் , சம்பளம் 30, 000 ஓவர்டைம், த ங்குமிட வ ச தி, சாப்பா டு இல வசம். 070525 425 8. 053952



## விலைமனுக்களுக்கான அழைப்பு

**மேல் மாகாண கல்வித் திணைக்களம்**

**வினாப் பத்திரங்கள் மற்றும் இயைபுடைய ஆவணங்களை அச்சிடல் மற்றும் விநியோகிப்பதற்காக விலைமனுக் கோரல்**

**வருட இறுதி மதிப்பீடு – 2020**

**முதலாம் தொகுதி (10-11 தரங்கள்) மற்றும் இரண்டாம் தொகுதி (6-9 தரங்கள்)**

மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பெறுகைக் குழுவினால் மேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து மேற்குறிப்பிடப்பட்ட வேலைகளுக்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2020 செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதி முதல் 2020 ஒக்டோபர் மாதம் 05ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பெறுகை மாதிரிப் படிவங்களை மீளளிக்கப்படாத 2500.00 ரூபா கட்டணத்தை பத்தரமுல்ல, ரன்மகபாயவில் அமைந்துள்ள மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கணக்காளர் (கொடுப்பனவுகள்) அவர்களுக்குச் செலுத்தி 2020 செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதி முதல் 2020 ஒக்டோபர் மாதம் 02ஆம் பி.ப. 3.00 மணி வரை அந்த அலுவலகத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுப் பிணை முறியாக 50000.00 ரூபாவை பத்தரமுல்ல, ரன்மகபாயவில் அமைந்துள்ள மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கணக்காளர் (கொடுப்பனவுகள்) அவர்களுக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை (மூலப் பிரதி) அல்லது அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் / நிதி நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட, விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் நிபந்தனையற்ற 100,000.00 ரூபா விலைமனுப் பிணைமுறியொன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாக இரு பிரதிகளில் தயாரித்து அவைகளை வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து, ''மேல் மாகாண பாடசாலைகளுக்காக வினாப் பத்திரங்களை அச்சிடல் மற்றும் விநியோகிப்பதற்கான விலைமனு - 2020 (முதலாம் தொகுதி) / (இரண்டாம் தொகுதி)'' என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு 2020 ஒக்டோபர் மாதம் 05ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழு, மேல் மாகாண கல்வித் திணைக்களம், 89, ரன்மகபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து மேல் மாகாண கல்வித் திணைக்கள அலுவலகத்தின் பிரதான கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம். விலைக்கோரல் நிறைவடைந்ததும் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரம் வாய்ந்த பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**ஸ்ரீலால் நோனிஸ்,**
**தலைவர்,**
**மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழு,**
**மேல் மாகாண கல்வித் திணைக்களம்,**
**ரன்மகபாய,**
**பத்தரமுல்ல.**
**2020-09-11.**


# 'ரஜினி கட்சி தொடங்குவதால் அ.தி.மு.கவுக்கு பாதிப்பில்லை'



நடிகர் ரஜினிகாந்த் உட்பட யார் கட்சி தொடங்கினாலும் அ.தி.மு.கவுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என தமிழக அமைச்சர் கடம்பூர் ராஜு தெரிவித்துள்ளார். எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.கதான் வெற்றி பெறும் என்றும் அதில் யாருக்கும் சந்தேகமே வேண்டாம் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அருகே செய்தியாளர்களை சந்தித்த அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தமிழகத்தில் அ.தி.மு.கவுக்கு உள்ள வாக்கு வங்கியை யாராலும் சிதறடிக்க முடியாது, இது பலமுறை நிரூபணமாகியுள்ளது. தமிழகத்தில் 3 முறை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும், 2 முறை அம்மாவும் தொடர்ச்சியாக வெற்றி பெற்று ஆட்சியை பிடித்துள்ளார்கள். வரும் சட்டமன்றத் தேர்தலில் அவர்கள் வழியில் மீண்டும் நாங்கள் ஆட்சியை பிடிப்பது உறுதி.

தமிழகத்தில் நடிகர் ரஜினிகாந்த் உட்பட யார் அரசியல் கட்சி தொடங்கினாலும் அது அ.தி.மு.கவுக்கு பாதிப்பைத் தராது. அ.தி.மு.க மிக வலிமையான வாக்கு வங்கி கொண்ட கட்சி. நீட் தேர்வை பொறுத்தவரை தி.மு.கவும், காங்கிரசும் அதை வைத்து அரசியல் செய்து வருகின்றன. அரசியல் இலாபத்துக்காக நீட் தேர்வை பற்றி அந்த இரண்டு கட்சிகளும் பேசி வருகின்றன. நீட் தேர்வு வேண்டாம் என்பதே அ.தி.மு.கவின் கொள்கை.

மனஅழுத்தம் காரணமாக யாரும் தவறான முடிவுகளை எடுக்கக் கூடாது என முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். நீட் தேர்வை எதிர்கொள்வதற்கான பயிற்சிகளை தமிழக அரசு வழங்கி வருகிறது. இதனிடையே நீட் தேர்வு வேண்டாம் என மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து வரும் ஒரே மாநிலம் தமிழகம் மட்டும் தான் என்பதை கவனித்தில் கொள்ள வேண்டும்.

நீட் தேர்வு வேண்டாம் என்பதில் அ.தி.மு.க மிக உறுதியாக உள்ளது. அனைத்து மாநிலங்களும் ஏற்றுக் கொண்டதால் வேறுவழியின்றி நீட் தேர்வை ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. மற்றபடி நீட் தேர்வு வேண்டாம் என்பதில் கட்சியும், ஆட்சியும் உறுதியாக உள்ளன".


**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2020 செப்டம்பர் 16ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 40,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09120L184 | LKA18221C196 | LKA36421I171 | - |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 8,000 | 14,000 | 18,000 | 40,000 |
| ஏற்றுக்கொள்ளலுக்கான உயர்ந்தபட்ச விளைவு வீதம் %** | 4.52 | 4.65 | 4.88 | |

ஏல விற்பனைத் திகதி : 2020 செப்டம்பர் 16
தீர்ப்பனவுத் திகதி : 2020 செப்டம்பர் 18
வழங்கப்படும் திகதி : 2020 செப்டம்பர் 18
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2020 செப்டம்பர் 16, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்க பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணைய அடையாள இலக்கம்
** குறிப்பிடப்பட்டுள்ள வீதங்கள் கொள்கைத் தீர்மானங்களுக்கேற்ப சீராக்கங்களுக்குட்பட்டனவாக இருக்குமென்பதுடன் அதற்கிணங்க அவை இலங்கை மத்திய வங்கியின் வெப்தள விளம்பரத்தில் வெளியிடப்படும்.

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

**வழங்கும் அலுவலகம்**
**பொதுபடுகடன் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**



## விலைமனுக்கோரல்

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி**

**விலைக்கேள்வி இலக்கம் : 063/T/2020**

**கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் புறப்படுகை முனையத்திற்குள் பயணப் பொதிகளை கையாளும் பிரதேசத்துக்குள் SERVO ASSISTED பயணப் பொதிகளை கையாளும் முறைமையொன்றின் வடிவமைப்பு, வழங்கீடு மற்றும் பொருத்துதல்**

**(Design, Supply, Installation & Commissioning of a Servo Assisted Baggage Handling System at Departure Baggage Claiming Area at Bandaranaike International Airport, Katunayake)**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் தவிசாளரால் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் புறப்படுகை முனையத்திற்குள் பயணப் பொதிகளை கையாளும் பிரதேசத்துக்குள் SERVO ASSISTED பயணப் பொதிகளை கையாளும் முறைமையொன்றின் வடிவமைப்பு, வழங்கீடு மற்றும் பொருத்துவதற்காக விலைக்கேள்விகள் இத்துடன் அழைக்கப்படுகின்றன.

விலைக்கேள்வி இணைக்கோப்பு திருப்பித் தரப்படாத ரூபா மூவாயித்து ஐநூறு (**3,500.00** ரூபா) காசு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவிற்குச் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன், அதற்காக விலைக்கேள்வியாளரால் வேண்டுதல் கடிதமொன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவினால் **2020.09.15**ஆந் திகதி முதல் **2020.11.02**ஆந் திகதி வரை ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதி வரை விலைக்கேள்வி இணைக்கோப்பினை பெற்றுக்கொள்ள முடியும். தேவைப்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையில் நேரடியாக சமுகமளித்தும் ஒப்படைத்து விட முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் **2020.11.03**ஆந் திகதி செவ்வாய் பி.ப. 02.00 மணிக்கு முடிவடைவதுடன், உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் அத்துடன் வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகளைத் திறக்கும்போது அதில் பங்கேற்க முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரசின் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியின் தேவையின் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ரூபா நான்கு இலட்சம் **(ரூபா. 400,000.00)** பெறுமதி வாய்ந்த வங்கி பிணை முறி விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

விலைமனுக்கேள்விகளை சமர்ப்பித்தலுடன் தொடர்புடைய விளக்கமளித்தல் **2020.10.14**ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் இயந்திர பொறியியல் பராமரிப்பு கட்டிடத்தில், கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவின் தொலைபேசி இலக்கம். **011-2264103/011-2264128** ஊடாக அழைப்பதன் மூலம் அல்லது **head.scm@airport.lk** என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது **www.airport.lk** இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க.**

# 7 நாள் தனிமைப்படுத்தல் காலத்துடன் இலங்கை வர பங்களாதேஷ் அழுத்தம்

இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் பங்களாதேஷ் வீரர்கள் ஏழு நாள் தனிமைப்படுத்தலில் ஈடுபட இலங்கை கிரிக்கெட் சபை அறிவுறுத்தியதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைமை நிர்வாக அதிகாரியான நிசாமுத்தீன் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கை வரும் பங்களாதேஷ் வீரர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தலில் ஈடுபடுவதற்கு முன்னர் கட்டுப்பாடு விதித்திருந்தது. இந்த சுற்றுப்பயணத்தை சிக்கலுக்கு உள்ளாக்கியிருந்தது. இதனை ஏற்றுக்கொள்ளாத பங்களாதேஷ் கிரிக்கெட் சபை, இதனால் பயிற்சிப் போட்டியில் அட முடியாது ஏற்படும் என்று குறிப்பிட்டது. இதற்கு பதில் 7 நாள் தனிமைப்படுத்தலை மேற்கொள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் சபை கேட்டுக்கொண்டது.

இந்நிலையில் 7 நாள் தனிமைப்படுத்தல் பின்பற்றப்படும் என்றும் அவ்வாறு முடியுமான வரை குறைப்பதற்கு முயற்சிப்பதாகவும் இலங்கை கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை டாக்காவில் செய்தியாளர்களை சந்தித்த நிசாமுத்தீன், 7 நாள் தனிமைப்படுத்தலில் பிரச்சினை இல்லை என்றும் அவ்வாறென்றால் சுற்றுப்பயணம் திட்டமிட்டபடி நடைபெறும் என்றும் தெரிவித்துள்ளார்.

"இலங்கை கிரிக்கெட் சபையுடன் நாம் தொடர்ந்து பேசி வருகிறோம். நாம் அவர்களிடம் விரிவான திட்டத்தை நாடியுள்ளோம். எனினும் தனிமைப்படுத்தல் காலத்தை குறைப்பது பற்றி அவர்களின் சுகாதார அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக இலங்கை கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.



எமது வீரர்களுக்கு தாங்கிக்கொள்ளும் வகையில் முடியுமானவரை தனிமைப்படு த்தல் காலத்தை குறைப்பதற்கு அவர்கள் முயற்சிக்கின்றார்கள்" என்று நிசாமுத்தீன் இதன்போது தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபையின் உத்தியோகபூர்வ அறிவித்தல் வரும் வரை தாம் காத்திருப்பதாகவும் நிசாமுத்தீன் குறிப்பிட்டுள்ளார். வீரர்களுக்கு ஏழு நாள் தனிமைப்படுத்தல் பின்பற்றப்பட்டால் சுற்றுப்பயண ஏற்பாடுகள் திட்டமிட்டபடி இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

- விண்ணப்பதாரரினால் அவரின் சுயவிபரக் கோவையுடன் கூடியதாக சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் தமது நிறுவனத் தலைவரின் சிபாரிசுடன் 2020 ஒக்டோபர் 12ஆம் திகதிக்கு முன்னதாக, ‘செயலாளர், கல்வி, தகவல் தொழில்நுட்பம், மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சு, சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தனபுரி’ என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், ‘நிவித்திகல/ எம்பிலிப்பிட்டி வலயக் கல்விப் பணிப்பாளர் பதவி’ எனக் குறிப்பிட வேண்டும்.
- விண்ணப்பிக்கும் யாதேனுமொரு விண்ணப்பதாரர் மேலே வலயக் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடங்கள் 02 இற்கும் விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாயின், இரண்டு வலயங்களுக்கும் வெவ்வேறாக இரண்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**ஏ. டப்ளியு ருக்மனி ஆரியரத்ன**
**செயலாளர்,**
**கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும்**
**கலாசார விவகாரங்கள் அமைச்சு,**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம்,**
**இரத்தினபுரி.**

**2020.09.14**

---

## அறிவித்தல்

தூனகஹ, கடவல, இலக்கம் 85ஏஇல் வதியும் தேவமுனி லக்ஷ்மன் திலக்கசிறி சில்வா ஆகிய நான் சட்டவிரோதமான போதை மாத்திரைகளை வைத்திருந்தமை தொடர்பாக நீர் கொழும்பு மஜிஸ்ட்ரேட் நீதமன்றத்தில் இலக்கம் M14252 வழக்கில் குற்றவாளியாக காணப்பட்டதுடன் மேற்படி குற்றத்தை நான் மீண்டும் புரியமாட்டேன் எனவும் அது தொடர்பாக இலங்கை பொது மக்களிடம் மன்னிப்புக் கோருவதாகவும் அறிவிக்கிறேன்.

---

### திருத்த அறிவித்தல்

### இலங்கை புகையிரத சேவைகள்

### பெறுகை அறிவித்தல்

**3,850 Cubes of Track Ballast to Lower District**

**Procurement No: SRS/F.7739**

2020 செப்டம்பர் 02ஆம் திகதி தினகரன் பத்திரிகையின் 19ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட மேலே குறிப்பிட்டுள்ள தலையங்கம் தொடர்பானது.

02ஆம் பந்தியானது பின்வருமாறு திருத்தப்பட வேண்டுமென தயவுசெய்து கவனிக்கவும்.

02. 2020.09.23ஆம் திகதியன்று பி.ப.3. மணிவரையும் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 7,000 ரூபாவை மாத்திரம் (ஏழாயிரம் ரூபா மாத்திரம்) செலுத்திய பின்னர், புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**தொலைபேசி இலக்கங்கள்:**
2438078/ 2436818

---

## அறிவித்தல்

## கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபை

01. கொட்டிகாவத்த - முல்லேரியா பிரதேச சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள பெறுகைக்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்தத்தின் பெயர் (நிர்மாணக் காலம்) | CIDA பதிவு | கேள்விப் பிணை முறி (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | தேவையான அடிப்படைத் தகைமைகள் மற்றும் அனுபவம் | |
|---|---|---|---|---|---|
| | | | | நிதி | தொழில்நுட்பம் |
| கொகிலவத்த மயானத்தில் தகனச்சாலைக் கட்டிடம் மற்றும் புகை போக்கியை நிர்மாணித்தல், Down Draught மாதிரியிலான எல். பி. எரிவாயு மூலம் செயற்படும் இரட்டை தகனச்சாலை அறையை நிர்மாணித்தல், இறுதிக் கிரியைகள் செய்யுமிடம் மற்றும் தேவையான வகையிலான நில அலங்காரம் (10 மாதங்கள்) | தரம் C5 அல்லது அதற்கு மேல் | 500,000.00 கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபை தலைவரின் பெயரில் | 10,000.00 VAT சேர்க்கப்படல் வேண்டும். | ஆகக் குறைந்த பொதுவான வருடாந்தப் புரள்வு<br><br>கடந்த 3 வருடங்களில் 38 மில்லியன் ரூபாவுக்குக் கிட்டியது | பொதுவான அனுபவம் 08 வருடங்கள் விசேட அனுபவம் கடந்த கிட்டிய 5 வருடங்களுக்குள் ஆகக் குறைந்தது இதுபோன்ற அல்லது இதற்குச் சமமான 2 ஒப்பந்தங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் |

02. தேசிய போட்டி ரீதியான கேள்வி கோரல் நடைமுறையின் கீழ் கேள்விகள் கோரப்படும்.
03. இதில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் கடமை நேரங்களில் 011-2410288, 0112410770, 0112410594 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக கொட்டிகாவத்த – முல்லேரியா பிரதேச சபையின் கைத்தொழில் பிரிவின் வேலை அத்தியட்சகரைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், 2020-09-14ஆம் திகதி முதல் 2020-10-13ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் இதே முகவரியில் கேள்வி ஆவணங்கள் மற்றும் வேலைத் தளத்தை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. கேள்விப் படிவங்களை கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபையின் பிரதான அலுவலகத்திற்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000.00 ரூபாவைச் (VAT சேர்க்கப்படல் வேண்டும்) செலுத்தியதன் பின் 2020-09-14ஆம் திகதி முதல் 2020-10-13ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் கொட்டிகாவத்த - முல்லேரியா பிரதேச சபையின் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் கேள்வி ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம். கேள்விதாரர்கள் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) கட்டிடங்களுக்காக C5 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் போது CIDA பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. கேள்விதாரர்கள் மேற்குறிப்பிட்ட மாதிரியிலான தகனச்சாலையை நிர்மாணித்தல் தொடர்பில் குறைந்தபட்சம் 08 வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதுடன் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் (NERD) தகனச்சாலை நிர்மாண தொழில்நுட்பச் சான்றிதழைப் பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகும்.
06. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களைச் சமர்ப்பிக்கையில் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கான கேள்விப் பிணை முறியொன்றை தலைவர், கொட்டிகாவத்த - முல்லேரியா பிரதேச சபை எனும் பெயரில் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு இது ரொக்கப் பணமாக அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கேள்விப் பிணைமுறியாகவிருத்தல் வேண்டும். வங்கிப் பிணைமுறியானது கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 30 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் சமர்ப்பித்தல் வேண்டும்.
07. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட 02 நகல்களிலான கேள்வி ஆவணங்களை ‘‘மூலப் பிரதி’’ மற்றும் ‘‘நகல் பிரதி’’ எனக் குறிப்பிட்டு வெவ்வேறான இரு கடித உறைகளில் இட்டு மீண்டும் தனியொரு உறையில் இட்டு அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு 2020-10-14ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ‘‘கொட்டிகாவத்தை - முல்லேரியா பிரதேச சபையின் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது சபையின் பிரதான அலுவலகத்தில் செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து 2020-10-14ஆம் திகதி மு.ப. 10.15 மணிக்கு அம்முகவரியிலேயே கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
08. எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை கொட்டிகாவத்த - முல்லேரியா பிரதேச சபையினால் நியமிக்கப்படும் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**கொட்டிகாவத்த - முல்லேரியா பிரதேச சபை,**
**கொத்தட்டுவ புதிய நகரம்.**
**2020-09-14**

---

## களனி பல்கலைக்கழகம்

# பதவி வெற்றிடங்கள்

2020 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையும் பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான தகைமையுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்களை களனி பல்கலைக்கழகமானது வரவேற்கின்றது.

**நிரந்தரமான பதவிகள்**

**கணனியாக்கம் மற்றும் தொழில்நுட்பவியல் பீடம்**

**1. பிரயோக கணனியாக்க திணைக்களம்**
- **பொறியியல் கற்கைநெறி**
  விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)/விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதநிலை)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I
- **விஞ்ஞான கற்கைநெறி**
  விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)/விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதநிலை)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I

**2. மென்பொருள் பொறியியல் திணைக்களம்**
- **கணனி பொறியியல் கற்கைநெறி**
  விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)/விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதநிலை)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I

**3. கணனி முறைமைகள் பொறியியல் திணைக்களம்**
- **பொறியியல் கற்கைநெறி**
  விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)/விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதநிலை)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I
- **கணனி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பவியல் கற்கைநெறி**
  விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)/விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதநிலை)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I
- **கணிதம் கற்கைநெறி**
  விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை)/விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதநிலை)/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I

**விண்ணப்பிக்கும் முறைமை:**
மேலேயுள்ள பதவிகளுக்கான விதிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை அலுவலக நேரங்களில் பிரதி பதிவாளர்/கல்விசார் தாபனங்கள் இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் அல்லது **www.news.kln.ac.lk** என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். விண்ணப்பப்படிவங்களை தபால் மூலம் பெற்றுக் கொள்ள விரும்புவோர் 23x10 செ.மீ. என்ற அளவிலான சுயமுகவரியிடப்பட்ட, முத்திரை ஒட்டப்பட்ட உறையொன்றை அனுப்புதல் வேண்டும். 2020 செப்டம்பர் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் உரித்தான சான்றிதழ்களின் பிரதிகளுடனான விண்ணப்பங்கள் பிரதி பதிவாளர்/கல்விசார் தாபனங்கள், களனி பல்கலைக்கழகம், களனி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகள் சமர்ப்பித்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்படாத, தெளிவில்லாத அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவிப் பெயர் சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் விண்ணப்பதாரிகள் அவர்களது நிறுவன தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரிகளின் தெரிவுப் பட்டியலை தயாரிப்பதற்கான உரிமையை பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.

**பதிவாளர்,**
**களனி பல்கலைக்கழகம்,**
**களனி.**
**11.09.2020**

# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

# ஊழியர் வெற்றிடங்கள்

**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது தேசிய சட்டவாக்க தேவை மற்றும் சர்வதேச தரம் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளை (SARPs) உறுதி செய்கின்ற நன்கு நிறுவப்பட்ட ஒழுங்குமுறை கட்டமைப்பு, பாதுகாப்பான செயல்திறன் முறையில் இயங்கும் சுற்றுச் சூழலுக்கு இணக்கமான சிவில் விமானசேவைகள் அமைப்பின் கீழ் மூலோபாய திட்டமிடல், தொழில்முறை வழிகாட்டி மற்றும் கடுமையான கண்காணிப்பை உறுதிப்படுத்துகிறது. பின்வரும் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் தகைமை மற்றும் பரந்த அனுபவம் கொண்ட ஆற்றல்மிக்க ஆர்வம் மற்றும் சுய ஊக்கம் கொண்டவர்களை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை தேடுகின்றது.**

## மேலதிக பணிப்பாளர் நாயகம்

**பதவி குறியீடு HM-2-2-ADG பதவிகளின் எண்ணிக்கை - 01**

**ஊதியம்**

- அடிப்படைச் சம்பளம் - ரூபா 93,020/- ஆட்சேர்ப்பு ஆரம்பத்தில் வழங்கப்படும் (MS சுற்றுநிருபம் 02/2016 இற்கு அமைவாக - சம்பள அளவு - ரூபா 93,020 – 12 x 2,700 – 125,420)
- ஏனைய கொடுப்பனவுகள் - வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு - ரூபா 7,800/- + எரிபொருள் கொடுப்பனவு – 140 லீ. + போக்குவரத்துக் கொடுப்பனவு - ரூபா 50,000/- (சொந்த வாகனம் பயன்படுத்துவதாயின்) + விசேட தொழில்நுட்ப கொடுப்பனவு (CAASL இணையதளத்தை பார்க்கவும்) - ரூபா 280,000/-
- ஏனைய நன்மைகள் - சுகாதார காப்புறுதித் திட்டம், விபத்துக் காப்புறுதித் திட்டம், இறப்பு மானியத் திட்டம், மிகையூதியம், விடுப்புக்கான பணமாக்கல், கைபேசி கட்டண மீளளிப்பு

**தகைமை மற்றும் அனுபவம்**

**வெளிவாரி அபேட்சகர்**

01. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட மூன்று (03) ஆண்டு காலத்திற்கு குறையாததான இளமாணிப் பட்டம் ஒன்று;
    மற்றும்
02. விமான போக்குவரத்துத் துறையில் பட்டப்பின்படிப்பு தகைமை (முதுமாணி) ஒன்று அல்லது விமான போக்குவரத்துக்கு தொடர்புடைய தொழில்முறை பட்டய நிறுவகம் ஒன்றில் இணை அங்கத்துவம் அல்லது விமான போக்குவரத்து பாதுகாப்பு, வான்வழிச் செலுத்துகை சேவைகள், விமானநிலையம், தனிப்பட்ட உரிமம் வழங்கல், விமான செயற்பாடுகள், பறத்தகுதி ஆகிய சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பு மூலம் நடத்தப்பட்ட எட்டு (08) வாரங்களுக்கு குறையாத (முகாமைத்துவ நிலை) கற்கைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
    மற்றும்
03. கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ நிலை ஒன்றில் தனிப்பட்ட உரிமம், விமான செயற்பாடுகள் மற்றும் பறத்தகுதி துறையில் குறைந்தபட்சம் இருபது (20) ஆண்டுகள் சேவை அனுபவம்.

**தொழில் விபரம்: CAASL இணையதளத்தை பார்க்கவும்**

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் (வானூர்தி சார் சேவைகள் ஒழுங்குமுறை)

**பதவி குறியீடு HM-2-1-DDG1 பதவிகளின் எண்ணிக்கை - 01**

**ஊதியம்**

- அடிப்படைச் சம்பளம் - ரூபா 91,645/- ஆட்சேர்ப்பு ஆரம்பத்தில் வழங்கப்படும் (MS சுற்றுநிருபம் 02/2016 இற்கு அமைவாக - சம்பள அளவு - ரூபா 91,645 – 12 x 2,700 – 124,045)
- ஏனைய கொடுப்பனவுகள் - வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு - ரூபா 7,800/- + எரிபொருள் கொடுப்பனவு – 140 லீ. + போக்குவரத்துக் கொடுப்பனவு - ரூபா 50,000/- (சொந்த வாகனம் பயன்படுத்துவதாயின்) + விசேட தொழில்நுட்ப கொடுப்பனவு (CAASL இணையதளத்தை பார்க்கவும்) - ரூபா 285,000/-
- ஏனைய நன்மைகள் - சுகாதார காப்புறுதித் திட்டம், விபத்துக் காப்புறுதித் திட்டம், இறப்பு மானியத் திட்டம், மிகையூதியம், விடுப்புக்கான பணமாக்கல், கைபேசி கட்டண மீளளிப்பு

**தகைமை மற்றும் அனுபவம்**

**வெளிவாரி அபேட்சகர்**

01. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட மூன்று (03) ஆண்டு காலத்திற்கு குறையாததான இளமானிப் பட்டம் ஒன்று;
    மற்றும்
02. விமான போக்குவரத்துத் துறையில் பட்டப்பின்படிப்பு தகைமை (முதுமாணி) ஒன்று அல்லது விமான போக்குவரத்துக்கு தொடர்புடைய தொழில்முறை பட்டய நிறுவகம் ஒன்றில் இணை அங்கத்துவம் அல்லது வான்வழிச் செலுத்துகை சேவைகள் அல்லது வானூர்தி சார் துறைகளில் சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பு மூலம் நடத்தப்பட்ட எட்டு (08) வாரங்களுக்கு குறையாத (முகாமைத்துவ நிலை) கற்கைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
    மற்றும்
03. கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ நிலை ஒன்றில் தனிப்பட்ட உரிமம் வழங்கல், விமான செயற்பாடுகள் மற்றும் பறத்தகுதி துறையில் குறைந்தபட்சம் பதினெட்டு (18) ஆண்டுகள் சேவை அனுபவம்.

**தொழில் விபரம்:** CAASL **இணையதளத்தை பார்க்கவும்**

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விமானப் பாதுகாப்பு ஒழுங்குமுறை)

**பதவி குறியீடு HM-2-1-DDG2 பதவிகளின் எண்ணிக்கை - 01**

**ஊதியம்**

- அடிப்படைச் சம்பளம் - ரூபா 91,645/- ஆட்சேர்ப்பு ஆரம்பத்தில் வழங்கப்படும் (MS சுற்றுநிருபம் 02/2016 இற்கு அமைவாக - சம்பள அளவு - ரூபா 91,645 – 12 x 2,700 – 124,045)
- ஏனைய கொடுப்பனவுகள் - வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு - ரூபா 7,800/- + எரிபொருள் கொடுப்பனவு – 140 லீ. + போக்குவரத்துக் கொடுப்பனவு - ரூபா 50,000/- (சொந்த வாகனம் பயன்படுத்துவதாயின்) + விசேட தொழில்நுட்ப கொடுப்பனவு (CAASL இணையதளத்தை பார்க்கவும்) - ரூபா 285,000/-
- ஏனைய நன்மைகள் - சுகாதார காப்புறுதித் திட்டம், விபத்துக் காப்புறுதித் திட்டம், இறப்பு மானியத் திட்டம், மிகையூதியம், விடுப்புக்கான பணமாக்கல், கைபேசி கட்டண மீளளிப்பு

**தகைமை மற்றும் அனுபவம்**

**வெளிவாரி அபேட்சகர்**

01. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட மூன்று (03) ஆண்டு காலத்திற்கு குறையாததான இளமாணிப் பட்டம் ஒன்று;
    மற்றும்
02. விமான போக்குவரத்துத் துறையில் பட்டப்பின்படிப்பு தகைமை (முதுமாணி) ஒன்று அல்லது விமான போக்குவரத்துக்கு தொடர்புடைய தொழில்முறை பட்டய நிறுவகம் ஒன்றில் இணை அங்கத்துவம் அல்லது தனிப்பட்ட உரிமம் வழங்கல், விமான செயற்பாடுகள், பறத்தகுதி ஆகிய சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பு மூலம் நடத்தப்பட்ட எட்டு (08) வாரங்களுக்கு குறையாத (முகாமைத்துவ நிலை) கற்கைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
    மற்றும்
03. கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ நிலை ஒன்றில் தனிப்பட்ட உரிமம் வழங்கல், விமான செயற்பாடுகள் மற்றும் பறத்தகுதி துறையில் குறைந்தபட்சம் பதினெட்டு (18) ஆண்டுகள் சேவை அனுபவம்.

**தொழில் விபரம்:** CAASL **இணையதளத்தை பார்க்கவும்**

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொது முகாமைத்துவம்)

**பதவி குறியீடு HM-2-1-DDG3 பதவிகளின் எண்ணிக்கை - 01**

**ஊதியம்**

- அடிப்படைச் சம்பளம் - ரூபா 91,645/- ஆட்சேர்ப்பு ஆரம்பத்தில் வழங்கப்படும் (MS சுற்றுநிருபம் 02/2016 இற்கு அமைவாக - சம்பள அளவு - ரூபா 91,645 – 12 x 2,700 – 124,045)
- ஏனைய கொடுப்பனவுகள் - வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு - ரூபா 7,800/- + எரிபொருள் கொடுப்பனவு – 140 லீ. + போக்குவரத்துக் கொடுப்பனவு - ரூபா 50,000/- (சொந்த வாகனம் பயன்படுத்துவதாயின்) + MS சுற்றுநிருபம் 02/2017 இற்கு அமைவாக தொழில்முறை கொடுப்பனவு
- ஏனைய நன்மைகள் - சுகாதார காப்புறுதித் திட்டம், விபத்துக் காப்புறுதித் திட்டம், இறப்பு மானியத் திட்டம், மிகையூதியம், விடுப்புக்கான பணமாக்கல், கைபேசி கட்டண மீளளிப்பு

**தகைமை மற்றும் அனுபவம்**

**வெளிவாரி அபேட்சகர்**

01. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட மூன்று (03) ஆண்டு காலத்திற்கு குறையாததான இளமாணிப் பட்டம் ஒன்று;
    மற்றும்
02. பொருளியல், கணக்கியல், முகாமைத்துவம், வர்த்தகம் அல்லது நிர்வாகம் ஆகிய துறைகளில் பட்டப்பின்படிப்பு (முதுமாணி) அல்லது நிதி முகாமைத்துவம் அல்லது நிர்வாகம் தொடர்பிலான அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவகம் ஒன்றில் இணை அங்கத்துவம்.
    மற்றும்
03. கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ நிலை ஒன்றில் நிதி, முகாமைத்துவம், நிர்வாகம் அல்லது கணக்காய்வுத் துறையில் குறைந்தபட்சம் பதினெட்டு (18) ஆண்டுகள் சேவை அனுபவம்.

**தொழில் விபரம்:** CAASL **இணையதளத்தை பார்க்கவும்**

## பணிப்பாளர் (விமானப் போக்குவரத்து பாதுகாப்பு)

**பதவி குறியீடு HM-1-1-D1 பதவிகளின் எண்ணிக்கை - 01**

**ஊதியம்**

- அடிப்படைச் சம்பளம் - ரூபா 80,295/- ஆட்சேர்ப்பு ஆரம்பத்தில் வழங்கப்படும் (MS சுற்றுநிருபம் 02/2016 இற்கு அமைவாக - சம்பள அளவு - ரூபா 80,295 – 12 x 2,270 – 114,345)
- ஏனைய கொடுப்பனவுகள் - வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு - ரூபா 7,800/- + எரிபொருள் கொடுப்பனவு – 120 லீ. + போக்குவரத்துக் கொடுப்பனவு - ரூபா 50,000/- (சொந்த வாகனம் பயன்படுத்துவதாயின்) + விசேட தொழில்நுட்ப கொடுப்பனவு (CAASL இணையதளத்தை பார்க்கவும்) - ரூபா 185,000/-
- ஏனைய நன்மைகள் - சுகாதார காப்புறுதித் திட்டம், விபத்துக் காப்புறுதித் திட்டம், இறப்பு மானியத் திட்டம், மிகையூதியம், விடுப்புக்கான பணமாக்கல், கைபேசி கட்டண மீளளிப்பு

**தகைமை மற்றும் அனுபவம்**

**வெளிவாரி அபேட்சகர்**

**தெரிவு 1**

01. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட மூன்று (03) ஆண்டு காலத்திற்கு குறையாததான இளமாணிப் பட்டம் ஒன்று;
    உடன்
02. விமான போக்குவரத்துத் துறையில் பட்டப்பின்படிப்பு தகைமை (முதுமாணி) ஒன்று அல்லது விமான போக்குவரத்துக்கு தொடர்புடைய தொழில்முறை பட்டய நிறுவகம் ஒன்றில் இணை அங்கத்துவம் அல்லது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு அல்லது சர்வதேச புகழ்பெற்ற அதனை ஒத்த அமைப்பு மூலம் நடத்தப்பட்ட ஆறு (06) வாரங்களுக்கு குறையாத (முகாமைத்துவ நிலை) கற்கையை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் அல்லது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு மூலம் அங்கீகரிக்கப்பட்ட அதனை ஒத்த தகைமை;
    மற்றும்
03. கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ விமான போக்குவரத்து பாதுகாப்புத் துறையில் குறைந்தபட்சம் பத்து (10) ஆண்டுகள் சேவை அனுபவம்.

**தெரிவு 2**

01. விமான போக்குவரத்துத் துறையில் பட்டப்பின்படிப்பு தகைமை (முதுமாணி) ஒன்று அல்லது விமான போக்குவரத்துக்கு தொடர்புடைய தொழில்முறை பட்டய நிறுவகம் ஒன்றில் இணை அங்கத்துவம் அல்லது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு அல்லது சர்வதேச புகழ்பெற்ற அதனை ஒத்த அமைப்பு மூலம் நடத்தப்பட்ட ஆறு (06) வாரங்களுக்கு குறையாத (முகாமைத்துவ நிலை) கற்கையை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் அல்லது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு மூலம் அங்கீகரிக்கப்பட்ட அதனை ஒத்த தகைமை;
    மற்றும்
02. கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ விமான போக்குவரத்து பாதுகாப்புத் துறையில் குறைந்தபட்சம் பதின்மூன்று (13) ஆண்டுகள் சேவை அனுபவம்.

**தொழில் விபரம்:** CAASL **இணையதளத்தை பார்க்கவும்**

## பணிப்பாளர் (விமானப் பதிவு மற்றும் பறத்தகுதி)

**பதவி குறியீடு HM-1-1-D7 பதவிகளின் எண்ணிக்கை - 01**

**ஊதியம்**

- அடிப்படைச் சம்பளம் - ரூபா 80,295/- ஆட்சேர்ப்பு ஆரம்பத்தில் வழங்கப்படும் (MS சுற்றுநிருபம் 02/2016 இற்கு அமைவாக - சம்பள அளவு - ரூபா 80,295 – 12 x 2,270 – 114,345)
- ஏனைய கொடுப்பனவுகள் - வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு - ரூபா 7,800/- + எரிபொருள் கொடுப்பனவு – 120 லீ. + போக்குவரத்துக் கொடுப்பனவு - ரூபா 50,000/- (சொந்த வாகனம் பயன்படுத்துவதாயின்) + விசேட தொழில்நுட்ப கொடுப்பனவு (CAASL இணையதளத்தை பார்க்கவும்) - ரூபா 305,000/-
- ஏனைய நன்மைகள் - சுகாதார காப்புறுதித் திட்டம், விபத்துக் காப்புறுதித் திட்டம், இறப்பு மானியத் திட்டம், மிகையூதியம், விடுப்புக்கான பணமாக்கல், கைபேசி கட்டண மீளளிப்பு

**தகைமை மற்றும் அனுபவம்**

**வெளிவாரி அபேட்சகர்**

**தெரிவு 1**

01. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட வானூர்திப் பொறியியல் அல்லது இயந்திரப் பொறியியல் துறையில் மூன்று (03) ஆண்டு காலத்திற்கு குறையாததான இளமாணிப் பட்டம் ஒன்று
    உடன்
02. விமான போக்குவரத்துத் துறையில் பட்டப்பின்படிப்பு தகைமை (முதுமாணி) ஒன்று அல்லது விமான போக்குவரத்துக்கு தொடர்புடைய தொழில்முறை பட்டய நிறுவகம் ஒன்றில் இணை அங்கத்துவம் அல்லது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு அல்லது சர்வதேச புகழ்பெற்ற அதனை ஒத்த அமைப்பு மூலம் நடத்தப்பட்ட விமானப் பாதுகாப்பு/பறத்தகுதி பயிற்சி கற்கையில் ஆறு (06) வாரங்களுக்கு குறையாத (முகாமைத்துவ நிலை) கற்கையை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் அல்லது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு மூலம் அங்கீகரிக்கப்பட்ட அதனை ஒத்த தகைமை
    மற்றும்
03. கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் விமானப் பராமரிப்பு பொறியியலாளராக குறைந்தபட்சம் பத்து (10) ஆண்டுகள் அனுபவம்.

**தெரிவு 2**

01. விமான போக்குவரத்துத் துறையில் பட்டப்பின்படிப்பு தகைமை (முதுமாணி) ஒன்று அல்லது விமான போக்குவரத்துக்கு தொடர்புடைய தொழில்முறை பட்டய நிறுவகம் ஒன்றில் இணை அங்கத்துவம் அல்லது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு அல்லது சர்வதேச புகழ்பெற்ற அதனை ஒத்த அமைப்பு மூலம் நடத்தப்பட்ட பறத்தகுதியில் அரசாங்க பாதுகாப்பு பரிசோதகர் உட்பட விமானப் பராமரிப்பு பயிற்சி கற்கை தொடர் ஒன்றில் ஆறு (06) வாரங்களுக்கு குறையாத (முகாமைத்துவ நிலை) கற்கையை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் அல்லது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு மூலம் அங்கீகரிக்கப்பட்ட அதனை ஒத்த தகைமை;
    மற்றும்
02. விமானப் பராமரிப்பு பொறியியலாளராக குறைந்தபட்சம் இருபது (20) ஆண்டுகள் சேவை

**தொழில் விபரம்:** CAASL **இணையதளத்தை பார்க்கவும்**

- அபேட்சகர்கள் 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். இலங்கை விமானப்படை, விமானநிலையம் மற்றும் இலங்கை விமானப் போக்குவரத்து சேவைகள் நிறுவனம் அல்லது விமானப் பயிற்சிக் கல்லூரிகளில் ஏற்கனவே பணியாற்றும் அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.
- CAASL உத்தியோகபூர்வ இணையதளமான www.caa.lk இலிருந்து தொழில் விபரம், சிறப்பு தொழில்நுட்ப கொடுப்பனவுக்கான தேவைகள் தொடர்பிலாக மேலதிக விபரங்களை பெறவும் நிலையான விண்ணப்பப் படிவத்தை தரவிறக்கம் செய்யவும் முடியும்.
- விண்ணப்பிக்கும் பதவி/பதவிகளுக்கான உங்களது தகுதியை நிரூபிப்பதற்கு தகைமைகள் மற்றும் அனுபவம் தொடர்பான ஆவண அத்தாட்சிகளின் பிரதிகளை அனுப்புவதற்கு விண்ணப்பதாரர்கள் கோரப்படுகின்றனர்.
- நிலையான விண்ணப்பப் படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் அனுப்பப்படுவது விரும்பத்தக்கதாகும். எந்த ஒரு அரசாங்க அமைப்பிலேனும் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் அந்த அமைப்பின் தலைவர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.
- முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2020.09.28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இந்த அலுவலகத்திற்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது employment@caa.lk என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் அனுப்ப முடியும் என்பதோடு அந்த மின்னஞ்சல் ஒப்புதல் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.
- சிவில் விமானசேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை, இல. 152/1, மினுவன்கொட வீதி, கட்டுநாயக்க என்ற முகவரிக்கு விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படல் வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு பதவிக்காகவும் வெவ்வேறான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.
- தகுதியான அடிப்படையைக் கொண்ட திருப்திகரமான விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சை/சோதனைக்காக அழைக்கப்படுவர்.

**சிவில் விமானசேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை,**
**இல. 152/1, ராடார் கோபுரத்திற்கு எதிரே,**
**மினுவன்கொட வீதி, கட்டுநாயக்க**
**14.09.2020**

# பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

வர்த்தக அமைச்சு

## பதவி வெற்றிடங்கள்

**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையிலுள்ள பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமான தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

### 01. உதவிப் பணிப்பாளர் பதவி (சட்டம் மற்றும் அமுலாக்கல்) – எம்எம் 1-1 (02 பதவி வெற்றிடங்கள்)

**பதவி விளக்கம்:** பாவனையாளர் முறைப்பாடுகளை கையாளுதல் மற்றும் அவைகளை மாவட்ட மட்டத்தில் ஒருங்கிணைத்தல், சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொள்ளல், நீதிமன்றங்களில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான குற்றங்கள், குற்றப்பத்திரிகைகளை தயாரித்தல். சுதந்திரமாக வழக்குகளை நடாத்துதல் அதிகாரசபையின் சார்பாக ஆஜராதல். போட்டித்திறன்கள் தொடர்பான முறைப்பாடுகளின் விசாரணைகளில் போட்டி ஊக்குவிப்புக்கு துணைபுரிதல். தேவைப்படும் போது ஏனைய ஒழுங்காற்றல் அமைப்புக்களுடன் ஒருங்கிணைந்து. சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையினால் கையொப்பமிட்ட ஒப்பந்தங்களை தயாரித்தல், நிறைவேற்றல் மற்றும்/அமுல்நடாத்தல். அதிகாரசபைக்கெதிராக நீதிமன்றங்களில் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் தேவையான ஆவணங்களை தயாரித்தல் சட்டரீதியான விடயங்களில் அதிகாரசபையின் மாவட்ட அலுவலர்கள் / உரித்தான மாவட்ட செயலாளர்கள் ஆகியோருடன் நெருக்கமான தொடர்பு கொள்ளல், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல் மற்றும் நடாத்துதல் மற்றும் சட்டம் மற்றும் அமுலாக்கலுக்கான பணிப்பாளரினால் வழங்கப்பட்ட வேறேதாவது கடமைகள்.

**தகைமைகள்:**

**வெளியகம்:** சட்டத்தரணியாக இருப்பதுடன் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் வியாபாரம் அல்லது வர்த்தகரீதியிலான சூழலில் பட்டப்பின் தகைமைப் பட்டத்துடன் ஆகக் குறைந்தது 3 வருட சேவை அனுபவம்.

**உள்ளகம்:** பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையில் கனிஷ்ட முகாமையாளர் வகுதியின் (ஜேஎம் 1-1) தரம் 1 இல் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 5 வருட திருப்திகரமான சேவை.

**சம்பள அளவுத் திட்டம்:** 02/2016 என்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் எம்எம் 1-1 2016: 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575 ரூபா.

**வயது:** 30 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

**தொழில்சார் படி:** 02/2016 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் தொழில்சார் படியொன்று வழங்கப்படும்.

### 02. உதவிப் பணிப்பாளர் பதவி (நிருவாகம் மற்றும் மனித வளங்கள்) எம்எம் 1-1-(01 பதவி வெற்றிடம்)

**பணி விளக்கம்:** மனிதவலு திட்டமிடல், ஆட்சேர்ப்புக்கள் மற்றும் ஊழியர்களை தெரிவு செய்தல். ஆகியவற்றில் உதவி வழங்கல், பண்டங்கள் மற்றும் சேவைகளின் அனைத்து பெறுகைகளையும் மேற்பார்வை செய்தல். மனித வளங்கள் கொள்கையை அமுல்நடாத்தலில் உதவி வழங்கல், நிறைவேற்றதிகாரமற்ற ஊழியர்களின் செயற்பாட்டை மீள்நோக்கல், நிறைவேற்றுமதிகாரமற்ற மட்டத்திலுள்ள ஊழியர்களின் ஒழுக்காற்று விடயங்களை கையாளுதல், உதவிப் பணிப்பாளரின் மட்டத்திற்கு கீழேயுள்ள ஆளணியரின் கோவைகளுக்கு பொறுப்பாகவிருத்தல், உத்தியோகபூர்வ போக்குவரத்தை நிருவகித்தல், பிரசுரங்கள், பொருட்பதிவேடு விடயங்கள் மற்றும் களஞ்சியசாலைகள், வரவு, விடுமுறை மற்றும் தாபன விடயங்களை மேற்பார்வை மற்றும் கண்காணித்தல், உரித்தான அரசாங்க சுற்றறிக்கைகளை செயற்படுத்தல், பதவிநிலை அலுவலர்களின் இடமாற்ற திட்டங்களை அமுல்நடாத்தல், மனித வளங்கள் முறைமைகளின் அமுல்நடாத்தலை கண்காணித்தல், பயிற்சி திட்டங்கள் மற்றும் அமுல்நடாத்தலின் பகுப்பாய்வு மற்றும் அபிவிருத்திக்கு தேவையான பயிற்சி, ஊழியர் நன்மைகளின் அமுல்நடாத்தலை கண்காணித்தல், சேவை வழங்குனர்களின் அனைத்து ஒப்பந்தங்களின் அமுல்நடாத்தலை ஒருங்கிணைத்தல், நிருவாகம் மற்றும் மனித வள பணிப்பாளரினால் வழங்கப்பட்ட வேறேதாவது கடமைகள்.

**தகைமைகள்:**

**வெளியகம்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வளங்கள் முகாமைத்துவம், ஆளணியினர் முகாமைத்துவம், வியாபார நிருவாகம் மற்றும் பொது நிருவாகம் ஆகியவற்றில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்றுடன் கூட்டுத்தாபனமொன்றில், சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் மனித வள முகாமைத்துவம் மற்றும் நிருவாகத்தில் ஆகக்குறைந்தது 3 வருட தகைமை அனுபவம்.

**உள்ளகம்:** பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் தரம் 1 இன் கனிஷ்ட முகாமையாளர் வகுதியில் (ஜேஎம் 1-1-) பதவியொன்றில் ஆகக் குறைந்தது 5 வருட திருப்திகரமான சேவை.

**சம்பள அளவுத் திட்டம்:** 02/2016 என்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் எம்எம் 1-1 2016: 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575 ரூபா.

**வயது:** 30 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

**தொழில்சார் படி:** 02/2016 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் தொழில்சார் படியொன்று வழங்கப்படும்.

### 03. உதவிப் பணிப்பாளர் பதவி (பிராந்திய அலுவல்கள்) – எம்எம் 1-1 (06 பதவிகள்)

**பணி விளக்கம்:** மாவட்ட மட்டத்தில் அனைத்து நிகழ்வுகளுக்கும் பொறுப்பாகவிருத்தல், நடவடிக்கை திட்டங்கள் மற்றும் வரவு-செலவு திட்டங்களை தயாரித்தல் மற்றும் கண்காணித்தல், மாவட்ட செயலக அலுவலகங்களின் மாவட்ட செயலாளர் மற்றும் ஏனைய பிரதான அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளல், ஒதுக்கப்பட்ட செயற்பாட்டு இலக்குகளை அடைவதற்காக பணிமனைகளின் அனைத்து அலுவலர்களுடன் ஒருங்கிணைதல், மாவட்ட பணிமனைகளின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக குறைபாடுகளை இனம்கண்டு முன்மொழிவுகளை சமர்ப்பித்தல், முன்னேற்ற அறிக்கைகளை தயாரித்து அவற்றை சமர்ப்பித்தல், வெளிக்கள புலன்விசாரணைகள், திடீர்சோதனைகள் மற்றும் பாவனையாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல் மற்றும் மேற்பார்வையிடல், பாவனையாளர் சங்கங்களின் தாபனங்களை அமைப்பதற்காக ஒருங்கிணைதல், மாவட்ட பணிமனைகள் தொடர்பான தரவு அடிப்படைகளை பேணல், சந்தை நிலபரங்களை திட்டமிடல் மற்றும் மேற்பார்வையிட்டு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

**தகைமைகள்:**

**வெளிக்களம்:** முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், பொருளியல், வர்த்தகம் அல்லது விஞ்ஞானம் ஆகியவற்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்ற பட்டதாரிப் பட்டமொன்றுடன் வியாபாரம் அல்லது வர்த்தகரீதியிலான சூழலில் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்வாய்ந்தவொரு வர்த்தக தாபனமொன்றில் ஆகக் குறைந்தது 3 வருட பட்டப்பின் அனுபவம்.

**உள்ளகம்:** பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் I ஆம் தரத்தில் கனிஷ்ட முகாமையாளர் வகுதியின் (ஜேஎம் 1-1) பதவியொன்றில் ஆகக் குறைந்தது 5 வருட திருப்திகரமான சேவை.

**சம்பள அளவுத் திட்டம்:** 02/2016 என்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் எம்எம் 1-1 2016: 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575 ரூபா.

**வயது:** 30 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

**தொழில்சார் படி:** 02/2016 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் தொழில்சார் படியொன்று வழங்கப்படும்.

### 04. உதவிப் பணிப்பாளர் பதவி (பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல்) எம்எம் 1-1 – (02 பதவி வெற்றிடங்கள்)

**பணி விளக்கம்:** இணைந்த செயற்றிட்டங்கள் தொடர்பாக செயற்பாட்டு திட்டங்கள் மற்றும் வரவு-செலவு திட்டங்களை ஒருங்கிணைத்தல், தயாரித்தல் மற்றும் கண்காணித்தல், பாவனையாளர் உரிமைகள், பொறுப்புக்கள் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் தொடர்பாக பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்தல், வருடாந்த நிகழ்வுகள், பயிற்சிப் பட்டறைகள், கண்காட்சிகள் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் தொடர்பான சந்தைகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்தல், பாவனையாளர் அமைப்புக்களை தாபித்தல், பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தை திட்டமிடல், ஊக்குவித்தல் மற்றும் கண்காணித்தல், செயற்பாட்டு அறிக்கைகள், பல்லூடக அறிக்கைகள்/ வெளியீடுகள் தொடர்பாக தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல். பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல் பணிப்பாளரினால் ஒதுக்கப்படும் வேறேதாவது கடமைகள்.

**தகைமைகள்:**

**வெளியகம்:** முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், பொருளியல், வர்த்தகம் அல்லது விஞ்ஞானம் ஆகியவற்றில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்ற பட்டதாரிப் பட்டத்துடன் வியாபாரம் அல்லது வர்த்தகரீதியிலான சூழலில் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் ஆகக் குறைந்தது 3 வருட பட்டப்பின் அனுபவம்.

**உள்ளகம்:** பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் I ஆம் தரத்தில் கனிஷ்ட முகாமையாளர் வகுதியின் (ஜேஎம் 1-1) பதவியொன்றில் ஆகக் குறைந்தது 5 வருட திருப்திகரமான சேவை.

**சம்பள அளவுத் திட்டம்:** 02/2016 என்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் எம்எம் 1-1 2016: 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575 ரூபா.

**வயது:** 30 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

**தொழில்சார் படி:** 02/2016 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் தொழில்சார் படியொன்று வழங்கப்படும்.

### 05. உதவிப் பணிப்பாளர் பதவி (போட்டி ஊக்குவிப்பு) எம்எம் 1-1-(01 பதவி வெற்றிடம்)

**பணி விளக்கம்:** பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான சந்தை ஆற்றலை பரீட்சித்தல், சந்தை அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யும் வியாபாரிகள் சம்பந்தமாக புலனாய்வு செய்தல் அத்துடன் தேவைப்படும் நேரத்தில் ஆராய்ச்சியை நடாத்தல், போட்டித்திறன்/ நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகள் தொடர்பாக புலன்விசாரணைகளை நடாத்துதல், ஆராய்ச்சி செயற்றிட்டங்களின் திட்டமிடல், நிறைவேற்றல் மற்றும் மதிப்பீடு செய்தல், ஆராய்ச்சி அறிக்கைகளை தயாரித்தல், போட்டித்திறன் செயற்பாடுகளுக்கெதிரான விழிப்புணர்வு திட்டங்களை அமுல்நடாத்தல் மற்றும் வர்த்தக பொறுப்புக்களில் ஆற்றல், போட்டிரீதியான கொள்கையில் தற்போதுள்ள பொருளாதார அலுவல்களில் உலகளாவிய வள புலமையுடன் தொடர்புகளை பேணல், தரவு அடிப்படைகளை பேணல் மற்றும் போட்டி ஊக்குவிப்பு பணிப்பாளரினால் ஒதுக்கப்படும் வேறேதாவது கடமைகள்.

**தகைமைகள்:**

**வெளியகம்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பொருளியல், புள்ளிவிபரம் அல்லது சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று அத்துடன் வியாபாரம் அல்லது வர்த்தகரீதியிலான சுற்றாடல் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் ஆகக் குறைந்தது 3 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**உள்ளகம்:** பணியாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கனிஷ்ட வகுதியின் 1 ஆம் தர பதவியொன்றில் ஆகக் குறைந்தது 5 வருட திருப்திகரமான சேவை.

**சம்பள அளவுத் திட்டம்** 02/2016 என்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் எம்எம் 1-1 2016: 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575 ரூபா.

**வயது:** 30 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

**தொழில்சார் படி:** 02/2016 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் தொழில்சார் படியொன்று வழங்கப்படும்.

### 06. உதவிப் பணிப்பாளர் பதவி (விலைமதிப்பிடல் மற்றும் முகாமைத்துவம்) எம்எம் 1-1 –(01 பதவி வெற்றிடம்)

**பணி விளக்கம்:** பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான விலைகளை மதிப்பிடலில் முகாமைத்துவத்திற்கு உதவி வழங்கல், பண்டங்கள் மற்றும் சேவைகளின் செலவு பகுப்பாய்வு கட்டமைப்புக்களை தயாரித்தல், திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் சேவைகளின் பரீட்சித்தல், செலவு பகுப்பாய்வு சம்பந்தமான மதிப்பீடுகள் மற்றும் விலைகளின் ஒழுங்குமுறை, விலைமதிப்பீடு விசாரணைகளில் உதவி வழங்கல், விலைமதிப்பீடு விதிமுறைகளை காலத்திற்கு காலம் மீள்நோக்கல், சந்தை நிலபரங்களின் தரவு அடிப்படைகளை மேற்பார்த்தல் மற்றும் பேணல், அவசியமான பொருட்களின் சர்வதேச/ உள்ளூர் விலைகள் மற்றும் உற்பத்தி உருமாதிரிகள் ஆகியவற்றின் மேற்பார்வையிடல் மற்றும் பேணல், விலைமதிப்பீடு செய்யும் விடயங்களில் ஏனைய பிரிவுகளுடனான ஒருங்கிணைப்பு, வினைத்திறனுடான கற்கை நெறிகளை திட்டமிடல் மற்றும் நிறைவேற்றல் ஆகியவற்றிற்கு உதவி வழங்கல், சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பரீட்சித்தல் மற்றும் ஆலோசனை குறிப்புக்கள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் விலைமதிப்பிடல் மற்றும் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளரினால் ஒதுக்கப்படும் வேறேதாவது கடமைகள்.

**தகைமைகள்:**

**வெளியகம்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட கணக்கிடல், வர்த்தகம் அல்லது நிதியிடல் முகாமைத்துவம்

**அல்லது**

ICASL, CIMA. ACCA ஆகியவற்றின் இடைநிலை சான்றிதழ். அத்துடன் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்வாய்ந்த தாபனமொன்றில் 3 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**உள்ளகம்:** பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கனிஷ்ட வகுதியின் 1 ஆம் தர பதவியொன்றில் ஆகக் குறைந்தது 5 வருட திருப்திகர சேவை.

**சம்பள அளவுத் திட்டம்** 02/2016 என்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் எம்எம் 1-1 2016: 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – 95,575 ரூபா.

**வயது:** 30 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

**தொழில்சார் படி:** 02/2016 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் தொழில்சார் படியொன்று வழங்கப்படும்.

### 07. முறைமைகள் பாலகர் (II ஆம் தரம்) ஜேஎம் 1-1 – (01 பதவி வெற்றிடம்)

**பணிவிளக்கம்:** பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் தகவல் முறைமைகள் முகாமைத்துவத்திற்கு பொறுப்பாகவிருத்தல், தொழில்நுட்பவியல் தகவல் தொடர்பான அனைத்து விடயங்களையும் கையாளுதல் மற்றும் பணிப்பாளரினால் ஒதுக்கப்பட்ட வேறேதாவது கடமைகள்.

**தகைமைகள்:**

**வெளியகம்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தகவல் தொழில்நுட்பவியலில் பெறப்பட்ட பட்டதாரிப் பட்டமொன்று

**அத்துடன்**

கூட்டுத்தாபனமொன்றில், சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் Systems/IT Administrator/Officer அல்லது நிகரான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 6 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**உள்ளகம்:** MA 5-2 என்ற வகுதியில் ஊக்கப்படுத்தல்/செயற்படுத்தல் பிரிவில் ஆகக்குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** 02/2016 என்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் ஜேஎம் 1-1 2016: 42,600 – 10 x 755 – 18 x 1,135 – 70,580 ரூபா.

**வயது:** 22 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். மேல் வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு பிரயோகிக்கப்பட மாட்டாது.

### 08. தரவு ஒருங்கிணைப்பாளர் பதவி (தரம் II) – எம்ஏ 5-2- (01 பதவி வெற்றிடம்)

**பணி விளக்கம்:** தரவுகளை பதிவேற்றம் செய்தல், அதனை மேற்பார்வை செய்தல் மற்றும் அடிப்படை தரவுகளை பதிவேற்றல் சரியான தகவல்களின் அடிப்படையில் அறிக்கைகளை தயாரித்து வைத்தல் மற்றும் உரிய தகவல்களை ஒழுங்காக, முறையாக பதிவேற்றி அதனை மேற்கொள்ளல் மேலும் இந்த தரவுகள் சம்பந்தமாக பணிப்பாளரினால் வேண்டப்படும் ஏனைய விடயங்களை செய்தல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தகவல் தொழில்நுட்பவியல்/ தகவல் முறைமை அல்லது கணனி செயற்பாடு ஆகியவற்றில் பெறப்பட்ட பட்டமொன்று.

**மேலதிக தகைமைகள்:** உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட பட்டப் பின் படிப்பு டிப்ளோமா மேலதிக தகைமையாக கருதப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்:** 02/2016 என்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் எம்ஏ 5-2 2016 36,850 – 10x755 – 15x930 – 5x1,135 – 64,025 ரூபா.

**வயது:** 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

**பொதுவான நிபந்தனைகள்:**

**ஏனைய படிகள்:** அரசாங்கத்தின் சுற்றறிக்கைகளின் பிரகாரம், சம்பளத்திற்கு மேலதிகமாக, வாழ்க்கை செலவு படி, தொழில்சார் படி மற்றும் உரித்தான வேறேதாவது படிகளும் வழங்கப்படும்.

**நியமனத்தின் தன்மை:** நிரந்தனமானதும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிற்கான தகுதியும் அரசாங்கத்தின் உரித்தான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைவானது.

**ஆட்சேர்ப்பின்போது சம்பளம்:** வெளியகத்திலிருந்து ஆட்சேர்க்கப்படும் நபர்கள் சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்ப படிநிலையில் அமர்த்தப்படுவார்கள். உள்ளகத்திலிருந்து ஆட்சேர்க்கப்படும் விண்ணப்பதாரிகளின் சம்பளமானது தாபனக் கோவையின் VII ஆம் அதிகாரத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**உறுதிப்படுத்தல்:** நியமிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் மூன்று வருட தகுதி காண்நிலை காலப்பகுதிக்கு உட்படுத்தப்படுவார்கள். அவரது (ஆண்/பெண்) தகுதிகாண்நிலை காலப்பகுதியில் செயற்பாடு மற்றும் நடத்தை திருப்திகரமாக இருந்தால் அவர் உரித்தான பதவியில் உறுதிப்படுத்தப்படுவார். உள்ளகத்திலிருந்து தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பதவியொன்றில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் ஒரு வருட காலப் பகுதிக்கான பதில் கடமையாற்றும் பதவியில் அமர்த்தப்படுவார்கள்

**ஆட்சேர்ப்பு நடைமுறை:** பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் நியமனம் செய்யும் அதிகாரிகளின் குழுமமொன்றினால் நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும்.

**ஏனையவை:**

1) இலங்கை பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
2) நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு ஆயத்தமாகவிருத்தல் வேண்டும்.
3) பதவியின் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கான உடல் மற்றும் உளரீதியான தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
4) சிறந்த குணவியல்புகளை கொண்டிருத்தல் வேண்டும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட 14 தினங்களுள் (2020.09.28 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக) பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்துடன் தகைமைகளை உறுதிப்படுத்தவதற்காக அதன் சான்றிதழ்களின் பிரதிகளையும் அனுப்புதல் வேண்டும். அரசுத் துறைகளின் ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவன தலைமைகளூடாகவே அனுப்பப்படல் வேண்டும். மேலேயுள்ள தேவைப்படுத்தல்களுக்கு ஒத்திசையாத விண்ணப்பங்கள், சரியாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் இறுதி திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஆதரவு தேடல் தகைமையை இழப்பதற்கான வழியை வகுக்கும். விண்ணப்பத்தை அனுப்பும் போது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடல் வேண்டும். உங்களின் விண்ணப்பத்தை தயவு செய்து பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை,**
**2ஆம் மாடி, CWE செயலக கட்டிடம்,**
**இல. 27, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு-02.**




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 செப்டெம்பர் மாதம் 14ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.